DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999 e-mail: raj.p@rogers.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1353
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday March 11, 2022

# கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திற்கு உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்க இரண்டு கோடி ரூபாய்கள் வழங்கிய மொன்றியால் வர்த்தகர் AMR இராஜகோபால்



"முத்தையா இராஜேஸ்வரி" ஞாபகார்த்த உள்ளக விளையாட்டு அரங்கு என்ற பெயரில் தனது தாயாரின் நினைவாக யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திற்கு உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்க இரண்டு கோடி ரூபாய்கள் வழங்கிய மொன்றியால் வர்த்தகப் பெருமகன் AMR ஏ.எம்.ஆர் முத்தையா இராஜகோபால் அவர்கள் அதனை தனது துணைவியார் சகிதம் அதனை திறந்து வைத்த பிரமாண்டமான நிகழ்வு கடந்த 06-03-2022 அன்று மாலை 6.00 மணிக்கு கல்வியங்காட்டில் சிறப்பாக நடைபெற்றது.

*(தொடர்ச்சி உள்ளே 11ம் பக்கத்தில்)*

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
ignite
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ஸ்காபுறோவில் Taste of Madurai
உணவகத்தின் திறப்பு விழா SPECIAL
மதுரை கில்லிப் பரோட்டா – 2 $ 9.99 மட்டுமே
Taste Of Madurai
மேலதிக விபரங்களுக்கு 416-332-8000
2ம் பக்கம் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
North York, Scarborough & Brampton.
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

## என்றுமே மாறாத மதுரைச் சுவையுடன் உணவு படைக்கின்றோம்




# Taste of MADURAI

Taste Of Madurai

Telephone: (416) 332-8000

திறப்பு விழாவையொட்டி விசேட விலைகளில்
சைவ, அசைவ உணவுகளைப் ஆடர் செய்து வாங்கிச் செல்லுங்கள்



## திறப்பு விழா ஸ்பெஷல்

Madurai Killi Parotta (2 Pcs) $9.99

மேலும், நாவுக்கு விருந்தாகும் பல வகை உணவுகள்: தோசை வகைகள், பரோட்டா வகைகள்
அத்துடன் மதுரைச் சாப்பாடு பல கறிகளுடன், சூப் வகைகள், இன்னும் பல...

AVAILABLE DOORDASH Uber Eats SKIP THE DISHES




3500 McNicoll Ave. Unit-7
Scarborough, ON
(Markham / McNicoll)

Telephone: (416) 332-8000

Email: mahendran1980@hotmail.com


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்

Jeya 647-669-2739

### Basement Rent

ஸ்காபுறோவில் Brimley & Finch சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் Walkout Basement வாடகைக்கு உள்ளது. 1 Bedroom 1 Parking ஆகியன உண்டு. ஏப்ரல் மாதம் 1ம் திகதி தொடக்கம் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு அழைக்க வேண்டியவர்:

பாலா: 647-449-7709

# CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*



Our secure online application is easy to complete, just go to gopal@driveautogroup.ca Or call Gopal Pillai at: (647) 763-0210

brimell

### ATSIN LAW சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Trainee Dental Assistant Wanted

Looking for a Trainee Dental Assistant.
Requirements:-
Science, Math, Computer Skill, Communication skill.
Team player, Fast learner.
Training will be given to the right Candidate.
Please forward resume to
cydentalcare@gmail.com

### Part-Time Medical Receptionist Wanted

Part-time Medical Receptionist wanted for a Medical Clinic in Scarborough., 15-20hrs/ week. Candidate must be fluent in English and Tamil. Must be proficient in computer skills. Duties include answering phone calls, preparing paperwork, scanning documents, etc. Wages Negotiable.
Please send resume to:
vahishan@gmail.com

### Basement for Rent

Newly renovated BASEMENT
4 ROOMS + 2 washroom
Pharmacy and Eglington (MAIN INTERSECTION)
Call 647-808-9022 / 416-302-9022

---

1 ROOM Private room
Basement available
( Warden and Lawrence)
647-808-9022

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் எரிபொருள் பெறுவதற்காக வீதிகளில் காலத்தைக் கழிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள மக்கள்

இலங்கையில் தற்போது நிலவும் சீரகுலைந்த அரச நிர்வாகம் இயந்திரம் அங்கு பொதுமக்களை சொல்லொன்னா துயரங்களுக்கும் நேர விரயத்திற்கும் உள்ளாக்கி நிற்க. செல்வந்தர்களும் அரசியல்வாதிகளும் உயர் நிர்வாக அதிகாரிகளும் தங்கள் பொருளாதார பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி நிம்மதியாக இருக்கையில் அங்கு தொடர்ச்சியாக நிலவும் பொருளாதார நெருக்கடியால் தினமும் எந்தப் பொருளிற்கான வரிசைக்கு செல்வது என்பதே மக்களின் முன் உள்ள மிகப்பெரும் கேள்வியாகவுள்ளது என்ற செய்திகளும் விமர்சனங்களும் எழுந்த வண்ணம் உள்ளன.

எமது பத்தி எழுத்தாளர் சிவா பரமேஸ்வரன் அவர்கள் இவ்வார இதழில் வடித்துள்ள கட்டுரைகள் மக்கள் வடிக்கும் கண்ணீரை விட சூடாக உள்ளதை நாம் உணர்கின்றோம். இந்த அவல நிலைக்குக் காரணம் யார் என்று எவர் கேட்டு நின்றாலும் திறமையற்ற ஆட்சியாளர்களின் மடமைத்தனம் மற்றும் தகுந்த திட்டமிடல் அற்ற நிர்வாகம் ஆகியன காரணமாக விளங்குகின்றன என்பதை அரச அதிகாரிகள் பலர்வெளிப்படையாகச் சொல்லுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நீண்டநாள் இடைவெளியின் பின்னர் எரிவாயு நேற்று வியாழன் காலை கொண்டு வரப்பட்டதனால் அதனைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

வைத்தியசாலை வீதி கொட்டடியில் அமைந்துள்ள எரிவாயுக் களஞ்சியத்திற்கு நேற்று மாலை எரிவாயு எடுத்து வரப்பட்டதனை அவதானித்த மக்கள் இன்று அதிகாலை முதலே தவமிருந்தனர்.

இந்த நிலமையில் எடுத்து வரப்பட்ட எரிவாயு சிலிண்டரினை விற்பனை முகவர் குடாநாட்டின் எந்தப் பாகத்தில் உள்ள வர்த்தக நிலையத்திற்கும் கொண்டு செல்ல முடியாது. ஏனெனில் நகரின் மத்தியில் களஞ்சியம் இருப்பதனால் நகரின் மத்தியில் உள்ள மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கான எரிவாயுகூட கிடைக்காத நிலமையில் எவ்வாறு மாவட்டத்தின் ஏனைய பகுதிக்கு கொண்டு செல்வது என்று கேள்வி எழுப்புகிறார்.

இதேநேரம் களஞ்சியத்திற்கு கொண்டு வரப்பட்ட எரிவாயுவின் எண்ணிக்கையை விட வரிசையில் வெற்று சிலிண்டருடன் காத்திருக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளதும் விநியோகிப்பதற்கு விநியோக நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகினர்.

இந்த நிலைமை தொடர்பில் யாழ்ப்பாண குடாநாட்டின் எரிவாயு விநியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு உதயன் சார்பில் கேட்ட கேட்டபோது,

"ஒரு பார ஊர்தியில் 600 சிலிண்டரை மட்டுமே எடுத்துவர முடியும். இவ்வாறு 600 சிலிண்டரை ஏற்றிய 7 பார ஊர்திகளில் சிலிண்டர்கள் எடுத்து வரப்பட்டாலே குடாநாட்டிற்கு போதிய விநியோகத்தை மேற்கொள்ளலாம். ஆனால் கடந்த மூன்று மாதமாக 3 அல்லது 4 பார ஊர்தி எரிவாயுவே கிடைத்தபோதும் கடந்த 8 தினங்களாக ஒரு லோட்கூட கிடைக்கவில்லை. இன்று 3 பார ஊர்தி மட்டும் கிடைக்கும் நிலமையில் எவ்வாறு விநியோகிப்பது என்பதே பெரும் நெருக்கடியை எதிர்நோக்கவேண்டியுள்ளது".

இதனால் வைத்தியசாலைகள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், உணவகங்களிற்கான எரிவாயுவைக்கூட எம்மால் விநியோகம் செய்ய முடியாத நிலமையிலேயே காணப்படுகின்றது என அவர் மேலும் பதிலளித்தனர்.

குடாநாட்டிற்கான எரிவாயு தேவையோ மலையளவில் இருக்க எடுத்து வரப்பட்டதோ கடுகளவு என்ற நிலமையில் எரிவாயுவினைப் பெற மக்கள் கிலோ மீட்டர் நீளத்தில் முண்டியடிக்கின்றனர்.

வைத்தியசாலை வீதி கொட்டடியில் அமைந்துள்ள எரிவாயுக் களஞ்சியத்திற்கு நேற்றுமாலை எரிவாயு எடுத்து வரப்பட்டதனை அவதானித்த மக்கள் இன்று அதிகாலை முதலே நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இவ்வாறு காத்திருந்த ஆணைக்கோட்டையை சேர்ந்த 39 வயதான கி.ஞானதேவி எமது உதயன் செய்தியாளரிடம் கருத்து தெரிவிக்கையில்,

"எமது வீட்டில் எரிவாயு தீர்ந்து இன்று 5 நாட்கள் ஆகிவிட்டன. இருந்தபோதும் கிடைத்த விறகினைக் கொண்டு மதிய உணவும் இரவில் பாணும. உணவாக கொண்டபோதும் சிறுவர்களை சமாளிக்க முடியவில்லை. இதனால் எரிவாயு வந்துள்ளதாக அறிந்து முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தி வந்து வரிசையில் காத்திருக்கின்றேன்" என்றார்.

இதேபோன்று யாழ்ப்பாணம் நல்லூரடியை சேர்ந்த 57 வயதான த.பாலராசன் "எரிவாயு தீர்ந்த நான்கு நாட்களும் அடுப்பு மூட்டமுடியவில்லை வீடும் ஒரு பரப்புக் காணியில்தான் உள்ளது அதனால் விறகும் இல்லை. கடையில் உணவு வாங்கச் சென்றால் பல கடைகள் மூடியுள்ளது. இந்த நாட்டில் என்ன நடக்கின்றது என்பதனை அரச கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மேல் மட்டங்களிற்கு கொண்டு செல்வதில்லையா என்ற சந்தேகமும் உள்ளது" என்றார். யாழ் நகரின் மத்தியில் களஞ்சியம் இருப்பதனால் நகரின் மத்தியில் உள்ள மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கான எரிவாயுகூட கிடைக்காத நிலமையில் எவ்வாறு மாவட்டத்தின் ஏனைய பகுதிக்கு கொண்டு செல்ல முடியும் என்பதனால் குடாநாட்டின் புறநகர்ப் பகுதி மக்கள் செய்வதறியாது தின்றுகின்றனர்.

# நுண்ணுயிர் கொல்லி பெனிசிலினை கண்டுபிடித்த, அலெக்ஸாண்டர் ஃபிளெமிங் நினைவு தினம் இன்று (மார்ச் 11, 1955)

சர் அலெக்ஸாண்டர் ∴பிளெமிங் **(Sir Alexander Fleming)** ஆகஸ்ட் 6, 1881 ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்தவர். அவரது இளமைக்கல்வி இயற்கையெழில் சூழ்ந்த மலைப்பகுதியில் அமைந்தது. அங்குதான் இயற்கையை ரசிக்கவும், எதையும் கூர்ந்து நோக்கி அறியவும் அவர் பயிற்சி பெற்றார். பின்னாளில் அவர் பெனிஸிலின் என்ற அற்புத மருந்தைக் கண்டுபிடிக்க இப்பயிற்சியே உதவி செய்தது. தொழில் நுட்ப கல்லூரி படிப்பை முடித்தபிறகு 16 வயதிலேயே கப்பல் நிறுவனம் ஒன்றில் அவர் அலுவலராகச் சேர்ந்தார். எழுத்தர் பணி அவருக்கு மனநிறைவை அளிக்கவில்லை. தூரத்து உறவினர் ஒருவரிடமிருந்து கிடைத்த சொத்து, அவர் மிகத் தாமதமாக தனது 20 வயதில் மருத்துவக் கல்லூரியில் சேர வழி செய்தது. மிக இளம் வயதிலேயே தந்தையை இழந்த இவர், வாழ்க்கையில் பல துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. தூய மேரி மருத்துவப்பள்ளியில் படிக்கும்போதே மிகச் சிறந்த மாணவராக பிளெமிங் திகழ்ந்தார். மருத்துவப் படிப்பின் பல்வேறு பிரிவுகளிலும் தன் அறிவுக்கூர்மையை வெளிப்படுத்திப் பல பரிசுகளை வென்ற பெருமை அவருக்குண்டு. மருத்துவப் பட்டம் பெற்ற பின்னர் அல்ம்ரோத் ரைட் **(Almroth Wright)** என்ற நுண்ணுயிரியல் ஆசிரியரிடம் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார்.

பிளெமிங் எப்போதும் புத்தகப்புழுவாக மட்டுமே இருந்ததில்லை. மருத்துவம் தவிர்த்த பல்வேறு துறைகளிலும் அவருக்குப் பெரும் ஈடுபாடு இருந்தது. நீச்சலிலும், போலோ விளையாட்டிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். தனது ஆசிரியர் ரைட் அவர்களின் வழிகாட்டுதலில், டைபாய்டு காய்ச்சலுக்கான தடுப்பூசி போடும் முறையை பிளெமிங் கண்டுபிடித்தார். இதற்குச் சற்று முன்னர்தான் லூயி பாஸ்டர் கால்நடை களுக்கான தடுப்பூசி போடும் முறையை அறிமுகப்படுத்தி இருந்தார். இந்நிலையில் நோய்த் தடுப்பாற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு கிளர்ச்சியுறாத நச்சுயிரிகளைத் **(inactivated virus)** தடுப்பூசி வழியே செலுத்துவதற்கு ரைட் அவர்கள் முயற்சி செய்தார். ரைட் அவர்களின் மாணவரான பிளெமிங், குருதியின் வெள்ளை அணுக்களில் ஆய்வு மேற்கொண்டார். இவ்வெள்ளை அணுக்கள் நோய் விளைவிக்கும் நுண்ணுயிரிகளை எதிர்க்கும் திறன் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. உலகம் அறிந்துள்ள மருத்துவ முன்னேற்றங்களுள் பெனிசிலின் கண்டுபிடிப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. பெனிசிலின் காலத்திற்கு முன் பிரசவத்தில் பெண்கள் இறப்பதும், பிறந்தபின் குழந்தைகள் இறப்பதும் சர்வ சாதாரணம். லேசான சிராய்ப்புகளும் கீறல்களும் கூட மரணத்திற்கு இட்டுச் சென்றன.

ஒரு நுண்ணுயிரை வைத்து இன்னொன்றைக் கொல்லமுடிகிற பெனிஸிலின் போன்ற நச்சுமுறி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் பல நோய்களிலிருந்து மனிதர்களைக் காப்பாற்ற முடிந்தது. பெனிசிலினைக் கண்டு பிடித்து நவீன நச்சுமுறி மருந்துகள் யுகத்தைத் தொடங்கிவைத்த பெருமைக்குரிய விஞ்ஞானிதான் அலெக்ஸாண்டர் ∴ப்பெளமிங். பெனிசிலின் உலகெங்கிலும் உள்ள 20 கோடி மக்களின் உயிரைக் காப்பாற்றியுள்ளது என்கிறது ஒரு மதிப்பீடு. நான்கு ஆண்டுகள் நடந்த முதல் உலகப்போரில் ரைட் குழுவினரின் தடுப்பூசி மட்டும் பயன்படுத்தப்பட்டிரா விட்டால், ஆயிரக்கணக்கானோர் டை∴பாய்டு காய்ச்சலுக்கு பலியாகியிருப்பார்கள். போரில் காயமடைந்த வீரர்களுக்கு கார்பாலிக் அமிலம், போரிக் அமிலம், ஹைட்ரஜன் பெராக்ஸைட் போன்ற நச்சுமுறி மருந்துகளையே அக்காலத்தில் பயன்படுத்தி வந்தனர். இந்த மருந்துகள் சிகிச்சைக்கு உதவாததோடு, இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை அழித்து மேலும் பலர் இறப்பதற்கே வழிவகுத்தன என்று ∴ப்ளெமிங்க் நிரூபித்தார். குறைபாடற்ற நச்சுமுறி மருந்தைக் கண்டுபிடிப்பதில் அவர் கவனம் திரும்பியது. நுண்ணுயிர் கொல்லியான பெனிசிலினை பெனிசிலியம் நொடேடம் **(Penicillium notatum)** என்ற பூஞ்சையிலிருந்து பிரித்தெடுத்தார்.

பல்வேறு வகை நுண்ணுயிர்களை தட்டுகளில் வளர்த்து அவற்றின் இயக்கங்களை அவர் ஆராயத் தொடங்கினார். தனது மூக்கிலிருந்து ஒழுகிய நீரிலிருந்தே ஓரிரு சொட்டுகள் எடுத்து பாக்டீரியாக்கள் அடங்கிய தட்டில் வைத்து வளர்த்தபோது, சளித்திரவத்தைச் சுற்றியிருந்த பாக்டீரியாக்கள் மட்டும் அழிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். இதேபோல் கண்ணீர், உமிழ் நீர், சீழ் போன்ற உடலில் சுரக்கும் பல திரவங்களை எடுத்து ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார். இந்த திரவங்கள் அனைத்திற்கும் நோய்க்கிருமிகளை வளராது தடுக்கும் ஆற்றல் இருப்பதைக் கண்டார். இயற்கையிலேயே அமைந்த இந்த நச்சு முறிபொருளுக்கு 'லைசோசைம்' எனப் பெயரிட்டார். 1928ஆம் ஆண்டில் நுண்ணுயிர்கள் வளர்க்கப்பட்ட ஒரு தட்டை நோக்கிய போது, லைசோசைம் அதுவரை செய்திராத ஒரு செயலை காளான் செய்திருந்ததைத் தற்செயலாகக் கண்டார். கொப்புளங்கள், கட்டிகள், மூக்கு, தொண்டை, தோல் இவற்றில் ஏற்படும் தொற்றுநோய்களை வரவழைக்கும் ஸ்டாபைலொகாக்கி எனப்படும் கிருமிகளை காளான் அழித்திருந்தது. அது மட்டுமல்ல, அந்தக் காளானின் சாரம் வெள்ளை அணுக்களை அழிக்கவில்லை என்றும், வேறு திசுக்களைப் பாதிக்கவில்லை என்றும் சோதித்துத் தெரிந்து கொண்டார்.

காளானில் பரவிய அப்பொருளுக்கு 'பெனிசிலின்' எனப் பெயரிட்டார் ∴ப்ளெமிங். ஆனால் பெனிசிலினைப் பெரிய அளவில் அப்போது உற்பத்தி செய்ய இயலவில்லை. ஹோவர்டு ∴ப்ளோரே, எர்னஸ்ட் செயின் ஆகியோர் அடங்கிய ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகக் குழுவினர் 14 ஆண்டுகள் கழித்து அதைச் சாதித்தனர். பெனிசிலின் ஒவ்வாமை உடையவர்களுக்கு வேறு பாதுகாப்பான நச்சுக்கொல்லி மருந்துகளைக் கண்டுபிடிப்பதிலும் அக்குழுவினர் வெற்றியடைந்தனர். 1945ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் ∴ப்ளெமிங், ஹோவர்டு ∴ப்ளோரே, எர்னஸ்ட் செயின் ஆகிய மூவருக்கும் மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆறாம் ஜோர்ஜ் மன்னரால் 1944 ஆம் ஆண்டில் நைட் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1999 ஆம் ஆண்டில் டைம் சஞ்சிகையால் வெளியிடப்பட்ட இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப்பட்டார். 2000 ஆம் ஆண்டு நிறைவுறும் தறுவாயில் சுவீடனிலிருந்து வெளிவரும் பிரசித்திபெற்ற மூன்று சஞ்சிகைகள் பென்சிலினை கடந்த ஆயிரமாண்டு காலத்தின் சிறந்த கண்டுபிடிப்பாக அறிவித்தன.

2002 ஆம் ஆண்டில் பிபிசியால் மக்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரித்தானியாவின் முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப்பட்டார். அலெக்சாண்டர் பிளெமிங்கின் ஞாபகார்த்தமாக சிறுகோள் படையிலுள்ள ஒரு சிறுகோளுக்கு 91006 பிளெமிங் எனப் பெயரிடப்பட்டது. நுண்ணுயிர் கொல்லியான பெனிசிலினை கண்டுபிடித்த, நோபல் பரிசு பெற்ற அலெக்ஸாண்டர் ∴பிளெமிங் மார்ச் 11, 1955ல் தனது 73வது அகவையில் லண்டன், இங்கிலாந்தில் இவ்வுலகை விட்டு பிரிந்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் எரிபொருள் நிலையங்களில் தொடர்ச்சியாக டீசலுக்கு தட்டுப்பாடு — நீண்ட வரிசையில் காத்திருக்கும் வாகனங்கள்

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிபொருள் நிலையங்களில் டீசல் இன்மையால் தனியார் பேருந்து உரிமையாளர்கள், டிப்பர் சாரதிகள் உட்பட பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கையிருப்பானது மிகவும் குறைவான நிலையில் காணப்படுவதுடன் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில்





எரிபொருள் இல்லாமல் காணப்படுகிறது. இதன் காரணமாக டிப்பர் வாகனங்கள் மற்றும் மீன் ஏற்றுமதி வாகனங்கள் எரி-பொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட நேரம் வரிசையில் காணப்படுகின்றது.



டீசல் இன்மையால் தூர இடங்களுக்கு செல்லும் தனியார் பேருந்துகள், சாரதிகள் பாரிய சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். அதே நேரம் பல இடங்களில் டீசல் பதுக்கல் இடம் பெறுவதுடன் தொடர்ச்சியாக டீசல் பற்றாக்குறை நிலவும் என்பதால் வாகன உரிமையாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரல்,கான் களுடனும் டீசலுக்கு காத்திருக்கின்றனர்.

- மன்னார் நிருபர்

# மன்னார் நகர பகுதியில் சில வர்த்தக நிலையங்களில் அதி கூடிய விலைக்கு பொருட்கள் விற்பனை



மன்னார் பஜார் பகுதி மற்றும் மன்னார் நகர பகுதிகளில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையை மீறி அதி கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நகர பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் சில பொருள்களில் குறிக்கப்பட்டுள்ள விலைக்கு மேலதிகமாக பணம் அறவிடப்படுவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கோதுமை மா, மிளகாய்த்தூள் உள்ளிட்ட சில அத்தியாவசிய பொருட்கள் பல இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதி கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் முட்டை ஒன்று 27 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதி-கார சபையினர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை மன்னார் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் விலை கட்டுப்பாட்டு அதிகாரிகள் கடந்த வாரம் தலைமன்னார் பியர், பேசாலை, சிலாபத்துறை, முருங்கன் மற்றும் பண்டிவிரிச்சான் ஆகிய கிராமங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் முன்னெடுத்த திடீர் பரிசோதனையின் போது 12 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர்கள் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை காட்சி படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு பொருட்களை விற்றமை, காலா-வதியான உணவுப் பொருட்களை விற்ற மை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக குறித்த 12 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

உலக செய்திகள்
World News

# ரஷ்யாவை ஓட ஓட விரட்ட தயார் என தாய்நாடு திரும்பிய 66,000 உக்ரைன் ஆண்கள் சபதம்



ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிரான போரில் கலந்து கொள்வதற்காக ஐரோப்பா முழுவதிலுமிருந்து 66,224 உக்ரேனிய ஆண்கள் தாய்நாடு திரும்பியுள்ளனர். ரஷ்யா தொடர்ந்து 10-வது நாளாக உக்ரைனில் தாக்குதல் நடத்திவரும் நிலையில், லட்சக்கணக்கான பொதுமக்கள் ரஷ்ய குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் போலந்து, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி மற்றும் ருமேனியா ஆகிய அண்டை நாடுகளுக்கு வெளியேறி வருகின்றனர்.

ஆனால், அதற்கு நேர்மாறான விடயங்களும் உக்ரைனில் நடந்துவருகிறது. உக்ரைன் எல்லைகளில் போக்குவரத்து நெரிசல் இருந்துகொண்டே இருக்கிறது. ஏனெ-னில் போரிலிருந்து தப்பிக்க சென்ற சில உக்ரேனியர்கள் இப்போது வீடு திரும்புகிறார்கள். ரஷ்ய தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதற்காக 66,224 உக்ரேனிய ஆண்கள் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியுள்ளதாக உக்ரேனிய பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்ஸ ி ரெஸ்னிகோவ் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இந்த எண்ணிக்கை, இன்னும் 12 போர் மற்றும் உந்துதல் கொண்ட படைப்பிரிவுகள் என்று கூறிய ஒலெக்ஸி "உக்ரேனியர்களே, நம்மை யாராலும் வெல்லமுடியாது" என கூறி-னார்.

# மாற்றுத்திறனாளிகளை பாதுகாப்பதாக அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை




சர்வதேச சாசனத்தில் கையொப்பமிட்டு 15 வருடங்களுக்கு மேலாகியும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரங்களின்படி, இலங்கையின் சனத்தொகையில் 8.7 வீதமானவர்கள் ஏதோவொரு வகையான ஊனமுற்றவர்களாக உள்ளனர். அவர்களில் 57% ஆண்கள் மற்றும் 43% பெண்கள்.

2007 ஆம் ஆண்டில், இலங்கை உட்பட உலகெங்கிலும் உள்ள 160 நாடுகள் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஊனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஊனமுற்ற குடிமக்களை சமமாக நடத்துவோம் என்ற வாக்குறுதி இன்று வரை நிறைவேற்றப்படவில்லை என மாற்றுத்திறனாளி சமூகம் கவலை தெரிவிக்கிறது.

"எங்கள் கோரிக்கைகள் மற்றும் தேவைகள் உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2009, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் உச்ச நீதிமன்றம் தொடர்ந்து தீர்ப்பளித்துள்ளது. 1996ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டம், வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் பார்வையற்றோர் மற்றும் பிற மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் உரிமைகள் மற்ற குடிமக்களைப் போலவே இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்த போதிலும், இதுவரை நடைமுறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை," என மாற்றுத்திறனாளிகளுக்கான கொழும்பு கூட்டமைப்பின் தலைவர் டிக்கிரி குமார ஜயவர்தன கூறியுள்ளார்.

"துரதிர்ஷ்டவசமாக, குறைந்தபட்சம் நமது தலைநகரங்களில், சக்கர நாற்காலிகள் செல்லக்கூடிய பாதைகள் இல்லை. புதிய கட்டிடங்கள் கட்டப்படுகின்றன, ஆனால் சக்கர நாற்காலியில் செல்லக்கூடிய கழிப்பறை இல்லை. வைத்தியசாலைக்குச் சென்று தங்கி சிகிச்சை பெற வழியில்லை. பேருந்தில் பயணிக்க முடியாது. அதிகாரிகளும், சமூகமும் உணர்திறன் இல்லாததால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி-றோம்."



மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கையெழுத்திட்டு பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும், இலங்கையில் இது இன்னும் சட்டமாக மாறாததால் கவலையடைந்த மாற்றுத்திறனாளி அமைப்புகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1ஆம் திகதி இடம்பெறும், சக்கர நாற்காலி தினத்தை நினைவுகூர்ந்து மார்ச் 2ஆம் திகதி அனுஷ்டித்து, தமது கோரிக்கைகளை உள்ளடக்கிய கடிதத்தை, ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைப்பதோடு, மாத்தறை, கொழும்பு, குருநாகல், மொனராகலை, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச அதிகாரிகளிடமும் இது கையளிக்கப்படுகிறது.

போரினால் அங்கவீனர்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கில் உள்ள எந்த மாவட்டமும் "சக்கர நடைப்பயணம்" வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

"பல வருடங்களாக எங்களின் அடிப்படைத் தேவையாக காணப்படும் ஒரு இடத்திற்குச் செல்வதற்கான வசதியை மீண்டும் அரசுக்கு நினைவூட்ட வேண்டியதாயிற்று. சக்கர நாற்காலியில் மட்டுப்படுத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் பல ஆண்டுகளாக பல்வேறு குறைபாடுகள் உள்ளவர்களிடமிருந்து பல கோரிக்கைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன."

கண்டி உரிமைகள் அமைப்பின் தலைவி நிஷா ஷெரீப் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்ட செயலாளர்களின் பங்களிப்புடன் மார்ச் 25ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள சமூக சேவை உத்தியோகத்தர்களின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் தொடர்பான பிரேரணையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மாவட்ட செயலாளர் ஊனமுற்றோர் அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கனடிய செய்திகள்
Canadian News

# வீட்டுபராமரிப்பு, பொதுவான — இலாப நோக்கற்ற அமைப்பிற்கு மாறல் போன்றவற்றை சீர்படுத்தும் வாக்கெடுப்பிற்கு வலியுறுத்தும் ஒன்றாரியோ என்டிபி கட்சி



விசேட தேவையுடையோரும் வீடுகளில் நீண்ட காலம் வாழ வழிசெய்யும் வகையில், ஆண்ட்ரியா ஹோர்வர்த் அவர்கள் தலைமை தாங்கும் ஒன்றாரியோ மாகாணத்தின் அதிகார பூர்வ எதிர்கட்சியான என்டிபி கட்சி கடந்த திங்கட்கிழமை சட்டமன்றத்தில் ஒன்றாரியோவின் சீர்குலைந்த வீட்டு பராமரிப்பு முறைமையை சரிசெய்யும் திட்டத்திற்கான வாக்கெடுப்பை மாகாணப் பாராளுமன்றத்தில் வலியுறுத்தவுள்ளது.

என் டி பி தலைவர் ஹோர்வத் அவர்கள் ஸ்காபரோவில் உள்ள தமிழ் ஊடகநிறுவனங்களை சந்தித்து, பதிவு முதலீடுகள், பணியாளர்களை நியமித்தல், முழு அமைப்பையும் பொதுவான - இலாப நோக்கற்றதாக மாற்றுவது அடங்கலான இந்த பிரேரணையை பற்றிவிவாதித்தார். இதன்போது அவருடன் ஸ்கார்பரோ தென்மேற்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் (MPP) டோலி பேகம் மற்றும்ஸ்காபரோ மத்திய தொகுதிக்கான ஒன்டாரியோ NDP வேட்பாளர் நீதன் ஷான் ஆகியோர் இணைந்திருந்தனர்.

"வீடுஎன்பது நமது அன்புக்குரியவர்கள் இருக்க மிகவும்ஆரோக்கியமான, மகிழ்ச்சியான இடம். அவர்கள் தங்கள் சொந்த வீட்டில் சுதந்திரமாகவும் முடிந்தவரை பாதுகாப்பாகவும் இருப்பதற்கு தகுதியானவர்கள்," என்று ஹோர்வத் கூறியுள்ளார்.

"ஆனால் அது நடக்கவில்லை, காரணம் வீட்டு பராமரிப்பு முறைமை சீர்குலைந்துள்ளது. லிபரல்களாலும் கன்சர்வேட்டிவ்களாலும் நீண்ட காலமாக செய்யப்பட்டுவரும் செலவுக் குறைப்புகளும் தனியார்மயமாக்கலும், வீட்டு பராமரிப்பு முறையை மருத்துவர்கள் கோரினால் கூட, மக்கள் நிராகரிக்குபடியானஒரு கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளன. வீட்டு பராமரிப்பு பணியாளர்கள் மிகுந்த வேலைப்பழுவுடன் இருப்பதால், அவசரமான அல்லது இரத்து செய்யப்பட்ட வீட்டு பராமரிப்பு வருகைகளோடு சமாளித்துப் போக வேண்டிய நிலைமக்களுக்கு ஏற்படுகிறது. சீர்குலைந்த வீட்டு பராமரிப்பு முறை முதியவர்களை கைவிட்டுள்ளதால், துரதிர்ஷ்டவசமாக நீண்ட கால பராமரிப்பு நிலையங்களிலோ மருத்துவமனைகளிலோ சிலரின் வாழ்நாள் முடிந்துவிடுகிறது. இது நாம் விரும்பும்மக்களின் வாழ்க்கைத் தரத்தை பாதிக்கிறது. ஆனால் நாம் அதை சரிசெய்யமுடியும்."

முந்தையலிபரல் மற்றும் கன்சர்வேட்டிவ் அரசாங்கங்களால் வீட்டுப் பராமரிப்பு பெரும்பாலும் தனியார்மயமாக்கப்பட்டது - இது, பராமரிப்பு மற்றும்ஒழுங்கான பணியாளர் நிலைகளில் இருந்து பணத்தை பாரிய நிறுவனங்களின் பைகளுக்கு திருப்பும் ஒரு திட்டம் என ஹேீ கூறுகிறது. பெருந்தொற்றுக் காலம் பராமரிப்பு முறையில் பாரிய சிதைவுகளை ஏற்படுத்தியுள்ளது. குறைந்த ஊதியம் பெற்ற, அதிக வேலைப்பளுவுள்ள, பெரும்பாலும்மோசமாக பாதுகாக்கப்பட்ட ஊழியர்கள் வெளியேறினர் - எனவே, செவிலியர்களுக்கான வெற்றிடம் 26 வீதத்தையும் முழுநேர தனிப்பட்ட ஆதரவு பணியாளர்களுக்கான வெற்றிடம் 14 வீதத்தையும் எட்டியது.

ஒன்டாரியோவின் வீட்டு பராமரிப்பு முறையை மேலும் தனியார்மயமாக்கியதன் மூலமும் மக்களுக்கான பராமரிப்பு திட்டங்களை உருவாக்க தனியார் நிறுவனங்களை அனுமதித்ததன் மூலமும் பிரதமர் டக் ஃபோர்ட் அதனைமோசமாக்கினார்.

"முதியோர்களைவெளியேற்றுவதற்கு பதிலாக, நமது வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதுமான ஒரு பராமரிப்பை கற்பனைசெய்து பாருங்கள். உங்கள் பெற்றோரும் பெற்றோரின் பெற்றோரும் சௌ-கரியமாகவும் அன்பாகவும் நீண்டகாலம் வீட்டில் இருக்கக்கூடியதொரு பராமரிப்பினை கற்பனை செய்து பாருங்கள். இந்த மாற்றத்திற்கு காத்திருப்புதேவையில்லை. அதனால் தான் இன்று நான்அதை முன்மொழிகிறேன் - நிதியுதவி, பணியாளர்கள் பிரச்சினை மற்றும் தனியார்மயமாக்கப்பட்ட வீட்டு பராமரிப்பு முறையினை பொதுவான இலாப நோக்கற்ற திட்டமாகமாற்றுவதன் மூலம் அதனை சீர்செய்வோம்".

"வீட்டுபராமரிப்பு, தனிப்பட்ட ஆதரவு பணியாளர்களுக்கான வருமான உயர்வு - முழு நேர பணிகள், முழு அமைப்பையும் பொதுவான மற்றும் இலாபநோக்கற்றதாக மாற்றுதல் போன்றவற்றுக்காக 1 பில்லியன் டொலர் முதலீடு அடங்கலாக, வயதான ஒன்டாரியர்களுக்கான செயற்தளத்தை ஹோர்வத் வெளியிட்டுள்ளார். ஹோர்வத் திங்கட்கிழமை வாக்கெடுப்பொன்றை வலியுறுத்தும் பிரேரணை தற்போது அதன் பணியை ஆரம்பித்துவிட்டது." என்று என் டி பி தலைவர் ஹோர்வத் அவர்கள் தெரிவித்துள்ளார்

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் – நானாட்டான் பகுதியில் அரச பேருந்தில் முதியவரிடம் இருந்து பணத்தை பறித்துச் சென்ற நபர் இளைஞர்களால் மடக்கிப் பிடிப்பு

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி திங்கட்கிழமை (7) இரவு சென்ற அரச பேருந்தில் பயணம் செய்த முதியவரிடம் இருந்து சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்தை நானாட்டான் பஸ் தரிப்பு நிலையத்தில் பயணிகள் ஏறுவதற்காக நிறுத்திய போது பறித்துச் சென்ற இளைஞர் ஒருவரை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

குறித்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், வவுனியா மெனிக்பாம் பகுதியில் வசிக்கும் முதியவர் ஒருவர் மன்னார் எழுத்தூர் பகுதியில் வசிக்கும் அவருடைய மகளிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொண்டு கொழும்பு பேருந்து மூலம் வவுனியாவுக்கு செல்வதற்காக மன்னாரிலிருந்து குறித்த பேருந்தில் பயணித்துள்ளார்.



அதே நேரம் குறித்த பேருந்தில் திருகோணமலையைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் முதியவரின் அருகிலிருந்து பயணித்துள்ளார்.

மன்னாரில் குறித்த பேருந்து நானாட்டான் பிரதேச பஸ் தரிப்பு நிலையத்தை சென்றடைந்து பயணிகளை ஏற்றுவதற்காக பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்திய போது குறித்த முதியவர் வைத்திருந்த பணத்தை குறித்த இளைஞர் பறித்துக் கொண்டு பஸ்ஸில் இருந்து பாய்ந்து ஓடியுள்ளார்.



இந்த நிலையில் முதியவரின் கூச்சலை கண்ட அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் குறித்த திருடனை துரத்தி சென்று பணத்தோடு மடக்கி பிடித்தனர்.

உடனடியாக முருங்கன் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த முருங்கன் பொலிஸாரிடம் பணத்தை திருடிய இளைஞரை இளைஞர்கள் ஒப்படைத்துள்ளனர்.

உடனடியாக குறித்த இளைஞரையும், முதியவரையும் மேலதிக விசாரணைக்காக பொலிஸார் முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# தேசிய கால்பந்தாட்ட அணி வீரர் டக்ஸன் பியூஸ்லஸின் உடல் பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீரோடு நல்லடக்கம்



மாலைதீவில் கடந்த மாதம் 26 திகதி மரணமடைந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் திங்கட்கிழமை (7) மாலை 5 மணியளவில் மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மாலைதீவில் கடந்த மாதம் 26 திகதி மரணமடைந்த மன்னார் பனங்கட்டு கொட்டு கிராமத்தைச் சேர்ந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடன் கடந்த 3ஆம் திகதி நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு அன்றைய தினம் பூதவுடல் அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினரிடம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது. இந்த நிலையில் பூதவுடல் மனைவியிடம் ஒப்படைக்கப்பட நிலையில் உடல் யாழ்ப்பாணத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு பூதவுடல் எடுத்து





வரப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. திங்கட்கிழமை (7) அன்று மதியம் 1 மணியளவில் இறுதி அஞ்சலி நிகழ்வு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்றது.

இதன் போது மதத்தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள், விளையாட்டுக்கழக வீரர்கள், தேசிய கால்பந்தாட்ட அணி பிரதி-நிதிகள், இளைஞர் கழக அங்கத்தவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் என பல ஆயிரக்கணக்கானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் மாலை 2.45 மணி அளவில் அன்னாரது இல்லத்தில் இருந்து பூதவுடல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பூதவுடல் ஊர்வலமாக மன்னார் பொது சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 5 மணியளவில் பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீருடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி நல்லடக்கத்தையொட்டி திங்கட்கிழமை (7) மன்னார் பஜார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு துக்க நாள் அனுஸ்ரித்தமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# கிளிநொச்சி இரணைமடு அம்பாள் நகர் பகுதியில் விபத்தில் இளைஞன் ஒருவர் பலி



கிளிநொச்சி இரணைமடு அம்பாள் நகர் பகுதியில் விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார். குறித்த சம்பவம் இரணைமடு வீதியில் அம்பாள் நகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (06) மாலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இரணைமடு பகுதியில் இருந்து A9 வீதி நோக்கி பயணித்த ஐஸ்கிரீம் வியாபார ஊர்தியுடன் எதிரே பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி திருவையாறு பகுதியை சேர்ந்த பத்மநாதன் சஞ்ஜீவன் எனும் 29 வயதுடையவர் உயிரிழந்துள்ளார். இவர் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிபவர் என விசாரணைக-ளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரிணைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.



# சுதந்திர கிண்ண கால்பந்தாட்ட போட்டியின் வெற்றியை பியூஸுக்கு அர்ப்பணித்த வடமாகாண வீரர்கள்

இலங்கையின் மாகாணங்களை உள்ளடக்கி இடம் பெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான சுதந்திர கிண்ண கால் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இறுதி போட்டி சனிக்கிழமை (5) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிலையில் வடமாகாண அணியினர் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுதந்திர கிண்ணத்தை கைப்பற்றினர்.

குறித்த வெற்றியை மரணமடைந்த தேசிய உதைபந்தாட்ட அணி வீர-ரும் மன்னார் மாவட்ட வீரருமான டக்சன் பியூஸ்லஸ்க்கு அர்பணிக்கும் முகமாக போட்டியில் கலந்து கொண்ட அனைத்து வீரர்களும் ஞாயிற்றுக்கிழமை (6) வருகை தந்து டக்சன் பியூஸ்லஸ்ஸின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் வெற்றியையும் அர்ப்பணித்தனர்.

சுதந்திர கிண்ண போட்டியின் இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ள முதல் குறித்த போட்டியின் வெற்றி பியூஸ ிற்காக அர்ப்பணிக்கப்படும் என்று வீரர்கள் தெரிவித்திருந்த நிலையில் வெற்றியின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (6) பயிற்றுவிப்பாளர்கள், அணித்தலைவர் உட்பட வட மா-காண கால்பந்தாட்ட அணியினர் தமது வெற்றியை மனப்பூர்வமாக அர்பணித்துள்ளார்.

- மன்னார் நிருபர்





# மன்னாரில் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையுடன் இணைந்து மன்னார் தாராபுரம் பிரதான வீதியில் வைத்து சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருளுடன் ஞாயிற்றுக்கிழமை (6) மதியம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவ-ரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து சுடார் 1 கோடி ரூபாய் பெறுமதியான ஒரு கிலோ ஐஸ் போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபரும், கைப்பற்றப்பட்ட ஐஸ் ரக போதை பொருளும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

- மன்னார் நிருபர்

# யாழ்ப்பாணத்தில் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்க நிகழ்வில் கனடா மனிதநேயக்குரல் அமைப்பின் பிரதிநிதிகள்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்க நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (06) அன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு ரெறொன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பினால் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ரெறொன்ரோவின் மனித நேயக் குரலின் தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஜங்கரநேசன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பா.பாலகணேசன், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் மு.கனகலிங்கம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**



















A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

இலங்கைச் சுற்றுலா



2022 வைகாசி மாதம் முதலாவது கிழமை.
இலங்கையில் உள்ள முதல் தரமான சுற்றுலா தளங்கள், கோவில்கள், தேவாலயங்கள், புத்த விகாரைகள், (மசூதி) மொஸ்க் இவற்றில் நீங்கள் விரும்பும் இடங்களுக்கும், உங்கள் உறவினர்கள் வீடுகளுக்கும் கூட்டிச்செல்லப்படும்.

| 1 STAR ★ | 2 STAR ★★ | 3 STAR ★★★ | 4 STAR ★★★★ |
|---|---|---|---|
| 1 கிழமை ¼ மாதம் | 2 கிழமை ½ மாதம் | 3 கிழமை ¾ மாதம் | 4 கிழமை 1 மாதம் |
| REGULAR C$2,500 | REGULAR C$3,000 | REGULAR C$3,500 | REGULAR C$4,000 |
| SALE PRICE C$ 2,000.00 | SALE PRICE C$ 2,500.00 | SALE PRICE C$ 3,000.00 | SALE PRICE C$ 3,500.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு, இந்த விலை.

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.
a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
விமான சீட்டு | தங்குமிட வசதி | விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை
காலை உணவு | மதிய உணவு | இரவு உணவு | மது பானம் | குளிர்பானம் | சுடுபானம்

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு – தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிப்பு



"நாளைய நிலை பேறுக்கான இன்றைய பால்நிலை சமத்துவம்" எனும் கருப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (8) அன்று காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மகளிர் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், மன்னார் மாவட்ட குடி சார் அமைப்புகளின் சம்மேளனம் ஆகியவை ஒன்றிணைந்து சர்வதேச மகளிர் தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது நிகழ்வுகள் இடம் பெற்றதோடு மாவட்டத்தின் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



இதன் போது பெண்கள் அமைப்பின் பிரதி நிதிகள், மாதர், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**









# இலங்கையின் கேகாலை மாவட்டம் தெஹியோவிட்ட பூனுகல தமிழ் வித்தியாலயத்தில் திறன் பலகை வகுப்பறை

UK ரட்னம் பவுன்டேஷன் மற்றும் வன்னி ஹோப் ஆஸ்திரேலியா நிறுவனத்தின் அனுசரணையுடன் திறன் பலகை வகுப்பறைத் திறப்புவிழா 26/02/2022 அன்று இலங்கையின் சப்ரகமுவ மாகாணம் கேகாலை மாவட்டம் தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்கு உட்பட்ட கே/தெஹி பூனுகல தமிழ் வித்தியாலயத்தில் மிக பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது.

இப்பாடசாலயானது மிகவும் பின்தங்கிய தோட்டப் புறங்களில் வறுமை கோட்டின் கீழ் காணப்படும் மாணவர்கள் கல்வி பயிலும் ஒரு பாடசாலையாக காணப்படுகிறது.

அதிபர் திரு. K ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொண்டு நிறுவனங்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இப்பாடசாலை தலைமை ஆசிரியரின் உரையில் நவீன திறன் வகுப்பறைகளை அன்பளிப்புச் செய்தவர்களுக்கு நன்றி பாராட்டி , காலத்திற்கேற்ப சிறந்த தொழிநுட்ப வசதிகளுடன் இந்த வகுப்பறை விளங்குவதாகவும் இதனூடாக எதிர்காலத்தில் மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த முடியும் என உறுதி மொழி கூறினார்.




தொடர்ந்து விஷேட அதிதி சப்ரகமுவ மாகாண கல்வி உதவி பணிப்பாளர் திருமதி மனோகரன் அவர்கள் மலையக மாணவர்கள் கல்வி துறையில் மிகவும் பின்தங்கியுள்ள தாகவும் அதனை நிவர்த்தி செய்ய இது போன்ற திறன் வகுப்புகள் அத்தியாவசியம் எனவும், திறன் வகுப்பிற்கான பயற்சிகளை தன்னுடைய தலைமையின் கீழ் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

தொடர்ந்து வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக விளக்கமளித்தார்.







# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வு



மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) அனுசரணையில் மன்னார் மாவட்ட பெண்கள் விழிப்புணர்வு சங்கத்தின் ஏற்பாட்டில் "நிலைபேறான எதிர்காலத்திற்காக இன்றே பால்நிலை சமத்துவத்திற்காக போராடுவோம்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு வியாழக்கிழமை (10) காலை 10 மணி அளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் மற்றும் சிறப்பு விருந்தினராக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறடோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தின் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலகங்களின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணி திருமதி. புராதனி, பிரதேச ரீதியாக செயல்படும் பெண்கள் குழுவினரும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.







மன்னார் மாவட்டத்தில் பெண்கள் எதிர் நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சனைகள் மற்றும் குடும்ப அடக்கு முறைகள் தொடர்பாகவும் அதில் இருந்து எவ்வாறு மீள்வது தொடர்பாகவும் தற்சார்பு பொருளாதாரத்தை கட்டி எழுப்பி ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டி எழுப்புவது தொடர்பாகவும் வருகை தந்த விருந்தினர்களால் சிறப்புரையாற்ற பட்டதோடு,சிறுவர்கள் மற்றும் பெண்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**






இந்தியா செய்திகள்
India News

# ஜெ.மரணத்திற்கு காரணம் தொடர்ந்து ஏற்பட்ட உடல் நலக்குறைவுதான் என்கிறார் டிடிவி.தினகரன்



இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 07/03/2022 மீண்டும் ஆறுமுகசாமி விசாரணை ஆணையம் ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணையைத் தொடங்கியது. சம்மன் அனுப்பப்பட்ட நிலையில் அப்பல்லோ மருத்துவர்கள் இன்று குறுக்கு விசாரணைக்கு ஆஜராகினர். அப்பல்லோ மருத்துவர்களிடம் சசிகலா தரப்பு வழக்கறிஞர் ராஜாசெந்தூர பாண்டியன் குறுக்கு விசாரணை செய்தார். விசாரணையில் மருத்துவர்கள் பரிந்துரைந்தும் ஜெயலலிதா ஓய்வெடுக்க மறுத்ததாக அப்பல்லோ மருத்துவர் பாபு மனோகர் தெரிவித்துள்ளார். 2016 ஆம் ஆண்டு பதவியேற்பதற்கு முன்பே அவருக்கு தலைச்சுற்றல், மயக்கம் இருந்ததாகவும், சில மருந்துகளை பரிந்துரைத்ததோடு, உடற்பயிற்சிக்கும் பரிந்துரைத்ததாக மருத்துவர் பாபு மனோகர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த டிடிவி தினகரன், "எங்கள் கட்சியில் உள்ள அத்தனைப்பேருக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும். தொடர்ந்து ஏற்பட்ட உடல்நலக்குறைவால் ஜெயலலிதா இறந்துவிட்டார் என்பதுதான் உண்மை. அரசியல் ரீதியாக தேவையில்லாமல் எங்கள் சித்தி மீது பழியைப்போட்டு எதோ பண்ணிப்பார்த்தார்கள். ஆனால் மக்கள் வரிப்பணம்தான் வீணாகிறது" என்றார்.



# உக்ரைன் விவகாரம் குறித்து இந்திய பிரதமர் மோடி ஆலோசனை

உக்ரைன் விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனை நடைபெற உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ரஷியா-உக்ரைன் இடையே நடைபெற்று வரும் போர் தீவிரமடைந்து வருகின்றது. உக்ரைனில் ரஷியப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில் அங்குள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்றவதற்கான முயற்சிகள் நடந்து வருகிறது.

இந்நிலையில் உக்ரைனில் உள்ள இந்தியர்களை மீட்பதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்துவது தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனை நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். முன்னதாக இதுவரை 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் உக்ரைனிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தம்பி பேறறிவாளனுக்குப் பிணை — கால்நூற்றாண்டு சட்டப்போராட்டத்தின் மைல் கல் என்கிறார் சீமான்



**தம்பி பேரறிவாளனுக்குப் பிணை - கால்நூற்றாண்டு சட்டப்போராட்டத்தின் முக்கிய மைல் கல்! - நாம் தமிழர் கட்சிசீமான் வரவேற்பு**

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கொடுஞ்சிறைவாசம் அனுபவித்து வரும் என்னுயிர் தம்பி பேரறிவாளன் அவர்களுக்கு உச்ச நீதிமன்றத்தில் பிணை வழங்கப்பட்டுள்ள செய்தியறிந்தேன். நீதியரசர் நாகேஷ்வர்ராவ் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கியுள்ள முதன்மைத்துவம் வாய்ந்த இம்முடிவை வரவேற்கிறேன்! வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கினை முன்னின்று நடத்திய மூத்த வழக்கறிஞர் மதிப்பிற்குரிய கோபால் சங்கரநாராயணன் அவர்களுக்கும், எனது அன்புத் தம்பிகள் வழக்கறிஞர்கள் பாரிவேந்தன், பிரபு இராமசுப்பிரமணியன் அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வழக்கின் விசாரணை வளையம் முழுமையாக விரிவடையாத நிலையில், நேர்மையாக விசாரணை இதுவரை நடத்தப்படாதச்சூழலில், செய்யாதக் குற்றத்திற்காக முப்பது ஆண்டுகாலத்தைச் சிறைக்கொட்டடிக்குள்ளேயே கழித்த தம்பி பேரறிவாளனுக்குத் தற்போது பிணை கிடைத்திருப்பது பெரும் ஆறுதலைத் தருகிறது. கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக நடந்தேறியச் சட்டப்போராட்டத்தில் உச்ச நீதிமன்றத்தின் இவ்வுத்தரவு மிக முக்கியமானதொரு மைல் கல்லாகும். தற்போது கிடைக்கப்பெற்றிருக்கிற பிணை எனும் தற்காலிகத்தீர்விலிருந்து விடுதலை என்பதனை நோக்கி நகர்த்திச்செல்வதே முழுமையான மகிழ்ச்சியைத் தரும் நல்லறிவிப்பாகும். அதனை சாத்தியப்படுத்த தம்பி பேரறிவாளனுக்கு முழுமையாகத் துணைநிற்க வேண்டுமென தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# எங்கும் வரிசை, எதற்கும் வரிசை–அல்லாடும் மக்கள்

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் தினமும் எந்தப் பொருளிற்கான வரிசைக்கு செல்வது என்பதே மக்களின் முன் உள்ள மிகப்பெரும் கேள்வியாகவுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்தில் நீண்டநாள் இடைவெளியின் பின்னர் எரிவாயு வியாழன் (10) காலை அன்று கொண்டு வரப்பட்டதனால் அதனைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

வைத்தியசாலை வீதி கொட்டடியில் அமைந்துள்ள எரிவாயுக் களஞ்சியத்திற்கு நேற்று மாலை எரிவாயு எடுத்து வரப்பட்டதனை அவதானித்த மக்கள் இன்று அதிகாலை முதலே தவமிருந்தனர்.

இந்த நிலமையில் எடுத்து வரப்பட்ட எரிவாயு சிலிண்டரினை விற்பனை முகவர் குடாநாட்டின் எந்தப் பாகத்தில் உள்ள வர்த்தக நிலையத்திற்கும் கொண்டு செல்ல முடியாது. ஏனெனில் நகரின் மத்தியில் களஞ்சியம் இருப்பதனால் நகரின் மத்தியில் உள்ள மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கான எரிவாயுகூட கிடைக்காத நிலமையில் எவ்வாறு மாவட்டத்தின் ஏனைய பகுதிக்கு கொண்டு செல்வது என்று கேள்வி எழுப்புகிறார்.

இதேநேரம் களஞ்சியத்திற்கு கொண்டு வரப்பட்ட எரிவாயுவின் எண்ணிக்கையை விட வரிசையில் வெற்று சிலிண்டருடன் காத்திருக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளதும் விநியோகிப்பதற்கு விநியோக நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகினர்.

இந்த நிலைமை தொடர்பில் யாழ்ப்பாண குடாநாட்டின் எரிவாயு விநியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு உதயன் சார்பில் கேட்ட கேட்டபோது, "ஒரு பார ஊர்தியில் 600 சிலிண்டரை மட்டுமே எடுத்துவர முடியும். இவ்வாறு 600 சிலிண்டரை ஏற்றிய 7 பார ஊர்திகளில் சிலிண்டர்கள் எடுத்து வரப்பட்டாலே குடாநாட்டிற்கு போதிய விநியோகத்தை மேற்கொள்ளலாம். ஆனால் கடந்த மூன்று மாதமாக 3 அல்லது 4 பார ஊர்தி எரிவாயுவே கிடைத்தபோதும் கடந்த 8 தினங்களாக ஒரு லோட்கூட கிடைக்கவில்லை. இன்று 3 பார ஊர்தி மட்டும் கிடைக்கும் நிலமையில் எவ்வாறு விநியோகிப்பது என்பதே பெரும் நெருக்கடியை எதிர்நோக்கவேண்டியுள்ளது".

இதனால் வைத்தியசாலைகள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், உணவகங்களிற்கான எரிவாயுவைக்கூட எம்மால் விநியோகம் செய்ய முடியாத நிலமையிலேயே காணப்படுகின்றது என அவர் மேலும் பதிலளித்தனர்.

குடாநாட்டிற்கான எரிவாயு தேவையோ மலையளவில் இருக்க எடுத்து வரப்பட்டதோ கடுகளவு என்ற நிலமையில் எரிவாயுவினைப் பெற மக்கள் கிலோ மீட்டர் நீளத்தில் முண்டியடிக்கின்றனர்.

வைத்தியசாலை வீதி கொட்டடியில் அமைந்துள்ள எரிவாயுக் களஞ்சியத்திற்கு நேற்றுமாலை எரிவாயு எடுத்து வரப்பட்டதனை அவதானித்த மக்கள் இன்று அதிகாலை முதலே நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இவ்வாறு காத்திருந்த ஆணைக்கோட்டையை சேர்ந்த 39 வயதான கி.ஞானதேவி உதயனிடம் கருத்து தெரிவிக்கையில், "எமது வீட்டில் எரிவாயு தீர்ந்து இன்று 5 நாட்கள் ஆகிவிட்டன. இருந்தபோதும் கிடைத்த விறகினைக் கொண்டு மதிய உணவும் இரவில் பாணும். உணவாக கொண்டபோதும் சிறுவர்களை சமாளிக்க முடியவில்லை. இதனால் எரிவாயு வந்துள்ளதாக அறிந்து முச்சக்கர



வண்டியை வாடகைக்கு அமர்த்தி வந்து வரிசையில் காத்திருக்கின்றேன்" என்றார்.


இதேபோன்று யாழ்ப்பாணம் நல்லூரடியை சேர்ந்த 57 வயதான த.பாலராசன் "எரிவாயு தீர்ந்த நான்கு நாட்களும் அடுப்பு மூட்டமுடியவில்லை வீடும் ஒரு பரப்புக் காணியில்தான் உள்ளது அதனால் விறகும் இல்லை. கடையில் உணவு வாங்கச் சென்றால் பல கடைகள் மூடியுள்ளது. இந்த நாட்டில் என்ன நடக்கின்றது என்பதனை அரச கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மேல் மட்டங்களிற்கு கொண்டு செல்வதில்லையா என்ற சந்தேகமும் உள்ளது" என்றார்.

யாழ் நகரின் மத்தியில் களஞ்சியம் இருப்பதனால் நகரின் மத்தியில் உள்ள மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கான எரிவாயுகூட கிடைக்காத நிலமையில் எவ்வாறு மாவட்டத்தின் ஏனைய பகுதிக்கு கொண்டு செல்ல முடியும் என்பதனால் குடாநாட்டின் புறநகர்ப் பகுதி மக்கள் செய்வதறியாது தின்றுகின்றனர்.

இவ்வாறு மக்களும் விநியோகஸ்தர்களிற்கும் இடையில் இழுபறி நீடித்தாலும் இந்த விநியோகமும் எத்தனை நாட்களிற்கு நீடிக்கும் அல்லது எப்போது தடைப்படும், அடுத்த கப்பல் வருமா என்பதும் தெரியாமல் நிற்கும. மக்கள் முன்பாக உரிய பதிலை வழங்க எவரும் இல்லை. ஏனெனில் அடுத்த கப்பலிற்கு கட்டுவதற்கான டொலர் எப்போது கிடைக்கும் என்பதில்தான் இதற்கான பதில் உள்ளது.

இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே குடாநாட்டின் அவலம் நீடிக்கும்போது ஏற்கனவே பல லட்சம் ரூபாவிற்கு வெற்று எரிவாயு சிலிண்டர்களை முற்பணம் செலுத்தி கொள்வனவு செய்து காத்திருக்கும் நிலமையில் அதற்கான முதல் முடங்கி உள்ளது. ஆனால் எமக்கான விற்பனைக்கான பொருள் கிட்டாது விநியோகஸ்தர் ஊடாகவே நுகர்வோருக்கு வழங்கப்படுகின்றது என்கின்றனர் வர்த்தகர்கள்.

# ஜெனீவா 2022 - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஒரு விடயம் உண்டு. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளை திரட்டும் ஒரு பொறிமுறை உருவாக்கப்படும் என்பதே அது. அப்பொறிமுறையானது மியான்மரில் சிரியாவிலும் அமைக்கப்பட்ட பொறிமுறைகள் போன்று இல்லை என்ற குற்றச்சாட்டு உண்டு.

மேலும் கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகள் இணைந்து ஐநாவுக்கு வரைந்த ஒரு கடிதத்தில் கேட்டிருந்தது போன்ற ஒரு பொறிமுறை அதுவல்ல என்றும் ஒரு குற்றச்சாட்டும் உண்டு. எனினும் அப்பொறிமுறையானது சான்றுகளை திரட்டுவதற்கான ஒரு கட்டமைப்பாக இயங்கும் என்று கூறப்பட்டது. கூட்டமைப்பு அதை ஒரு முக்கிய அடைவாகக் காட்டியது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்த ஐநா கூட்டத் தொடரில் தனது வாய்மூல அறிக்கையில் மனித உரிமைகள் ஆணையாளர் மேற்படி பொறிமுறையானது கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து செயல்பட தொடங்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அப்பொறிமுறையானது எவ்வாறு கட்டமைக்கப்படும் என்பது தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் சரியான விளக்கம் இருக்கவில்லை. அப்பொறிமுறை தொடர்பாக தெளிவற்ற தகவல்களே கடந்த ஓராண்டு முழுவதும் உலவி வருகின்றன. அது ஒரு பொறிமுறை என்று அழைக்கப்பட மாட்டாது என்றும் சான்றுகளை திரட்டுவதற்கான செயலகம் என்றே அழைக்கப்படும் என்றும் ஐநாவுடன் நெருக்கமாக செயற்படும் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகள் கூறின. அப்பொறிமுறைக்குள் மொத்தம் 13 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றும், அது லண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கக் கூடும் என்றும் முன்பு தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அது ஐநா தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்படும் ஒரு பொறிமுறை என்றபடியால் அது ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் அலுவலகத்தில்தான் இயங்கும் என்று கூறப்படுகிறது. அதற்குத் தேவையான நிதியை ஒஸ்திரேலியாவும் பிரித்தானியாவும் வழங்கும் என்று தொடக்கத்திலிருந்தே கூறப்பட்டது. ஆனால் அந்த நிதி எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு வழங்கப்படவில்லை என்று இப்பொழுது கூறப்படுகிறது. எனினும் புலம்பெயர்ந்த தமிழ் தரப்பில் இருக்கும் அமைப்புக்கள் சில தரும் தகவல்களின்படி அப்பொறிமுறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சீனா போன்ற இலங்கைக்கு ஆதரவான நாடுகள் அழுத்தங்களை பிரயோகித்து குறைத்து விட்டதாக கூறப்படுகிறது. அதனால் அப் பொறிமுறையின் பருமன் குறைக்கப்பட்டிருப்பதாக இப்பொழுது கூறப்படுகிறது. இது தொடர்பில் ஐநா வட்டாரங்களை மேற்கோள் காட்ட முடியவில்லை.

எனினும் அப்பொறிமுறையானது மனித உரிமைகள் ஆணையர் கடந்த செப்டம்பர் மாதம் தன் வாய்மூல அறிக்கையில் குறிப்பிட்டதுபோல கடந்த ஒக்டோபரில் இருந்து இயங்கத் தொடங்கவில்லை. அது ஆண்டு இறுதியில் இருந்துதான் இயங்கத் தொடங்கியது என்று மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். மேலும் அதற்கு வழங்கப்பட்ட நிதி போதாது என்பதனையும் அவை ஒப்புக்கொள்கின்றன. இது தொடர்பாக அண்மையில் ஐநா மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்ட இலங்கை தொடர்பான ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நிதிப்பற்றாக்குறை காரணமாக கட்டுப்பாடுகள் இருப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இலங்கையை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தரும் தகவல்களின்படி, ஐநாவுக்கான நிதி பொதுவாக குறைக்கப்பட்டுள்ளது என்றும், அதிலும் குறிப்பாக மனித உரிமைகள் பேரவைக்கு போதியளவு நிதி கிடைப்பதில்லை என்றும், இது தொடர்பில் இம்முறை கூட்டத்தொடரில் ஆணையர் சுட்டிக்காட்டியிருந்தார் என்றும் கூறப்படுகிறது. கிளிநொச்சி மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பகுதிகளில் உள்ள யுனிசெப் அலுவலகங்கள் இந்த ஆண்டு இறுதியுடன் மூடப்பட இருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் இலங்கைக்கு சார்பாக மேற்படி பொறி முறையைப் பலவீனப்படுத்தும் வேலையை சீனா ர'யா போன்ற நாடுகள் செய்ய முடியும் என்பதனை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அப்பொறிமுறையானது சுமார் 13 நிபுணர்களை கொண்டதாக இருக்கும் என்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பிந்திக் கிடைத்த தகவல்களின்படி அது ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக அமைக்கப்படும் என்றும் அதில் மூவர் தான் நிபுணர்கள் என்றும் இருவர் இன்ரப்பிரட்டர்கள் என்றும் கூறப்படுகிறது. அதாவது அது ஒப்பீட்டளவில் பலவீனமான ஒரு பொறிமுறையாக அமையப் போகிறது என்று அர்த்தம்.

இப்படி ஒரு பொறிமுறை வேண்டும் என்று தாயகத்தில் அதிகம் வலியுறுத்தியது விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சிகளின் கூட்டும், லண்டனை மையமாகக் கொண்ட பிரிஎப் அமைப்பும்தான்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொன்ற மூன்று கட்சிகளையும் ஐநா வை நோக்கி ஒருங்கிணைக்கும் வேலைகளில் ஈடுபட்டபொழுது மேற்படி கோரிக்கையை வலியுறுத்தி கூறியது விக்னேஸ்வரனின் கூட்டணியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம்தான். தமிழ் தேசிய மக்கள் முன்னணி அந்த கோரிக்கையின்பால் அதிகம் அக்கறை காட்டவில்லை. கிளிநொச்சியில் நடந்த மூன்றாவது சந்திப்பின்போது அக்கோரிக்கையை கஜேந்திரகுமார் நிபந்தனையோடு ஏற்றுக் கொண்டதனால் மூன்று கட்சிகளும் இணைந்து ஒரு கடிதத்தை வரைந்தன.

ஆனால் அக் கூட்டுக் கடிதத்தில் கேட்கப்பட்டது போன்ற ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வில்லை. இது முதலாவது. இரண்டாவதாக, ஐநா மனித உரிமைகள் ஆணையர் கூறியதுபோல கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து அது இயங்கத் தொடங்கவில்லை. மூன்றாவதாக அப்பொறிமுறையானது முன்பு கூறப்பட்டது போல கனதியானதாக 13 நிபுணர்களைக் கொண்டதாக அமையவில்லை. ஏனெனில் நிதிப் பற்றாக்குறை காரணம் என்று கூறப்படுகிறது. நாலாவதாக, அப்பொறிமுறையானது இன்னமும் துலக்கமான விதங்களில் இயங்க தொடங்கவில்லை. அது தன்னுடைய வேலையை எப்பொழுது முடிக்கும் என்பதும் தெளிவாக தெரியவில்லை.

தமிழ் கட்சிகள் இது தொடர்பாக தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்துவதில்லை. தமிழ் ஊடகங்களும் தெளிவுபடுத்துவதில்லை. கடந்த ஐநா தீர்மானத்தில் அப் பொறி முறை அறிவிக்கப்பட்டதிலிருந்தே அது தொடர்பில் குழப்பமான ஊர்ஜிதமற்ற தகவல்கள்தான் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன.

தமிழ்த் தரப்பு கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஐநாவை ஓரணியாக அணுகவில்லை. ஒரே கட்டமைப்பின் ஊடாக அணுகவில்லை. ஒரு பொதுக்கட்டமைப்போ பொதுப் பொறிமுறையோ இல்லை. பிரித்தானியாவில் உள்ள பி.ரி.எ·.ப் போன்ற சில அமைப்புகள் ஐநாவுடன் நெருக்கமாக செயல்படுவதாகத் தெரிகிறது. அதேசமயம் ஐநாவை மையமாகக்கொண்டு ஒரு தமிழ் அமைப்பும் செயற்படுகின்றது. இவைதவிர தாயகத்திலுள்ள கட்சிகளும் ஐநாவுடன் தொடர்பில் உள்ளன. இதில் சம்பந்தப்பட்ட தாயகம் மற்றும் புலம் பெயர்ந்த தரப்பில் உள்ள அமைப்புகளுக்கிடையே ஒருங்கிணைப்பு கிடையாது. ஒருவர் மற்றவரை அங்கீகரிக்கும் நிலைமையும் இல்லை. ஒருவர் மற்றவரை அனுசரித்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து செயற்படும் நிலைமை இல்லை. இதில் யார் ஐநாவில் தமிழ்மக்களின் மெய்யான அம்பாசிடர்? இம்மூன்று தரப்புகளையும் இணைத்து இயக்குவதற்கு பொருத்தமான தலைமைகளும் இல்லை. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்கள் ஒரே குரலில் ஒரே கட்டமைப்பாக இயங்குகிறார்கள். அவர்களிடம் ஒரு பொதுவான வேலைத்திட்டம் உண்டு. ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரல் உண்டு. முழு வளத்தையும் ஒரு மையத்தை நோக்கி அவர்கள் குவிக்கிறார்கள்.

இம்முறை ஜெனிவா கூட்டத் தொடருக்கு தமிழ் மக்கள் பக்கமிருந்து யாரும் போகவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் உயர்மட்டத்துக்கும் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் ஐநாவுக்கும் இடையே உரையாடல் உண்டு. அது தவிர ஐநாவுக்கு கூட்டாக கடிதம் எழுதிய ஐந்து கட்சிகளின் கூட்டுக்கும் ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் சேர்ந்த சில அதிகாரிகளுக்கும் இடையே கடந்த வாரம் ஒரு சூம் சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படுகிறது. இவை தவிர தமிழ்த் தரப்பில் இருந்து யாரும் இம்முறை ஐநாவுக்கு போகவில்லை.

மேலும், வழமையாக நடப்பதைப் போல பக்க நிகழ்வுகளும் இம்முறை அதிக தொகையில் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த ஆண்டு 17 பக்க நிகழ்வுகள் இடம்பெற்றதாகவும், இந்த ஆண்டு அதை விடக் குறைவாகவே இடம்பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. நிதி உதவி வழங்குவோரின் தொகை குறைந்ததும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை ஒருவித சோர்வான சூழ்நிலை காணப்படுவதாக செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால் அரசுத் தரப்பிலிருந்து ஒரு பலமான தூதுக்குழு சென்றிருக்கிறது. அங்கே அவர்கள் மேற்சொன்ன பொறிமுறையை திட்டவட்டமாக நிராகரித்திருக்கிறார்கள். அப்பொறி முறை எப்படிப்பட்டது? அதன் உள்ளடக்கம் எப்படிப்பட்டது? அது எவ்வளவு காலத்துக்கு இயங்கும்? இப்பொழுது பொறிமுறையின் நிலை என்ன? போன்ற கேள்விகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் விளக்கங்கள் இல்லை. ஆனால் அப்பொறி முறையை இல்லாமல் செய்யும் முனைப்போடு அரசாங்கம் திட்டமிட்டு தனது வளங்கள் அனைத்தையும் திரட்டிச் செயல்படுவது தெரிகிறது. ஜெனிவா கூட்டத் தொடருக்கு சென்ற அரச தூதுக்குழு நாடு திரும்பிய கையோடு ஒரு அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன்படி நிலைமாறுகால நீதிக்குரிய அலுவலகங்கலான காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் மற்றும் இழப்பீடு நீதிக்கான அலுவலகம் ஆகிய இரண்டுக்கும் 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்கம் ஜெனிவாவில் ஒப்புக்கொண்ட எதையோ செய்ய விழைகிறது என்பதனை இது காட்டுகிறதா? மேலும், தகவல்களைத் திரட்டுவதற்கான பொறிமுறைக்குரிய நிபுணர்களின் மொத்த எண்ணிக்கை குறைக்கப்பட்டமை என்பது அப்பொறிமுறையை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் வெற்றி பெறத் தொடங்கிவிட்டதைக் காட்டுகிறதா?

INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome
Personal Tax -No slip charge $30.00
Pension Welfare Student $20.00
Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting ntax 24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.

# கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திற்கு உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்க இரண்டு கோடி ரூபாய்கள் வழங்கிய மொன்றியால் AMR முத்தையா இராஜகோபால் அவர்கள்



“முத்தையா இராஜேஸ்வரி” ஞாபகார்த்த உள்ளக விளையாட்டு விளையாட்டு அரங்கு என்ற பெயரில் தனது தாயாரின் நினைவாக யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திற்கு உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்க இரண்டு கோடி ரூபாய்கள் வழங்கிய மொன்றியால் வர்த்தகப் பெருமகன் AMR ஏ,எம்.ஆர் முத்தையா இராஜகோபால் அவர்கள் அதனை தனது துணைவியார் சகிதம் அதனை திறந்து வைத்த பிரமாண்டமான நிகழ்வு கடந்த 06-03-2022 அன்று மாலை 6.00 மணிக்கு கல்வியங்காட்டில் சிறப்பாக நடைபெற்றது.

யாழ்பபாணம் அரசாங்க அதிபர் க. மகேசன் அவர்கள் சார்பாக பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட திரு மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம் பெற்ற இந்த அற்புதமான திறப்பு விழாவில் விழாவில் கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி எம் சுபாசினி, வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர் திரு நி-







ரோஸ் தியாகராஜா கிராம அலுவலர் திரு எஸ் தயாபரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு சுரேஸ் பிரேமச் சந்திரன் யாழ்ப்பாண நகர பிதா திரு விசுவலிங்கம் மணிவண்ணன், முன்னாள் வடக்கு மாகாண விவசா அமைச்சரும் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன், கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வெரகெதர உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்ட இந்த திறப்விழாவில் மொன்றியால் ஏஎம்-ஆர் வர்த்தக நிறுவன நிலையத்தின் அதிபரும் உள்ளத விளையாட்டு நிலையம் அமைக்க இரண்டு கோடி ரூபாய்கள் வழங்கியவருமான **AMR** முத்தையா இராஜகோபால் அவர்கள் தனது துணைவியார் திருமதி பராசக்தி சகிதம் நாடாவை வெட்டி உள்ளக விளையாட்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

மேற்படி விழாவிற்கு கல்வியங்காடு வாழ் பொது மக்கள் உட்பட AMR முத்தையா இராஜகோபால் அவர்கள் குடும்பத்தினர் உறவினர்கள் பிரமுகர் என பலர் வெளிநாடுகளில் இருந்தும் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு உரையாற்றிய பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு மருதலிங்கம் பிரதீபன் உரையாற்றும் போது இவ்வாறான முக்கியமான வேலைத் திட்டங்களுக்கு பெரும்பாலும் அரசாங்கத்தின் உதவியையே எதிர்பார்க்கும் கால கட்டத்தில் தான் பிறந்த ஊருக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவி இந்த உள்ளக விளையாட்டு நிலையத்தை அமைக்க நிதி வழங்கிய முத்தையா இராஜகோபால் அவர்கள் அவரது துணைவியார் திருமதி பராசக்தி ஆகியோர் போற்றுதற்கு உதவியவர்கள் என்றார்.



ஏற்புரை வழங்கிய AMR முத்தையா இராஜகோபால் அவர்கள் இந்த திட்டத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தினர் தன்னிடம் கோரிக்கை வைத்தபோது தான் அவர்களிடம் எவ்வளவு காலத்தில் உள்ள விளையாட்டு நிலையத்தின் கட்டடத்தை கட்டி முடிப்பீர்கள் என்று தான் கேட்டதாகவும் தனது விருப்பத்திற்கு ஏற்ப நிர்வாகிகள் குறுகிய காலத்தில் இந்த கட்டத்தை கட்டி முடித்தார்கள் என்றும் தெரிவித்தார்.

வாணவேடிக்கை மற்றும் கலை நிகழ்ச்சிகள் இசை நிகழ்ச்சிகள் என மக்கள் விரும்பும் நிகழ்சசி இந்த திறப்பு விழாவில் யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திஏற்பாடு செய்திருந்தனர் ஞானபாஸ்கரோதய சங்கத்தின் பொருளாளர் தனுசன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.





# யாழ்ப்பாண நகரபிதா மணிவண்ணன் விஸ்வலிங்கம் அவர்களுக்கு கனடிய நகரபிதாக்கள் இருவரின் பாராட்டுப் பத்திரங்கள்



**க**டந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மூன்று முக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்த கனடா உதயன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் யாழ்ப்பாண நகரபிதா மணிவண்ணன் விஸ்வலிங்கம் அவர்களுக்கு கனடிய நகரபிதாக்கள் இருவரின்
பாராட்டுப் பத்திரங்களையும் கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாராளுமன்றம் சார்பான பாராட்டுப் பத்திரத்தையும் நேரடியாகக் கைளித்து தனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டார்.

கனடாவின் மார்க்கம் நகரபிதா பிராங்க் ஸ்கபட்டி மற்றும் பிரம்ரன் நகர பிதா பற்றிக் பிரவுண் ஆகியோரின் பாராட்டுப் பத்திரங்கள் அத்துடன் ஸ்காபுரோ மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சல்மா சாகிட் அவர்கள் வழங்கிய பாராளுமன்றம் சார்பான சார்பான பாராட்டுச் சான்றிதழ் ஆகியனவே அன்றைய தினம் கையளிக்கப்பெற்றன.

அப்போது அவருடன் கனடாவின் “ரூபம்“ இணைய வானொலி மற்றும் “ரூபம்“செய்தி இணையத் தளம் ஆகியவற்றின்
நிறுவனர் சங்கர் சிவநாதன் திருமதி. லோகேந்திரலிங்கம் ஆகியோரும் கூட இருந்தனர்.

மேற்படி சந்திப்போது யாழ்ப்பாண நகர பிதா மணிவண்ணன் அவர்கள் கனடிய தமிழர்களின் அயராத உழைப்பினால் அங்கு தை மாதத்தை மத்திய அரசும் மாகாண அரசாங்கங்கள் பலவும் நகர சபைகள் பலவும் “தமிழர் மரபுரிமை மாதமாக“ அங்கரித்துள்ளதைப் பாராட்டினார். யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் அவர்களும்
மாநகரசபையின் உறுப்பினர்கள் சிலரும் இந்த சந்திப்பின் போது உடனிருந்து தங்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

அங்கு உதயன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் உரையாற்றும் போது யாழ்ப்பாண மாநகர சபையானது கடந்த காலங்களில் பல சிறந்த நகரபிதாக்களினாலும் ஆணையாளர்களினாலும் நிர்வகிக்கப்பட்டு வந்ததை தான் நன்கு அவதானித்த தாகவும் யாழ்ப்பாணம் மாநகர சபை இலங்கையின் ஏனைய மாநகர சபைகளைப் போன்று ஓர நிர்வாகப் பிரிவு மட்டுமல்ல. தமிழர்களின் கலை இலக்கிய பண்பாட்டுக் கோலங்களின் உறைவிடம் மற்றும் அடையாளம் என்றும் யாழ்ப்பாண மாநகர சபையின் கொடியில் காணப்படும் யாழ் என்னும் தமிழர்களின் பண்டைய இசைக்கருவி தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பை காட்டுவதாகவும் இதன் காரணமாகவே மார்க்கம் மற்றும் பிரம்டன் ஆகிய மாநகரசபைகளின் நகரபிதாக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் பாராட்டுப் பத்திரங்களை யாழ்ப்பாண நகரபிதா மணிவண்ணன் விஸ்வலிங்கம் அவர்களுக்கு தான் வழங்க முன்வந்ததாகவும் அத்துடன் நகரபிதா மணிவண்ணன் விஸ்வலிங்கம் அவர்கள் புலம் பெயர் தமிழ் மக்களின் பெரும்பாலானவர்களால் விரும்பப்படுபவராகவும் அறியப்பட்டவராகவும் உள்ளதால் அவரை வாழ்த்திச் செல்ல எண்ணியதாகவும் குறிப்பிட்டார்.


யாழ்ப்பாண நகரபிதாவின் சார்பில் உதயன் பிரதம ஆசிரியருக்கு ஞாபகார்த்தப் பரிசையும் நகரபிதா மணிவண்ணன் விஸ்வலிங்கம் அவர்கள் வழங்கினார்.





இலங்கைச் செய்திகள்
Sri Lanka News

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் பிரதிநிதிகள்



யாழ்ப்பாணத்தில் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அவர்கள் தலைமையில் இயங்கிவரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும் அங்கத்தவர் சங்கர் சிவநாதன் மற்றும் திருமதி. பத்மா லோகேந்திரலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அன்றைய தினம் பசுமை அறிவொளி நிகழ்ச்சித்திட்டம் என்னும் அற்புதமான மாணவர் நலன் சார்ந்த திட்டத்தை தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் அறிமுகம் செய்திருந்தனர்.

மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சூழற் பாதுகாப்பில் அவர்களைப் பங்குபற்றுநர்களாக்கும் நோக்கோடு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் முன்னெடுத்துள்ள இத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (06.03.2022) யாழ்ப்பாணம் நல்லூரில் இயங்கிவரும் “இளங்கலைஞர் மன்ற கலைக் கூடத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் தலைமையில் நடைபெற்ற இத்திட்டத் தொடக்க நிகழ்ச்சியில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பின் தலைவருமான என்.ஆர்.லோகேந்திரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்ச்சியில் வளவாளர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் விரிவுரையாளர் பா.பாலகணேசன், கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் மு. கனகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தார்கள். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் திட்டம் தொடர்பான விளக்கவுரையை ஆற்றியிருந்தார்.




அதிக எண்ணிக்கையான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்ட இத்திட்டத் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் ரொறன்ரோவின் மனிதநேயக் குரலின் அனுசரணையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி வைபவத்தில் பல மக்கள் நலன் சார்ந்த அன்பளிப்புக்களை ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பு வழங்கியது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக 3 மாணவர்களுக்குரிய நிதி அன்பளிப்பை வழங்கியது. அத்துடன் திரு பொ. ஐங்கரநேசன். மன்னார் பிராந்திய செய்தியாளர் லம்பேர்ட் மற்றும் யாழ்ப்பாணத்தில் தயாரான “புத்தி கெட்ட மனிதர் எல்லாம்“ திரைப்படத்தின் தயாரிப்பு குழுவினர் ஆகியோர்க்கு கனடிய பாராளுமன்றம் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு வழங்கிய சான்றிதழ்களை திரு ஆர். என். லோகேந்திரலிங்கம் வழங்கி கௌரவித்தார்.

அன்றைய தினம் வழங்கப்பெற்ற அன்பளிப்புக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்க ஆகியவற்றுக்கான நிதியை வழங்கிய கனடா வாழ் சட்டத்தரணி மெலனி டேவிற். விழித்தெழு பெண்ணே“ அமைப்பின் தலைவி சசிகலா நரேன். வீடு விற்பனை முகவரும் சமூக சேவையாளருமான பாஸ்கரன் சின்னத்துரை “ரூபம்“ வானொலி அதிபர் சங்கரர சிவநாதன் திருவாளர்கள் நிமால் விநாயகமூர்த்தி. சங்கர் நல்லதம்பி வீடு விற்பனை முகவர் கைலன் தில்லைநாதன்-திருமதி சபா குணசிங்கம், திருமதி பாஸ்கரன் உட்பட பல அன்பர்கள் வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

**- செய்தி- சத்தியன்- கணேஸ்**









# கொழும்பு செல்கிறார் மோடி – டில்லிக்கு பறக்கிறார் பசில்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி இந்த மாத இறுதியில் இலங்கையில் நடைபெறவுள்ள உச்சி மாநாடு ஒன்றிற்கு செல்கிறார் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை வெளியுறவு அமைச்சகம் அவரது வருகையை மறைமுகமாக உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இந்திய அரசிடமிருந்து இதுவரை அது உறுதி செய்யப்படவில்லை.

ஆனால், அவர் கொழும்பிற்கு வருவதற்கு முன்னர், இலங்கையின் நிதியமைச்சர் மீண்டும் புதிடில்லி செல்கிறார். இது குறித்து இரு வாரங்களுக்கு முன்னரே நமது “உதயனில்” இது குறித்த செய்தி வெளியாகியிருந்தது. காரணங்கள் வெளியிடப்படாமல் கடைசி நிமிடத்தில் பின்போடப்பட்ட அந்த பயணம் மோடி இலங்கை செல்வதற்கு முன்னர் இடம்பெறும் என்று இப்போது தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அரசு மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் வேளையில் மேலும் கடனனை கோரும் நிலையில், வடக்கில் உள்ள அரசியல் கட்சிகளின் குழுவொன்று அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக இந்தியாவின் உதவியை நாடும் தருணத்தில் பசில் மீண்டும் புதுடில்லிக்கு பறக்கிறார்.

சீனாவை மட்டுமே சார்ந்திருக்காமல், இலங்கை அரசு இரட்டைக் குதிரை சவாரி செய்ய விரும்புகிறது. அதுவே பசில் ராஜபக்சவின் தொடர்ச்சியான விஜயத்திற்கு காரணம் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 30ஆம் தேதி நடைபெறும் பல்துறை தொழிநுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான வங்காள விரிகுடாவின் முயற்சியின் (BIMSTEC) உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாக புதுடில்லியில் உள்ள இராஜதந்திர ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிம்ஸ்டெக் கூட்டமைப்பானது பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட ஒரு பிராந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பாகும்.

இலங்கையில் இரண்டு நாட்கள் தங்கவுள்ள இந்தியப் பிரதமர், வடக்கிற்கும் பயணிக்கவுள்ளதாக தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபை அதிகாரத்தை பெற்றுக் கொள்வதில் தலையிட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள ஆறு தமிழ் கட்சிகளின் தலைவர்களுடனும் இந்திய பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியைத் தணிக்க இலங்கை கோரிய 1 பில்லியன் டொலர் கடனுக்கு தமிழ் மக்களின் உரிமைகள் உள்ளிட்ட நிபந்தனைகளை இந்தியா விதித்துள்ளதாக வார இறுதியில் செய்திகள் வெளியாகின.

கிழக்கு மாகாணத்தில் இந்தியாவின் மூலோபாய நிலையை வலுப்படுத்த, வடகிழக்கு எரிசக்தி துறையில் இந்திய முதலீட்டை அனுமதிப்பது மற்றும் அமெரிக்க கடற்படை புலனாய்வுத்துறைக்கு முழுமையாக பங்களிப்பதற்கான கடல்சார் ஒப்பந்தங்கள் இந்த விதிமுறைகளில் அடங்கும் என்று சண்டே டைம்ஸ் தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடி நாட்டிற்கு வருவதற்கு முன்னதாக இலங்கை நிதியமைச்சரும் இந்தியா செல்லவுள்ளார். கடன் பெறுவதற்காக டெல்லி செல்ல அவர் மேற்கொண்ட இரண்டு முயற்சிகளும் தோல்வியடைந்தன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோருக்கு இடையிலான தொலைபேசி உரையாடலில் இந்திய விஜயம் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

“அமைச்சர் பசில் ராஜபக்சவின் இந்திய விஜயத்திற்கான வசதியான திகதியை இந்த மாதத்தின் இரண்டாம் பாதியில் நிர்ணயிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது” என கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

பாக் ஜலசந்தியில் நிகழும் மீன்பிடி நெருக்கடி குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்படுமா என்பது குறித்து தெளிவானத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.



# கடும் பொருளாதார நெருக்கடியில் தமிழர் தாயக பகுதிகள்; உணவிற்கு அல்லாடும் மக்கள்

## - களத்திலிருந்து நேரடியாக - பகுதி 1

- நடராசா லோகதயாளன் & சிவா பரமேஸ்வரன்



**ச**மைத்து உண்ணவும் வழியின்றி வாங்கி உண்ணவும் வசதியில்லை என்பது தான் இன்று இலங்கையின் தமிழர் தாயக பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள மக்களின் யதார்த்தமான நிலைமையாகவுள்ளது.

இதில் போரினால் பாதிக்கப்பட்டு தமது சொந்தங்களை இழந்து குடும்பத்தலைவர் என்று யாருமின்றி, நீண்டகாலமாக சொல்லொணா துன்பத்தை எதிர்கொண்டு வரும் பெண்களின் நிலை இன்னும் மோசமாகவுள்ளது.

இலங்கை இருளில் மூழ்கியுள்ளது. ஆண்டி முதல் அரசன் வரை காலை எழுந்ததும் எரிபொருட்கள் வாங்க வரிசையில் இடம்பிடிப்பதே முதல் வேலையாகவுள்ளது. வாங்கிய கடனை திருப்பி வழங்க இயலாத அரசு, மேலும் கடன் கொடுக்க தயங்கும் நிறுவனங்கள், நாட்டின் தேவை மற்றும் அளவுக்கு கூடுதலான இராணுவம், வெற்றிலை, பித்தளை, உள்கட்டுமானம், வெளிக்கட்டுமானம், இல்லாத விஷயங்களுக்கு அமைச்சர்கள், குடும்ப ஆட்சி, அந்த ஆட்சியை எதிர்க்கத் துணிவில்லாத எதிர்க்கட்சிகள், என்று அடுக்கிக் கொண்டே போகக் கூடிய காரணங்களால் இன்று நாடு அனைத்து தரப்பிலிருந்தும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.

பொருளாதார நெருக்கடியும், மனித உரிமைகள் தொடர்பில் ஐ நாவின் கிடுக்கிப் பிடியும் ஆட்சியாளர்களின் கழுத்தைப் பிடித்துள்ளது. பிரச்சனைகளுக்குத் தீர்வைத் தேடாமல், மேலும் மேலும் பிரச்சனைகளை ஏற்படுத்துவதிலேயே அரசு முனைப்பாகவுள்ளது. ஏற்கெனவே மஞ்சள்தூள் தொடக்கம் மிளகாய்த்தூள் வரை அனைத்திற்கும் இறக்குமதி தடை. உள்ளூர் விவசாயத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் திட்டங்கள் ஏதுமின்றி உர இறக்குமதிக்கு தடை.




"இலங்கை இன்று குரங்கு கையில் கொடுத்த பூமாலை போன்றுள்ளது" என்று சமூக ஊடகங்களில் கடும் விமர்சனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அன்றாடம் காலையில் உள்ளூர் பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் மின்வெட்டு குறித்த பட்டியல் வெளியாகிறது. முதல் நாளே இணையத்தில் அது வருகிறது. இந்நிலையில் "இளவரசு பட்டம் சூட்டப்பட்டுள்ள" நாமல் ராஜபக்ச நாட்டில் மின்சார நெருக்கடி ஏதுமில்லை அது ஒரு சிலரால் திட்டமிட்டு செய்யப்படும்ச் சதி என்று திருவாய் மலர்ந்துள்ளார். தந்தை பிரதமர், சித்தப்பா ஜனாதிபதி, பெரியப்பா மூத்த அமைச்சர், மற்றொரு சித்தப்பா நிதியமைச்சர் என்று சர்வ வல்லமை கொண்ட குடும்பத்து "இளவரசரால்" அப்படி "சதி செய்பவர்களை" அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க முடியாதா?

முடியும்....ஆனால் முடியாது.....அதுதான் பதில்! ஏனென்றால் உண்மை சுடும்.

தலைநகர் கொழும்பு மற்றும் பெரும்பான்மையின மக்கள் வாழும் பகுதியிலேயே நிலைமை இப்படியென்றால், சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளில் நிலை எப்படியிருக்கும் என்பதை சுலபமாக கற்பனை செய்ய முடியும்.



இதற்கு சிறந்த உதாரணம் கடந்த புதன்கிழமை (9) அன்று யாழ். நகரின் காங்கேசந்துறை வீதியில் மட்டும் இயங்கும் 10ற்கும் மேற்பட்ட உணவகங்களில் 5 உணவகங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன. இவ்வாறு உணவகங்கள் திடீரென மூடப்பட்டதனால் நகரில் உணவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 50 வீதமான உணவகங்கள் புதன்கிழமை இழுத்து மூடப்பட்டுள்ளது. நகரத்திலுள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளர் தனது வேதனையை "உதயனிடம்" இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

"நாள் ஒன்றிற்கு 500ற்கும் மேற்பட்டவர்களிற்கு உணவும் மேலும் 500ற்கும் மேற்பட்டோருக்குச் சிற்றுண்டி விற்பனையும் இடம்பெறும் எமது உணவகத்தில் என்னுடன் 11 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இதில் 8 பேர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். எரிவாயு இன்மையால் உணவகம் மூடியதால் எப்போது எரிவாயு வரும் எப்போது திறக்கலாம் என்பது தெரியாது. அதனால் பணியாளர்களை ஊருக்கு அனுப்பவும் முடியவில்லை".

இவை அனைத்தையும்விட கடையில் வேலை செய்யும் 10 பேருக்கும் தேநீர் ஊற்றக்கூட எரிவாயு இன்மையால் ஓர் மின்சார கெட்டிலை வாங்கினோம். சாப்பாட்டுக் கடை நடத்தும் எமக்கான உணவினை தேடி ஒவ்வொரு கடை கடையாக அலைந்து வேண்டி வருகின்றோம். பணம் இருந்தாலும் பொருள் இல்லை என்கின்ற அவலத்தை தற்போதுதான் சந்திக்கின்றோம் என்று கண் கலங்கினார் அந்த கடையின் உரிமையாளர்.

அன்றாட தினக் கூலியாக தோட்ட வேலைக்குச் சென்றால் நாள் ஒன்றிற்கு பெண்களிற்கு ஆயிரம் ரூபா வழங்கினால் 2 றாத்தல் பாணும், ஒரு கிலோ அரிசியுடன் மரக்கறி வாங்கவே பணம் போதாத நிலைமையே இன்று இலங்கையில் காணப்படுவதாக குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை போன்ற பகுதிகளில் இருந்து தினமும் தோட்டவேலைக்குச் செல்லும் நூற்றுக் கணக்கான பெண்கள் "உதயனிடம்" கூறுகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் கொடுமையால் குடும்பத் தலைவர்களை இழந்த 40 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுடன் ஏனைய காரணங்களாலும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 25 ஆயிரம் குடும்பங்களுமாக 65 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அன்றாட பாவனைப் பொருட்களின் கடுமையான விலை ஏற்றத்தின் காரணமாக திணறுவதாகக் குமுறுகின்றனர். ஆயிரம் ரூபாயில் அரை வயிற்றைக் கூட நிரப்ப முடியாத நிலையில் அந்தப் பெண்கள் சொல்லொணா துன்பத்தை எதிர்கொண்டுள்ளனர்.



"2020 ஆம் ஆண்டுவரையில் "நல்லாட்சி அரசின்" காலத்தில் அத்தியாவசியப் பொருட்கள் விற்ற விலையில் ஓரளவேனும் வாழ்வாதாரத்தை கொண்டு நடாத்தினோம் ஆனால் தற்போது சகல பொருட்களுமே 100 மடங்கு அல்லது 150 மடங்கு விலை அதிகரிக்கப்பட்டு விற்பனையாகும் நிலைமையில் வாழ்வா-சாவா என்ற நிலையில் இருக்கிறோம்" என்று பல பெண்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

நாள் ஒன்றிற்கு கூலி வேலை செய்யும் பெணகளுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைப்பதே பெரியபாடு. இந்த நிலமையில் ஒரு றாத்தல் பாண் 50 ரூபாவிற்கு விற்பனை செய்த நிலமையில் தற்போது ஒரு றாத்தல் பாணின் விலை 90 ரூபாவிற்கு விற்கிறது அதுவும் எதிர்வரும் நாட்களில் 110 ரூபாவாக அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இதைவிட ஒரு கிலோ செத்தல் மிளகாய் 400 ரூபாவாக இருந்து தற்போது ஆயிரம் ரூபாவும், ஒரு லிட்டர் தேங்காய் எண்ணை 350 ரூபாவில் இருந்து 700 ரூபாவும், ஒரு லிட்டர் பெட்ரோல் 117 ரூபாவில் இருந்து 177 ரூபாவாகவும், ஒரு லிட்டர் டீசல் 97 ரூபாவில் இருந்து 117 ரூபாவாகவும் தற்போதைய அரசு உயர்த்தியுள்ளது. "இந்த நிலையில் ஐந்து பேர் கொண்ட குடும்பத்தை எம்மால் வாழவைக்க முடியவில்லை என்று யாழ்ப்பாணத்தில் உணவகம் ஒன்றில் இடியப்பம் அவிக்கும் பணியிலுள்ள 56 வயதான விசுவமடுவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயாரான சு. இரத்தினேஸ்வரி தெரிவிக்கின்றார்.

தமது வேதனைகளை வெளிப்படுத்தும் இரத்தினேஸ்வரி, இந்திராணி போன்றவர்கள் தனியானவர்கள் அல்ல, அவர்களைப் போன்ற அதே நெருக்கடியைத்தான் ஆயிரக்கணக்கான பெண்கள் நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியில் எதிர்கொண்டு வருகிறார்கள்.

"கணவரை இழந்த நிலையில் கடைகளிற்கு பலகாரம் செய்து விற்பதன் மூலம் வரும் வருமானத்திலேயே நானும் எனது 3 பிள்ளைகளும் வயது முதிர்ந்த தாயாரும் வாழ்கின்கின்றோம். இந்த நிலமையில் கடந்த ஆண்டு 1,260 ரூபாய் விற்ற எரிவாயு ஒரே தடவையில் 2,800 ரூபாய் ஆனபோதும் அந்த விலைக்குக்கூட இன்று எரிவாயுவை எங்குமே பெறமுடியவில்லை. கள்ளச் சந்தையில் 4,000 ரூபாய் கேட்கின்றனர். விறகிலாவது அடுப்பு எரிப்போம் என்றால் ஆயிரம் ரூபா விற்ற ஒரு தூக்கு விறகு 2,400 ரூபாய் விற்கிறது. இந்த விலைக்கேனும் விறகை வேண்டி அடுப்பெரித்தால் தற்போதைய மழையில் நனைந்த விறகு எரிவதாக இல்லை". இப்படியான எண்ணக் குமுறல்களை யாழ்ப்பாணம் முழுவதிலும் கேட்க முடிகிறது.



இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைப் பட்டியலிட ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது. அது இன்றொரு விலை நாளையொரு விலை என்கிற வகையில் உள்ளது. இந்த கள ஆய்விற்காக கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் சுற்றி திரிந்த போது, இறக்குமதி தடை காரணமாகப் பொருட்களின் விலை 50% உயர்ந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. உதாரணமாக கோதுமை மாவு 85 ரூபாயிலிருந்து 130 ஆகவும், சீனி 105 ரூபாயிலிருந்து 155 ஆகவும், 365 ரூபாய் விற்ற பால் மாவு 550 ரூபாய் கொடுத்தாலும் வாங்க முடியாத நிலையுள்ளது.

தமிழ் மக்களின் முக்கியமான அடிப்படை உணவான அரசி மற்றும் பருப்பின் விலை இருமடங்காகியுள்ளது. ஒரு கிலோ அரசி 85 ரூபாயிலிருந்து 170 ரூபாயாகவும், பருப்பு 180 ரூபாயிலிருந்து 350 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இதனிடையே ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் தொடரும் நிலையில், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய்யின் விலை உயர்ந்துகொண்டே வருகிறது. இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு அநேகமாக திவாலான நிலையில், உயர்ந்துவரும் விலைக்கு ஏற்ப, சர்வதேச சந்தையில் எண்ணெய் வாங்க இலங்கையிடம் டொலர் இல்லை. அமெரிக்க உட்பட பல நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கத் தடை விதித்துள்ள நிலையில், இலங்கை உதவி கோரி ரஷ்யாவை அணுகினால் மேற்குலக நாடுகளின் கோபத்தை மேலும் எதிர்கொள்ள நேரிடும்.

இதேவேளை, புதன்கிழமை இரவு தகவலின்படி, யாழ்ப்பாண நகரிலுள்ள அனைத்து பகுதிகளிலும் தெரு விளக்குகள் வட மாகான ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் உத்தரவின் பெயரில், மாநகர சபையால் துண்டிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக குற்றச்செயல்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக மக்கள் அஞ்சுகின்றனர்.

இலங்கை ஆட்சியாளர்களின் கவனத்திற்காக:
திருக்குறள் பொருட்பால்-அரசியல்-கொடுங்கோன்மை அதிகாரம்
- குறள் எண்: 553
நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.
நாள்தோறும் நாட்டில் நடக்கும் நன்மை தீமைகளை ஆராய்ந்து நீதி செலுத்தாத மன்னன், நாள்தோறும் தனது நாட்டை இழந்து கொண்டே வருவான்.

# உருசியா மீது கை நீட்டுவதற்கு அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்குத் தார்மீக உரிமை கிடையாது!

- கனடா நக்கீரன்

தமிழுக்குக் கதி கம்பராமாயணமும் திருக்குறளும் எனக் கூறியவர் செல்வக் கேசவராய முதலியார். இதில் திருக்குறளே நாடு, மொழி, இனம், சமயம், காலம் கடந்த நூல். திருவள்ளுவமாலையில் ஐம்பத்தைந்து பாடல்கள் உள்ளன. ஐம்பத்து மூன்று புலவர்கள் பாடியுள்ளார்கள். அதில் மதுரைத் தமிழ்நாகனார் என்ற புலவர் எல்லாப் பொருளும் இதன்பால்உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை எனப் புகழ்ந்துள்ளார்.

திருவள்ளுவர் இயல் அரசியல், அதிகாரம் அறிவுடைமையில் பின்வருமாறு கூறுவார்.

*அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில். (குறள் 428)*

இதன் பொருள் அறிவில்லாதவர்கள்தான் அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச மாட்டார்கள். அறிஞர்கள் மட்டுமே அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவார்கள். இது உக்கிரேன் நாட்டின் ஆட்சித்தலைவர் வொலடிமிர் செலன்ஸ்கி அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. உருசியா மீது மேற்குலக நாடுகள் விதித்துள்ள கடுமையான பொருளாதார, நிதிக் கட்டுபாட்டுக்களால் உக்கிரேனுக்கு எந்த நன்மையும் இல்லை.

உருசியா - உக்கிரேன் நாடுகளுக்கு இடையிலான போர் எட்டாவது நாளைக் கடக்கிறது. இந்தப் போர் உலகில் உள்ள நாடுகள் அனைத்திலும் எதிரொலிக்கிறது. உக்கிரேனின் இராணுவ தளங்கள், எண்ணெய் கிணறுகள், தொலைக்காட்சி கோபுரங்கள், கட்டிடங்கள் உருசியப் படைகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றன. உக்கிரேனின் ஆயுத பலத்தை குறைப்பதுதான் தனது குறிக்கோள் என உருசியா அறிவித்துள்ளது. போரின் அழிவுகளை மீள்கட்டி எழுப்ப பல பில்லியன் டொலர்களும் பல ஆண்டுகளும் தேவைப்படும்.

இந்தப் போருக்கான காரணம் தெரிந்ததே. உக்கிரேன் நேட்டோ இராணுவ அமைப்பில் சேர எடுத்த முடிவை உருசியா எதிர்த்தது. உக்கிரேன் நேட்டோ நாடுகளது இராணுவ அணியில் சேர்ந்தால் தனது தேசியப் பாதுகாப்புக்கு ஊறு ஏற்படும் என உருசியா அஞ்சுகிறது. அது மட்டுமல்ல, அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் வாழும் உருசிய இன மக்களை உக்கிரேன் இரண்டாம்தர குடிமக்களாக நடத்துகிறது அவர்களது மொழியுரிமையை மறுக்கிறது என உருசியா குற்றம் சாட்டுகிறது.



இந்தப் போர் ஒரு உலக வல்லரசுகளின் ஒன்றான உருசியாவுக்கும் ஒப்பீட்டளவில் சிறிய நாடான உக்கிரேன் இடையிலான போர். அதன் காரணமாக ஆட் பலம், ஆயுத பலம், பொருள்வளம் கொண்ட உருசிய நாட்டோடு உக்கிரேன் அதிக காலம் தாக்குப் பிடிக்க முடியாது. உக்கிரேன் தலைநகரான கீவ் நகரை உருசிய படைகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. அது எந்த நேரத்திலும் அது உருசியப் படைகளிடம் விழலாம்.

வினைவலி, தன்வலி, மாற்றான் வலி, துணைவலி போன்றவற்றை உக்கிரேன் கணக்கில் எடுக்கவில்லை என்பது தெரிகிறது. தான் தனித்து விடப்பட்டதாக உக்கிரேன் அதிபர் வொலடிமிர் ஜெலன்ஸ்கி புலம்புகிறார். அமெரிக்கா உட்பட நேட்டோ படைகள் உருசியாவுக்கு எதிராக போரில் நேரடியாக இறங்கும் என அவர் எதிர்பார்த்து ஏமாந்து போனார். இப்போது அவர் நாட்டை விட்டு ஓடிவிடும் நிலை அல்லது சிறை பிடிக்கப்படும் நிலை ஏற்படும் என உளவு நிறுவனங்கள் எதிர்கூறல் கூறுகின்றன.

உக்கிரேன் நாட்டில் உக்கிரேனியர்கள் 77.8 விழுக்காடும், உருசியர்கள் 17.3 விழுக்காடும் உள்ளனர். இருந்தும் சிறுபான்மை உருசியர்கள் மொழி, வேலைவாய்ப்பு போன்றவற்றில்

உக்ரேன் உருசியா படை மற்றும் ஆயுத பலம்

| | உக்கிரேன் | உருசியா |
|---|---|---|
| பிரதேசம் | கிழக்கு ஐரோப்பா | ஐரோப்பா, ஆசியா |
| தலைநகர் | கீவ் | மொஸ்கவ் |
| மொழி | உக்கிரேன் | உருசியா ப |
| மக்கள் தொகை | 44.46 மி | 145,054, 637 மி |
| மொத்த உற்பத்தி | 155,300 மி | 1,478,570 மி |
| தனிமனித வருமானம் | $ 3,741 | $10,115 |
| பரப்பளவு | 603,500 ச.கிமீ | 17,125,191 ச.கீமீ |
| படை | 200,000 | 850,000 |
| துணைப் படை | 50,000 | 250,000 |
| தாங்கிகள் | 2,596 | 1,420 |
| கவசவாகனங்கள் | 1,103 | 30,122 |
| போர் விமானங்கள் | 69 | 772 |
| உலங்குவானார்தி | 34 | 544 |
| மொத்த விமானங்கள் | 318 | 4,173 |

புறக்கணிக்கப்படுகின்றனர். இதை எழுதிக் கொண்டிருக்கும் போது உருசிய குடிமக்களது உடைமைகளை கையகப்படுத்துமாறு உக்ரேன் நாட்டு ஆட்சித்தலைவர் ஜெலன்ஸ்கி கட்டளை பிறப்பித்துள்ளதாக செய்தி வந்துள்ளது.




உண்மையில் சிறிலங்காவுக்கும் உக்கிரேனுக்கும் பல ஒற்றுமை காணப்படுகிறது என்று சொல்லலாம்.

(1) இரண்டும் பல்லின மக்கள் வாழும் நாடு
(2) அரசியல் அமைப்பு இரண்டிலும் ஒற்றையாட்சி
(3) உக்கிரேனின் உத்தியோக மொழி உக்கிரேன். சிறிலங்காவின் உத்தியோக மொழி சிங்களம். தமிழும் பெயரளவில் உத்தியோக மொழி
(4) உக்கிரேனில் சிறுபான்மை உருசியர்கள் கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இலங்கையில் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கும் தமிழர்கள் வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.
(5) இனவெறி மற்றும் மொழிவெறி ஆகியவை உக்ரைனில் வேரூன்றிய சிக்கல்களாக உள்ளன.
(6) உக்கிரேன் நாட்டு ஆயுதக் குழுக்களால் கிழக்கில் வாழும் உருசிய மக்கள் சித்திரவதை அடக்குமுறைக்கு உள்ளாகி வருகிறார்கள். சிறிலங்காவில் வட - கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள் இராணுவம் மற்றும் காவல்துறை போன்றவற்றால் அடக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

வி.புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்கும் இடையில் நடந்த போரில் உக்கிரேன் சிறிலங்காவுக்கு ஆயுதங்கள், போர் விமானங்களை கொடுத்து உதவின. போர் விமானங்களை உக்கிரேனிய நாட்டு விமானிகளே ஓட்டினார்கள். இன்று அதே நாடு உருசிய நாட்டுப் படைகளால் துவம்சம் செய்யப்படுகிறது.

உருசியா உக்கிரேன் நாட்டின் மீது படையெடுத்தது தவறு. இன்றைய பூகோள அரசியலில் போர் மூலம் சிக்கல்களை தீர்க்க முடியாது. காரணம் போரில் வென்ற நாட்டுக்கும் தோற்ற நாட்டுக்கும் இழப்புத்தான் மிச்சம்.

இப்போது நடைபெறும் போர் உக்கிரேன் நாட்டுக்கும் உருசியாவுக்கும் இடையிலான போர் என்பதை விட அமெரிக்கா தலைமை வகிக்கும் நேட்டோ நாடுகளுக்கும் உருசியாவுக்கும் இடையிலான போர் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். அமெரிக்கா, உக்கிரேன் நாட்டின் ஆட்சித்தலைவரை ஒரு பகடக் காயாகப் பயன்படுத்துகிறது. அதற்கு ஜெலென்ஸ்கி பலியாகியுள்ளார். அமெரிக்க அரசின் கைப்பாவையாக மாறியிருக்கிறார். சட்டத்துக்கு மாறான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இவை உருசியாவின் கோபத்தைக் கிளறியுள்ளது.

ஜெலென்ஸ்கி உருசிய சார்பு விக்டர் மெட்வெட்சுக்கின் கட்சியை அடக்கிவிட்டார். எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவாக இருப்பதாகக் கருதப்படும் சில ஊடகங்களை அவர் மூடிவிட்டார், ஆனால் அமெரிக்காவோ அல்லது அதன் கூட்டாளிளோ எவரும் இத்தகைய சனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டிக்கவில்லை. ஜெலென்ஸ்கி, அமெரிக்க ஆட்சித்தலைவர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் போரிஸ் யோன்சனை திருப்திப்படுத்த முயற்சிக்காமல் புத்திசாலித்தனமாக செயல்பட்டிருக்க வேண்டும்.

உருசியாவைக் கண்டிக்கிற தார்மீக உரிமை அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்கு இல்லை. காரணம் இந்த நாடுகளே கடந்த காலத்தில் சிறிய சிறிய நாடுகள் மீது போர் தொடுத்து அவற்றை அழித்துள்ளன.

வியட்நாம் போரை (1979) விட்டுவிடுவோம். அண்மைக் காலத்தில் (2003) இராக் (அமெரிக்க, ஐக்கிய இராச்சியம்) ஆப்கனிஸ்தான் 2001 (அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம்) கெயிட்டி 1994 (அமெரிக்கா) இராக் 1991 (அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சவுதி, எகிப்து) பனாமா 1989 (அமெரிக்கா) 1988 Spratly Islands, 1983 கிரனேடா (அமெரிக்கா) ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா, ஐக்கியராச்சியம் போன்ற நாடுகள் படையெடுத்திருந்தன. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போர் 20 ஆண்டுகள் நீடித்தன. இவற்றை விட லிபியாவில் ஆட்சிமாற்றத்தை அமெரிக்கா கொண்டு வந்தது.

எனவே உருசியா மீது கை நீட்டுவதற்கு அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா போன்ற நாடுகளுக்கு தார்மீக உரிமை அறவே கிடையாது.

02 டிசெம்பர் 1823 இல் அமெரிக்கா மொன்றோ கோட்பாடு ஒன்றைப் பிரகடனப்படுத்தியது. இதன் அடிப்படையில் ஒரு ஐரோப்பிய நாடு மேற்கு அரைக்கோளத்தில் ஒரு தேசத்தை கட்டுப்படுத்த அல்லது தலையிட முயன்றால், அமெரிக்கா அதை தனது நாட்டுக்கு எதிரான செயலாகப் பார்க்கும்.

1964 இல் அன்றைய சோவியத் ஒன்றியம் அமெரிக்க மண்ணிலிருந்து 90 மைல் தொலைவில் உள்ள கியூபாவில் ஒரு அணுவாயுத தளம் அமைக்க சோவியத் ஒன்றியம் முற்பட்ட போது அதனை அமெரிக்க ஆட்சித்தலைவர் யோன் கெனடி தடுத்து நிறுத்தினார். இந்த நிலைப்பாடு சரியென்றால் உருசியா தனது எல்லை நாடான உக்கிரேன் நேட்டோ நாடுகளது இராணுவ கூட்டணியில் சேரக் கூடாது எனக் கோருவதில் என்ன தவறு இருக்கிறது? அமெரிக்காவிற்கு ஒரு நியாயம் உருசியாவுக்கு இன்னொரு நியாயமா?

உருசியாவைச் சுற்றி உள்ள அனைத்து நாடுகளிலும் நேட்டோ தனது படையை நிறுத்தி வைத்திருக்கிறது. 1989 இல் நேட்டோவை கிழக்கு திசையில் ஒரு அங்குலம் கூட விரிவாக்கம் செய்ய மாட்டோம் என்று முன்னாள் உருசிய ஆட்சித்தலைவர் கோர்பச்சேவிடம் நேட்டோ ஒப்பந்தம் மூலம் உறுதி அளித்திருந்தது. அதை மீறி, இது வரை 14 முறை நேட்டோ கிழக்கு நோக்கி விரிவாக்கம் செய்திருக்கிறது.

2014ல் உக்கிரேனில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்து தனக்குச் சாதகமான பொம்மை அரசை அமெரிக்கா நியமித்தது. 2014ல் இருந்து உக்கிரேனின் கிழக்கு பகுதியில் Luhansk, Donetsk ஆகிய இரண்டு பகுதியும் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது. இப்போது இந்த இரண்டு பகுதிகளையும் தனித்தனி நாடாக உருசியா அங்கீகரித்து உள்ளது.

1969 ஆம் ஆண்டில், மறைந்த பிரதமர் பியர் ட்ரூடோ சனாதிபதி ரிச்சர்ட் நிக்சனைச் சந்திக்க வோஷிங்டனுக்குச் சென்றிருந்தார். கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை வரையறுக்க அவர் ஒரு சொற்றொடரை உருவாக்கினார்.

"அமெரிக்கா அருகில் வாழ்வது ஒரு யானையுடன் உறங்குவது போன்றது போன்றது என்றார். ஒவ்வொரு இழுப்பும் மற்றும் முணுமுணுப்புகளால் கனடா பாதிக்கப்படும்" என்று மறைந்த பியர் ட்ரூடோ கூறினார்.

உருசியா என்ற யானையோடு உக்கிரேன் நாட்டின் ஆட்சித்தலைவர் உறங்குவது ஆபத்தானது!

Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

# கோவிட் -19 மதிப்பீட்டு மையம்

New!

## மருத்துவ மதிப்பீட்டு மையத்திற்கு யார் செல்ல வேண்டும்?

உங்களுக்கு **COVID-19** இருப்பது தெரிந்தாலோ அல்லது சந்தேகப்பட்டாலோ மருத்துவ மதிப்பீட்டை பதிவு செய்ய வேண்டும்.

- உங்கள்முதன்மை பராமரிப்பு வழங்குநர் அல்லது பிற சுகாதாரப் பாதுகாப்புநிபுணரால் இயக்கப்பட்டது; அல்லது
- வீட்டில்உங்கள் அறிகுறிகளை பாதுகாப்பாக கண்காணிக்க முடியவில்லை; அல்லது
- கடுமையானநோய்களின் அதிக ஆபத்தில் உள்ளன, இதில் அடங்கும்:
  - தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல் **18** வயது மற்றும் அதற்குமேல் உள்ள நோயெதிர்ப்பு குறைபாடுள்ளநபர்கள்
  - **60** வயது மற்றும் அதற்குமேல் தடுப்பூசி போடப்படாத நபர்கள்
  - **50** மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தடுப்பூசி போடப்படாத நபர்கள் **(From First Nation, Inuit and Métis** சமூக )
  - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆபத்து காரணிகளைக் கொண்ட **50** வயது மற்றும் அதற்குமேற்பட்ட தடுப்பூசி போடப்படாத நபர்கள்.
- பின்வரும்அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகள் இருந்தால், நீங்கள் உடனடியாக **911**ஐ அழைக்கவும் அல்லதுஅவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லவும்:
  - சுவாசிப்பதில் கடுமையான சிரமம் (ஒவ்வொரு மூச்சுக்கும் போராடி, ஒற்றை வார்த்தைகளில் மட்டுமே பேச முடியும்)
  - கடுமையான மார்பு வலி (நிலையான இறுக்கம் அல்லது நசுக்கும் உணர்வு)
  - நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதில் குழப்பம் அல்லது நிச்சயமற்ற உணர்வு
  - சுயநினைவை இழப்பது

### உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்

https://www.picktime.com/assessmentcentre

**Absolutely No Walk-ins**

SCAN ME

**105 Gibson Centre**
**105 Gibson Drive., Markham, ON L3R 3K7 (Warden & Gibson)**

ஒவ்வொரு புதன் கிழமையும் (ஆலோசனைக்கு மருத்துவர் கிடைக்கும்) — **10:00 a.m. - 2:30 p.m.**

**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., Scarborough, ON M1V 0G2 (Midland & McNicoll)**

ஒவ்வொரு வியாழன் (ஆலோசனைக்கு மருத்துவர் கிடைக்கும்) — **9:30 a.m. - 2:30 p.m.**

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**

Carefirst Family Health Team
105 Gibson Centre

Updated on February 14, 2022

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREEMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

**Head Office**
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

**Branches**
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM

(416) 258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre

8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1

www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca



## LOOKING FOR YOUR *Dream House?*



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING



இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்

## கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை
416 732 1608
என்னும் WHATSAPP
இலக்கத்திற்கும்
அனுப்பலாம்.

www.uthayannews.ca UTHAYAN உதயன்

இலங்கைச் சிறப்பிதழில்
பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.




தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com




கனடா வாழ் ரசிகர்களுக்காக
யாழ் மண்ணிலிருந்து ஒரு திரைப்படம்

யாழ் திரையரங்குகளில் வெற்றி நடை போட்ட 'எங்கட படம்'

எழுத்தும் இயக்கமும்: ராஜ் சிவராஜ்

Scarborough NETWYN அரங்கில்
Netwyn.Place
10 Thornmount Drive
M1B 3J4 (Morningside-Sheppard சந்திக்கு அருகில்)

ஏப்ரல் 9ம் திகதி மூன்று காட்சிகளாக:

பிற்பகல் 2:00 மணி - VIP காட்சி
மாலை 4.00 மணி மற்றும்
மாலை 6.00 மணி காட்சிகள்

அனுமதி:

4:00 மணி
6:00 மணி காட்சிகளுக்கு
$10 மட்டுமே

தொடர்புகளுக்கு: (416) 732-1608 | (647) 770-7482 | (416) 669-6437



STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

# உக்ரைனில் இருந்து சொந்த ஊருக்கு திரும்பிய கோவில்பட்டி மாணவர்கள் மத்திய–மாநில அரசுகளின் நடவடிக்கை சிறப்பாக இருந்ததாக தகவல்

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா தொடுத்துள்ள போர் மிக தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் அங்குள்ள 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியாவை சேர்ந்தவர்கள் சிக்கி தவித்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக கல்வி பயிலச் சென்ற மாணவர்கள் அதிக அளவில் இருப்பது தெரியவந்ததைத் தொடர்ந்து. மத்திய அரசு அங்கு சிக்கியவர்களை மீட்கும் பணியை துரிதப்படுத்தி மீட்டு வருகிறது. உக்ரைன் அருகில் உள்ள நாடுகளின் எல்லைப்பகுதிக்கு வரவைத்து அங்கிருந்து விமானம் மூலமாக இந்தியாவிற்கு அழைத்து வரும் பணியை மத்திய அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

மேலும் உக்ரைனில் சிக்கி இருந்த தமிழக மாணவர்களை மீட்கும் வகையில் தமிழக அரசும், மத்திய அரசுடன் இணைந்து பல நடவடிக்கைகளை எடுத்து மாணவர்களை நாள்தோறும் மீட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கோவில்பட்டி பகத்சிங் தெருவை சேர்ந்த செல்வராஜ் & ராணி தம்பதியின் மகன் நவநீதஸ்ரீராம் உக்ரைன் வீனிஸ்டியா பகுதியில் உள்ள நேஷனல் மருத்துவக் கல்லூரியில் 5ம் ஆண்டு படித்து வருகிறார்.

அதே போன்று அதே கல்லூரியில் கோவில்பட்டி ஜோதிநகர் 2வது தெருவைச் சேர்ந்த ஸ்ரீதர்ரூபானு தம்பதியின் மகள் ஹரிணி 3ம் ஆண்டு படித்து வருகிறார்.

இதே போல இலுப்பையூரணி ஊராட்சிக்குட்பட்ட கணேஷ் நகரை சேர்ந்த பாலமுருகன் & கற்பகவள்ளி தம்பதியின் மகள் திவ்யபாரதி அதே கல்லூரியில் 5ம் ஆண்டு படித்து வருகின்றார்.

அது மட்டுமின்றி இவர்களுடன் 150க்கும் மேற்பட்ட தமிழக மாணவர்கள் படித்து வந்துள்ளனர். உக்ரைனில் போர் தொடங்கியதும் இவர்கள் தங்களை மீட்க வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை வைத்தனர். மாணவர் நவநீத ஸ்ரீராமுடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்பு கொண்டு பேசி அங்குள்ள நிலைமை குறித்து கேட்டறிந்தது மட்டுமின்றி தைரியாக இருக்க வேண்டும், அனைவரும் பத்திரமாக மீட்கப்படுவீர்கள் என்று உறுதி கூறினார்.

இதையடுத்து மத்திய, மாநில அரசுகளின் தொடர்நடவடிக்கை காரணமாக கடந்த மாதம் 26ந்தேதி ஒரு குழுவிற்கு 50 பேர் எனும் அடிப்படையில் பஸ் மூலமாக கிளம்பி 27ந்தேதி ருமேனியா நாட்டு எல்லைகைக்கு வந்தனர். அங்கு ஒரு நாள் முழுவதும் நீண்ட வரிசையில் நின்று எல்லையை கடந்து ருமேனியா நாட்டிற்குள்ளே சென்றதும் அங்கு தயாராக இருந்த இந்திய தூதரக அதிகாரிகள் மாணவர்களை பத்திரமாக அழைத்துச் சென்று அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளனர்.

மேலும் தமிழக அரசு ருமேனியாவில் தமிழ் மக்கள், சமூக நல அமைப்புகள் மூலமாக மாணவர்களுக்கு உணவு உள்ளிட்ட வசதிகளையும் செய்து கொடுத்தது.

கடந்த 3ந்தேதி அங்கிருந்து விமானம் மூலமாக கிளம்பி 4ந்தேதி டெல்லி வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து நேற்று சென்னைக்கு வந்தனர். பின்பு தமிழக அரசு சார்பில் மாணவர்கள் சொந்த ஊருக்கு செல்வதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர்.

கோவில்பட்டியை சேர்ந்த 3 மாணவர்கள், நெல்லை, தென்காசியை சேர்ந்த 2 மாணவர்கள் என 5 பேர் சென்னையில் இருந்து தூத்துக்குடி விமானநிலையத்திற்கு வந்தனர்.

பின்னர் கோவில்பட்டி மாணவர்கள் 3 பேரும் கார் மூலமாக சொந்த ஊருக்குத் திரும்பினர். உக்ரைனில் இருந்து மாணவர்கள் வீடு திரும்பும் வரையிலும் அனைத்து ஏற்பாடுகளையும் மத்திய, மாநில அரசுகள் சிறப்பாக செய்து மாணவர்களை வீட்டில் வந்து பெற்றோர்களிடம் ஒப்படைத்து விட்டு சென்றுள்ளன.

இது குறித்து கோவில்பட்டி மாணவர்கள் கூறியதாவது: போர் தொடங்கியது முதல் பதற்றம் அதிகமாக இருந்தது. ஒவ்வொரு மணிநேரம் நாங்கள் பதற்றத்தில் இருந்தோம். சிலநேரம் பதுங்கு குழியில் இருக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் மத்திய, மாநில அரசுகள் சிறப்பாக ஏற்பாடு செய்து எங்களை மீட்டு வந்துள்ளன. எவ்வித குறையும் இல்லாமல் அனைத்து வசதிகளையும் அரசு செய்து இருந்தது. மத்திய, மாநில அரசுகளுக்கு எங்களுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறோம். தொடர்ந்து எங்கள் கல்வியை தொடர மத்திய, மாநில அரசுகள் உதவி செய்ய வேண்டும்.

இவ்வாறு மாணவர்கள் கூறினர்.

மாணவர்களின் பெற்றோர்கள். கூறும்போது, தொலைக்காட்சியில் போர் செய்திகளை பார்க்கும் போது மிகுந்த மன வேதனையில் இருந்தோம். எங்கள் குழந்தைகள் மட்டுமல்ல, அனைவரும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும், இந்தியாவிற்கு திரும்ப வேண்டும் என்று நினைத்தோம். மத்திய, மாநில அரசுகள் சிறப்பாக நடவடிக்கை எடுத்து குழந்தைகளை மீட்டு வந்துள்ளன. மீதமுள்ள அனைவரையும் மீட்டு வர வேண்டும், இவர்களின் கல்வி தொடருவதற்கு அரசு உதவி செய்ய வேண்டும்.



இவ்வாறு பெற்றோர்கள் கூறினர்.

மீரான்குளம் மாணவர் வீடு திரும்பினார்

உக்ரைன் நாட்டில் மருத்துவ படிப்புக்கு சென்று நாடு திரும்ப முடியாமல் இருந்த மீரான்குளம் மாணவர் சாம் கில்டன் சனிக்கிழமை வீடு திரும்பினார். இதனால் அவருடைய பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

சாத்தான்குளம் அருகே உள்ள மீரான்குளத்தைச் சேர்ந்தவர் கலைச்செல்வன், பொனசீலி. ஆசிரியர்களான இவர்கள் மகன் சாம் கில்டன் உக்ரைன் நாட்டில் உள்ள மருத்துவ கல்லூரியில் 3ஆம் ஆண்டு படித்து வருகிறார். இதேபோல பனைக்குளத்தைச் சேர்ந்த மைக்கேல்ராஜ் மகன் பிளஸ்சிங் கடந்த 6 வருடங்கள் படித்து வருகிறார். இதற்கிடையே சாம் கில்டன் இந்தியா திரும்ப கடந்த பிப். 27ஆம்தேதி முன்பதிவு செய்திருந்தார். அதற்குள் உக்ரைன் நாட்டிற்கும் ர்யாவுக்கிடையே போர் மூண்டதனால் விமான நிலையம் உள்ளிட்ட



அனைத்து பகுதிகளும் முடங்கி வைக்கப்பட்டன. இதனால் சாம்கில்டன், பிளஸ்சிங் ஆகியோர் இந்தியாவுக்கு திரும்ப முடியாமல் போனது. அங்கு நடக்கும் போரால் மாணவர்கள் தவித்து வருவதாக மாணவர்களின பெற்றோர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், கனிமொழி எம்பி ஆகியோருக்கு கடிதம் எழுதினர். உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கவும் மத்திய அரசுக்கு வலியுறுத்தினர்.

இந்நிலையில் மத்திய அரசு ஆபரேஷன் கங்கா என்ற செயல் திட்டம் மூலம் உக்ரேனில் உள்ள இந்திய மாணவர்களை அருகிலுள்ள நாடுகளான ருமேனியா, ஹங்கேரி உள்ளிட்ட சில நாடுகளுக்கு வர செய்தனர். பின்னர் அங்கிருந்து விமானங்கள் மூலம் இந்தியா திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. மத்திய அரசு இந்திய மாணவர்களை பத்திரமாக மீட்க இந்திய தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களை பாதுகாப்பாக அழைத்து வர விமானங்கள் அனுப்பப்பட்டன.

இதையடுத்து இந்திய மற்றும் தமிழக மாணவர்கள் இந்தியா திரும்பிய வண்ணம் உள்ளனர். இந்நிலையில் சாம் கில்டன் உள்ளிட்ட தமிழக மாணவர்கள் மும்பை வந்து அங்கிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்ததையடுத்து அவர்கள் பாதுகாப்பாக அவரவர்கள் ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதன்படி சனிக்கிழமை மீரான்குளம் வீட்டிற்கு சாம்கில்டன் வந்து சேர்ந்தார். அவருக்கு பெற்றோர் உற்சாக வரவேற்பு அளித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதுகுறித்து மாணவர் சாம்கில்டன் கூறுகையில், உக்ரைனில் போர் நிலவி வரும் சூழ்நிலையில் நாங்கள் இந்திய தூதரகத்தை அணுகினோம். இந்திய தூதரக அதிகாரிகள் எங்களுடன் பேசி அருகிலுள்ள ருமேனியா நாட்டு எல்லைக்கு பாதுகாப்பாக வந்து சேரும்படி கூறினர். நாங்கள் தமிழக மாணவர்கள் 5 பேர் உட்பட 140 மாணவர்கள் உக்ரைனில் இருந்து ருமேனியா விற்கு 18 கிலோமீட்டர் தூரம் நடந்து வந்தோம். கடுமையான பனிப் பொழிவில் சுமார் 20 மணி நேரம் இருந்தோம் பின்னர் அங்கிருந்த இந்திய தூதரக அதிகாரிகள் எங்களுக்கு உணவு மற்றும் இருக்க இடம் அளித்தனர். ஒருநாள் அங்கு தங்கியிருந்தோம். பின்னர் அங்கிருந்து 200 பேர் விமானத்தில் மும்பை வந்தோம். அதன்பின் மும்பையில் இருந்து சென்னைக்கு விமானத்தில் வந்து தனி கார் மூலம் தமிழக அரசின் ஏற்பாட்டின்படி சொந்த ஊர் வந்து சேர்ந்தேன். நான் உள்ளிட்ட தமிழக மாணவர்களை நாடு திரும்ப செய்த மாநில, மாநில அரசுக்கு நன்றி என்றார்.

மற்றொரு மாணவரான பிளஸ்சிங் டெல்லி வந்துள்ளதாகவும், விரைவில் வீடு திரும்புவார் என்றும் தெரிவித்தார்.




# கவிஞர், பாடலாசிரியர், பொறியலாளர் திரு அகணி சுரேசு அவர்கள் கனடாவில் இருபத்தெட்டு (28) மணி நேரம் தொடர்ச்சியாகச் சொற்பொழிவாற்றி உலகச்சாதனை

- எஸ்.கே. குமரகுரு



கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி கவிஞர், பாடலாசிரியர், பொறியலாளர் திரு அகணி சுரேசு அவர்கள் கனடாவில் இருபத்தெட்டு (28) மணி நேரம் தொடர்ச்சியாக சொற்பொழிவாற்றி உலகச் சாதனை நிகழ்த்தினார்.

மல்ரி சுமார்ட் சொலுசன், ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கோர்ட்ஸ் இணைந்து மெய்நிகர் வழியில் நடத்திய உலகச் சாதனை நிகழ்விலேயே திரு அகணி சுரேசு அவர்கள் தொடர்ச்சியான நீண்ட பல்சுவை சொற்பொழிவாற்றி உலகச்சாதனை நிகழ்த்தினார்.

கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 11.00 மணிக்குத் தொடங்கி, தொடர்ச்சியாக உரையாற்றி 5ஆம் திகதி அதிகாலை 3.00 மணிக்கு நிறைவு செய்தார். இந்த இருபத்தெட்டு மணி உரையின்போது அவர் பல்வேறு விடையங்களை எடுத்து வந்து பொருத்தமான தலைப்புக்களில் பார்வையாளர்களுக்கு எடுத்துரைத்தார். தான் எழுதிவெளியிட்ட ஒன்பது நூல்களான வெகுளாமை, அன்புடைமை, இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள் போன்ற நூல்களில் எழுதிய விடையங்களையும், விஞ்ஞானம், மருத்துவம், கணனி, பொது அறிவு, திருக்குறள், சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரைப் பல்வேறு விடையங்களை தான் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளில் இருந்தும் ஆழமாகவும், அனைவருக்கும் புரியும்படியாகவும் எடுத்துரைத்தார். மேலும் பொறியலாளரான தான் எவ்வாறு எழுத்துலகில் பிரவேசித்தேன், தன்னைச் செதுக்கிவர்கள், தனது முதற் குருவான எழுத்தாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான தனது தாயார், தன்னை உருவாக்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தான் சந்தித்த ஆபத்துக்கள் என தனது சுயசரிதையை உருக்கமாகவும் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வை ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கோர்ட்ஸ் நிறுவனத்தின் பொறுப்பாளர், உலகச்சாதனைக்கான சான்றிதழ் வழங்குபவர் முனைவர் செ. வெங்கடேசன் அவர்கள் தொடக்கிவைத்தார். அவரது அமைப்பினர் தொடர்ந்து நிகழ்வைக் கண்காணித்து வந்தனர்.

கனடா தமிழ்க் கவிஞர் கழகத்தின் முன்னாள் தலைவர், உலகத் திருக்குறள் மையம் (சென்னை) திருக்குறள் இளைஞர் மையம், செம்பதிப்புக் குழு, மூதறிஞர் குழு ஆகியவற்றின் உறுப்பினரான அகணி சுரேசு அவர்களை கவிஞர்கள், எழுத்தாளர்கள், நண்பர்கள், பத்திரிகையாசிரியர்கள், தமிழ் அறிஞர்கள் எனப் பலரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

கடந்த மாதம் பேராசிரியர் செ.பானு ரேகா அவர்களுடன் இணைந்து மற்றொரு சாதனையை அகணி சுரேசு நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. அதாவது திருக்குறள் 133 அதிகாரங்களுக்கு 133 கவிஞர்கள் உலகம் முழுவதும் இணைத்து 133 மரபுக் கவிதைகளை எழுதவைத்து பதினான்கு மணி நேரம் தொடர்ச்சியாகப் பாடவைத்துச் சாதனை புரிந்தார்.

மேற்படி அகணி அவர்களின் உலக சாதனை தொடர் பலசுவை சொற்பொழிவு நிகழ்வுக்கு மருத்துவர் செந்தமிழ்செல்வி முருகேசன் அவர்கள் கலிபோர்னியாவில் இரிந்தும், பேராசிரியர் பானு ரேகா அவர்கள் தமிழ்நாட்டிலிருந்தும் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் கனடாவில் இருந்தும் இணைப்பாளர்களாகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA

3852 Finch Avenue East Suite 302 Scarborough, ON M1T 3T9



THE ASSOCIATION OF CANADIAN TAMIL POETS
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
சிறப்புச் சொற்பொழிவு : புறநானூற்றுக் காட்சிகள்

காலம்
12-03-2022 சனிக்கிழமை
கனடா (ரொறன்ரோ)
நேரம் காலை 10:15 மணி

குவியம் எண் : 81432662450
கடவுட்சொல் : 2022
தொடர்பு இல. :
416 272 5332, 647 224 8871

சொற்பொழிவாளர் : பேராசிரியர், இலக்கியமாமணி சே.பானு ரேகா

வரவேற்புரை — குமரகுரு கணபதிப்பிள்ளை, பொருளாளர்
தலைமையுரை — கந்த ஸ்ரீ பஞ்சநாதன், தலைவர்
நன்றியுரை — பவானி தர்மகுலசிங்கம், செயலாளர்

தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் பங்குபற்றலாம்!!, நன்றி


## வீணாவின் கவிக்கணை

பணம் கொண்டு பொருள் தேடலாம்,
ஆனால் நல்லமனதினை தேட முடியாது,
விலை கொண்டு வாங்கும் உள்ளம்
என்றுமே விலைமதிப்பானதாகாது
என்பது அதிசயமல்ல, அதில்
எதிர்பார்ப்பும் பேராசையும் மட்டுமே மிஞ்சும்,
விரும்பி வரும் அன்புக்கு விலகிச்செல்ல
மனமிருக்காது, தன்னலமின்றி
உன் நலம் காத்து வாழும்,
ஆனால் வற்புறுத்தி வாங்கும் அன்புக்கோ
என்றுமே ஆயுள் குறைவு, உன்
விழி நகர அதன் பிடி நகர்ந்திடும்.


Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
1.0% முதல் 1.5% வரை
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861


# அடுத்த தலைமுறை

சர்வதேச மகளிர் தினம், உலகளாவிய அனைத்து பெண்களின் உரிமை, பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் சாதனைகள், மற்றும் பெண்கள் அடைந்த உயரங்களை கொண்டாடும் ஒரு நாளாக நிறுவப்பட்டிருக்கிறது. 1911ல் தொடங்கி ஒரு நூற்றாண்டுற்கு மேல் கொண்டாடப்பட்டுவருகின்றது இந்த நாள், உலகில் உள்ள பல நாடுகளில் அதிகாரப்பூர்வமான விடுமுறை நாளாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக சில நாடுகளில் உள்ள பல வணிகங்கள், அரசு மற்றும் கல்வி நிறுவனங்கள், இந்த தினத்தை முன்னிட்டு மூடப்படுகின்றன. மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்படும் இந்த விடுமுறை, ஊதா, பச்சை, மற்றும் வெள்ளை ஆகிய மூன்று வண்ணங்களால் சிறப்பிக்கப்படுகின்றது. பெண்களின் சாதனைகளை அங்கிகரிக்கும் வேளையில், இந்த நாள் பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமைகளின் அங்கிகரிப்பின் முக்கியத்துவத்தை வளப்படுத்தும் நாளாகவும் உள்ளது.

அனைத்து தனிமனிதர்களின் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் பெண்கள் இருக்கின்றார்கள், சமூகத்திற்கு அவர்கள் ஆற்றும் பங்களிப்பை எதனாலும் ஈடுசெய்ய முடியாது. வரலாற்றில் பெண்ணின் துணிச்சலையும் புத்திசாலித்தனத்தையும் மற்றும் பல்வேறு துறைகளின் ஆற்றலையும் காண்கின்றோம். இந்தியாவின் சுதந்திரத்திற்காய் தமிழகத்தில் வேலு நாச்சியார் தில்லையாடி வள்ளியம்மை போலும், சிலப்பதிகாரத்தில் கண்ணகி போலும், மற்றும் புலவர் ஔவையார் பொலும் பல சிறந்த பெண்கள் இருந்தார்காள், இருக்கின்றார்கள். இந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் மூலமாக, அனைத்து பெண்களையும், எங்கள் கனடிய தமிழ் இளையசமூகத்தில், மற்றும் பல்வேறு துறைகளில் எடுத்துக்காட்டாக இருக்கும் பெண்களை முன்னிலைப்படுத்த விரும்புகின்றோம்.

அடுத்த தலைமுறை என்பது இளம் தமிழ் பெண்களின் சாதனைகளை முன்னிலைப்படுத்தும் ஒரு முற்போக்கான திட்டமாகும். ஒவ்வொரு பெண்ணும் தங்கள் சொந்த கலை வடிவத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள். இந்த திட்டத்தை வழங்க எங்கள் தயாரிப்பு குழுவுடன் இணைந்து பணியாற்றிய 7 பெண்கள், பின்வரும் படம் சித்தரிக்கிறது:

| | |
|---|---|
| அனோஜா ராஜேந்திரம் | - சமூக ஊடக உருவாக்குபவர் (ஊதா) @abrana_anoja |
| சுவேதா சந்திரகுமார் | - சிறு தொழில் அதிபர் (நீலம்) @__suvetha |
| ஆர்த்தி சத்தியன் | - கானா நடனக் கலைஞர் (பச்சை) @arthi_sat |
| ஆரணி பிரேமஹரன் | - கிப் கோப் நடனக் கலைஞர் (சிவப்பு) @aarani.22 |
| நில்ஷிகா சுவாமிநாதன் | - ஒப்பனையாளர் (வெளிர் ஆரஞ்சு) @nilshika.artistry |
| கனிஷ்ய கன்ஹேஸ்வரன் | - மிஸ் டொராண்டோ கிழக்கு மற்றும் சிறு வணிக உரிமையாளர் (மெரூன்) @kanishya.k |
| தர்மீகா மணிமாறன் | - பரதநாட்டிய நடனக் கலைஞர் (ஆரஞ்சு) @tharmeega |




இந்த திட்டத்தில் பங்கேற்ற அனைத்து பெண்களுக்கும் எங்களது நன்றிகளையும், அவர்களது சாதனைகளுக்கு எங்களது பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இளம் பெண்களின் திறமைகளை அங்கிகரிக்கும் அதே வேளையில், அவர்களின் சாதனைகளை அடையாளம் கண்டு இளைய தலைமுறையினரை ஊக்குவிக்க விரும்புகிறோம். எங்கள் தமிழ் இளைஞர்களை ஊக்குவிபத்துடன், எங்களது முயற்சியில் நமது தமிழ் கலாச்சாரத்தின் பல்வேறு அம்சங்களை, எங்கள் முயற்சிகளில் இணைக்க விரும்புகிறோம். இப்பொழுது, வெற்றியை நோக்கி அடி எடுத்து வைக்கும் எங்களது நாளைய பெண் தலைவர்களுக்கு எங்களது இனிய சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்கள்!

இவர்களுடன் சேர்த்து, அடுத்த தலைமுறை திட்டம் வெற்றியடைய உதவியவர்கள்:

**உற்பத்தி:**
@valavanthenalavan

**புகைப்படக்காரர்:**
@themidnightmedia

**காணொளி:**
@ashvinrudranlens

**ஒப்பனை கலைஞர்கள்:**
@sundarimakeup
தர்மீகா மணிமாறன்
நில்ஷிகா சுவாமிநாதன்

@adithya_mua
ஆர்த்தி சத்தியன்
ஆரணி பிரேமஹரன்

@jasmine_beauty_by_thanu
சுவேதா சந்திரகுமார்
கனிஷ்ய கன்ஹேஸ்வரன்

@blissbeautymuah
அனோஜா ராஜேந்திரம்

**புடவைகள் மற்றும் நகைகள்:**
@asiyans

**படைப்பு உதவியாளர்கள்:**
@niheathaaa
@arathie3

**மேடை உதவியாளர்:**
@abishek_kunchithapathan

**ஆதரவாளர்கள்:**
@instagramst8flexing
@ajithan




Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# மணியோசையில் மகிழ்ந்தோம் முன்னே! யானை இடிக்கப் போகிறது பின்னே!

**- சுரேன் சொர்ணலிங்கம் -**



**கொ**ர்னா வியாதி வாட்டி வதைத்த துன்பம், துயரம், இழப்புகள் என பலவகையாக வாடியவர்கள் நிலை கண்டு மனமுருகிக் கொள்கிறேன், இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மறுமுனையில் அரசு 2019இலிருந்து அள்ளிக் கொடுத்து, பணத்தை வாரி வழங்கியது. அதனைத் தொழிலாளர்கள், தொழிலைத் தொடர முடியாமல் தவிர்த்தவர்கள், முழு நேர வேலையைப் பகுதி நேர வேலையாக குறைக்கப்பட்டு வருவாயின் கணிசமான தொகையை இழந்தவர்கள் ஒரு புறம். மறுபுறம் சிறுதொழில்கள் புரிந்து வந்த பலரும் தொழிலில் வருவாய் விழுந்து, வாடகை கூட கட்ட முடியாது எனத் தவிர்த்தவர்கள், போக்குவரவுச் சேவையில் வருவாய் இழந்தவர்கள் மறுபுறம். இவ்வாறாக பல மில்லியன் மக்கள் தவித்த போது கனேடிய மத்திய அரசு, மாநில அரசுகள் சுமார் 8.5 மில்லியன் மக்களுக்கு பில்லியன் கணக்காகப் பணத்தை வாரி வழங்கியது.

இவ்வாறு வழங்கியபோது, கொர்னா நோயால் தவிக்கும் போது பலவி-தமான விசாரணைகள், ஆவணங்கள் பரிசீலனையைக் குறைத்து, நம்பிக்கையின் அடிப்படையில் வாரி வழங்கியது. தற்போது கனேடிய வருமானவரி இலாகா, முறை தவறிய முறையில் பணம் பெற்றவர்களை அடையாளம் காணத் தலைப்பட்டு விட்டது.

இங்கு மணியோசை அதாவது கனடா வருமானவரி இலாகாவிலிருந்து கேட்கிறது. ஆனால் பின்னர் அவர்கள் மக்கள் வரிப்பணத்திலிருந்து வாரி வழங்கப்பட்ட பணத்தை முறையானவர்கள் பெறுவதில் எந்தவித பிரச்சினையும் ,ன்றி கவலைப்படாமல் இருக்கும். ஆனால் முறைதப்பிய கொடுப்பனவுகள் பெற்றவர்களிடமிருந்து மீளப் பெற முயலலாம். அவ்வாறு முயலும் போது அசல் மட்டுமல்ல, அதற்கான தினமும் கணிக்கப்படும் வட்டி, சிலவேளை அதன் மேல் தெண்டமும் விதிக்கலாம். கிணறு வெட்டிய பின்பு குடி நீருக்குப் பதிலாகப் பூதம் தான் தோன்றிப் பதற வைக்கிறது.

இவ்வாறான சிக்கல்கள் வரும் போது பஞ்சணை மெத்தையில் படுத்துறங்க முனைந்தும், பேய்கள் உறங்கும் சாமத்தில் கூட நித்திரை வராது தவிப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். மறுமுனையில் தமது வீடுகள், பறிபோய் விடுமா? என்ற ஏக்கம், பீதி, பயம் ஏற்படுகிறது. இவற்றைவிட கிரடிட்காட் மூக்கு முட்ட காசைத் தந்து வட்டியை செலுத்தியும், முதல் பெருமலை போலக் குவிந்து காணப்படுகிறது. வீட்டை ரீமோட்கேஜ் பண்ணிய கடன் வேறு, கடனுக்கு வாங்கிய வீட்டுத் தளபாடங்களின் கடனைக் கட்டி கொள்ள முடியா நிலை. நிம்மதி கலைகிறது. சோர்வு ஏற்படுகின்றது. கவலை, தலைக்கு மேல் ஏறிவிட்டது.

கவலையை விடுங்கள், என்னை நாடுங்கள். கடனைப் பெருமளவு கரைப்போம். இருளை அகற்றுவோம். உதயசூரியன் உதிக்கப் போகிறான். ஆனந்தம் திருநடன-மாடப் போகிறது. மணியோரசயின் இனிமையில் ஊஞ்சலாடுவோம்.

உங்களுக்கு நான், கொன்சும புறப்போசல் எனும் விதிமுறையூடாக சுமார் எண்பது வீதமளவில் கட்டி 20 வீதம் அளவில் செலுத்தி நிம்மதியாக வாழலாம். உங்களுக்கு கிரடிட்காட் மற்றும் லைன் ஒப் கிரடிட், தனியார் கடன், வருமானவரி இலாகாவிற்குச் செலுத்த வேண்டிய எச்எஸ்ரி, வருமான வரி கட்டத் தவறிய தனியார் கடன், வாகனக்கடனின் மறுபக்கம் எனவும் வீடுகளில் கடன் வழங்கியதால், வீடு பறிமுகமாகும் போது கடன் வாங்கியவரால் ஏற்படுத்தப்படும் கடன் என மலைமேல் கடனை, சூரியனைக் கண்ட பனிபோல் கரைக்க முடியும். ஒருவரும் ஒரு லட்சம் கடன் பழுசுமை இருக்குமாயின் சுமார் எண்பதாயிரம் டொலர் வரை கரைக்கப்பட்டு இருபதினாயிரம் மட்டும் செலுத்தி நிம்மதியாக வாழ முடியும். இங்கு அனைத்தும் சட்டதிட்டங்களின் அனுசரணையுடன் செயல்படுத்தப்படும். இங்கு அரசும் கூட விழுந்தவர்கள் சோர்ந்து விடக் கூடாது என தூக்கி விடுகிறது.

குறிப்பாக கனடாவின் பொருளாதாரத்தில் சிறுதொழில் பெரிய பங்கைக் கொண்டுள்ளது. எமது சமுதாயம் போல் புதிய குடிவரலாளர்கள் மத்தியில் சிறுதொழில்கள் அதிகமாகக் காணப்படுகிறது. அவற்றினை கஸ்டப்படுமிடத்து அரசு இவ்வாறான உதவிகளைச் செய்து வருகிறது. அதனைவிட தனிமனிதர்கள், குறிப்பாக கீழ்மட்ட மத்திய வகுப்பினர்கள் பொருளாதார நிலையில் தடக்கி விழுந்த போது அவர்களையும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது அரசு, தனது தார்மிக கடமைகளில் ஒன்றாகக் கணித்துச் செயல்படுகிறது.

இங்கு இவ்வாறான பதிவு செய்வதற்கும் வங்குரோத்து ஒரு வகையில் ஒரு நோயை குணப்படுத்த சத்திர சிகிச்சை செய்ததாக இருக்கலாம். அதனால் சொந்த வீடு போன்ற சொத்துக்களுக்கு பாதிப்புகள், இழப்புகள் ஏற்படலாம். அத்தோடு குடி-வரவு, குடியகல்வு விடயங்களிலும் குறிப்பிட்ட காலம் தங்கு தடைகள் ஏற்படலாம். ஆனால் இந்த கொன்சூம புறப்போசல் எனும் திட்டத்தின் கீழ் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படப் போவதில்லை. அன்றாட இயல்பு நிலையில் சத்திரசிகிச்சைக்குப் பதில் சி-றிய மருத்துவ சேவைகளூடாக குணமாக்கப்படலாம்.

இந்த வகையில் பலவகையான கடனைக் கரைக்கும் வழிவகைகளை கையாளமுடியும். இந்த நிலையை நாடி இருப்பவர்கள் என்னை நாடுங்கள். நான் குறு-கிய காலத்தில் கூடியளவு கடன்களைக் கரைத்துக் குலைந்து போன நிலையிலிருந்து மீண்டும் மகிழ்வான வாழ்வில் காலடி வைக்க அந்த மாளிகையின் கதவுகள் திறக்கப்படுகிறது.

என்னைப் பொறுத்தவரை இந்தத் துறையில் பலவருடங்கள் பல கோணங்களிலிருந்து பலவிதமான கடன் பளுக்களை கரைத்த அனுபவம், ஆற்றல், பெருமுதலீடாக இருக்கிறது. நான் கூடிய வரை ஒவ்வொருவரது நிலைப்பாட்டினை தீர அலசி ஆராய்ந்து பல கோணங்களிலிருந்து அணுகி, குறைந்த செலவுடன் நிறைந்த பலன் பெறுவதில் அக்கறையோடு செயல்பட்டு வருவதினால் பலரது பாராட்டுக்களைப் பெற்றமை ஓர் ஊக்குவிப்பு. அத்தோடு நாளாந்தம் நாட்டின் பொருளாதார நிலை, வட்டிவீத உயர்வுகள், பணவீக்கம் போன்ற பலதுறைகளினால் ஏற்பட்டு வரும் தாக்கங்களையும் அதன் எதிர்கால தொலைநோக்கும் கொண்டு செயல்பட்டு வருவதென்பது முக்கியமானதாகக் கருதப்படுவதினால், நா-ளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக அவதானித்து செயல்படுவதினால் உங்களுக்கு கூடியளவு திருப்திகரமான சேவைகளை நல்க முடியுமெனற் நம்பிக்கை உண்டு.

தற்போது கனடாவின் வாழ்க்கைச் செலவு பெருமளவு அதிகரித்துள்ளது. கடந்த முப்பது வருடங்களில் பணவீக்கமானது 5வீதம் மேலாக ஏறிவிட்டது. அத்துடன் உக்கிரேனிய - ரசிய யுத்தத்தினால் பல ஏற்றுமதிகள் தடைப்பட்டுள்ளன. இறக்குமதிகள் குறிப்பாக ரசியாவிலிருந்து தரப்படுத்தப்படும் பெற்றோல் கனடாவினால் தடைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்குமிடத்து வாகனங்கள் வைத்திருப்பவர்கள் மட்டுமல்ல, மனிதவாழ்வின் ஒவ்வொரு கொள்வனவிலும் பாதிப்பு முத்திரையைக் குற்றியுள்ளது. உதாரணமாக காய்கறி, இறைச்சி, மீன் சந்தையில் விலை ஏற்றம், உடுபுடவை அங்காடி, வாகனக் கொள்வனவு எனப் பலவற்றின் கட்டணங்கள் உயரத் தொடங்கி விட்டன. ஆனால் வருவாய் ஏற்றம் ஈடு செய்வதாக இல்லை. பதிலாகப் பொருளாதாரம் மந்த நிலையில் இருப்பதினால், ஒளிமயமான எதிர்காலம் தள்ளிப் போகிறது.

இவ்வாறான சூழலில் செய்யும் வெள்ளம் வரமுன்பு அணைகட்டுவோம். அதனால் நாம் எதிர்காலத்தில் வாழ்வை வளம்படுத்த முடியும். இவ்வாறன வேளை உங்களுக்கு இந்த வருமானவரி 2021 தாக்கம் செய்து கொள்ளும் இவ்வேளை பல விதமான ஆலோசனைகளையும் வழங்கி கொள்ளத் தயாராக இருக்கிறேன். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவும்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# சீனா, உக்ரைனில் இருந்து திரும்பிய ஒரு லட்சம் இந்திய மாணவர்களின் கல்வி ? இந்திய அரசின் முடிவுக்காக காத்திருப்பு



ரஷ்யா உக்ரைன் இடையே நடந்துவரும் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களை இந்தியாவுக்கு அழைத்துவரும் பணி நடந்து வருகிறது. இதில், இந்தியாவுக்கு திரும்பிய மாணவர்களில் பலர் இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு படிப்புகளை முடித்த நிலையில், மருத்துவப் படிப்பின் பாதியைக் கடந்துவிட்டு மீதி படிப்பை எப்படி முடிப்பது என்று தெரியாமல் தவித்து வருகின்றனர்.

ஏறக்குறைய 20,000 மாணவர்கள் இந்த நிலையில் உள்ளனர்.இதுதவிர, 2020ம் ஆண்டு கரோனா வைரஸ் பரவியபோது, சீனா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளில் மருத்துவம் பயின்று வந்த மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். இந்தியா திரும்பிய அந்த மாணவர்கள் மீண்டும் அந்த நாடுகளுக்கு திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர். இந்திய மாணவர்கள் மீண்டும் படிப்பை தொடர அந்நாடுகள் விசா வழங்க மறுத்து வருவதால் செய்வதறியாது திணறி வருகின்றனர். உக்ரைனில் இருந்து திரும்பியவர்களுடன் இந்த மாணவர்களையும் சேர்த்து மொத்தம் ஒரு லட்சம் மாணவர்கள் நட்டாற்றில் நிற்கின்றனர்.இவர்களுக்கு இந்தியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்து எஞ்சிய படிப்பை முடிக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாணவர்கள் தரப்பிலும், பெற்றோர் தரப்பிலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால், இவர்களை இங்குள்ள மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்க வேண்டும் என்றால் தற்போதுள்ள இடங்களைவிடக் கூடுதலாக இடங்களை உருவாக்கி சேர்க்கும் வகையில் மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும். தேசிய மருத்துவ ஆணையம்(என்எம்சி), மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் சார்பிலும் ஒப்புதல் வழங்க வேண்டும்.கல்வித்தரம் என்னவாகும்?அப்படியே அவர்களை சேர்த்தாலும், இங்குள்ள ஆசிரியர் மாணவர் விகிதம் பாதிக்கப்படும். மருத்துவக் கல்லூரியின் தரம் கேள்விக்குறியாகும் என்று எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. வெளிநாடுகளில் ஏற்கெனவே மருத்துவப் படிப்பை முடித்து இங்கு நடத்தப்படும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறாமல் பலர் உள்ளனர். அவர்களையும் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை எழும். அப்படி செய்தால் இங்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும் என்று எதிர்ப்பு கிளம்பியுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்களை என்ன செய்வது என்று தெரியாமல் அனைத்து தரப்பினரும் தவித்து வருகின்றனர்.

இதற்கிடையே, பெற்றோர் சிலர் போலந்து போன்ற சாத்தியமுள்ள நாடுகளில் எஞ்சிய படிப்பை தொடர மத்திய அரசு உதவ வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளனர். இந்தக் கருத்தை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தமிழக சுகாதாரத்துறை செயலர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சீனா, கிர்கிஸ்தான் போன்ற நாடுகளில் மருத்துவ படிப்புகளில் சேர வேண்டாம் என்று தேசிய மருத்துவ ஆணையம் மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.இருந்தாலும் இப்போது பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு என்ன வழி என்ற கேள்வி எழுந்துள்ளது. கர்நாடக நிகர்நிலை பல்கலைக்கழக கூட்டமைப்பு சார்பில், பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில், 'மாணவர்கள் நலன் கருதி உக்ரைனில் இருந்து திரும்பிய மாணவர்களை எங்கள் கல்லூரிகளில் தலா 25 பேர் வீதம் சேர்த்துக் கொள்ள தயாராக இருக்கிறோம். இதற்காக மத்திய அரசு நிர்ணயிக்கும் நியாயமான கட்டணத்தை வசூலித்துக் கொள்கிறோம். அதற்கு மத்திய அரசு விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு சிறப்பு நேர்வாக மாணவர் சேர்க்கைக்கு அனுமதி அளிக்க வேண்டும்' கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வளைகுடா வாய்ப்புவளைகுடா மருத்துவ பல்கலைக்கழகமும் இந்திய மாணவர்களை சேர்த்துக் கொள்ள முன்வந்துள்ளது. இதற்கும் தேசிய மருத்துவ ஆணையம் உள்ளிட்ட அமைப்புகள் சம்மதித்தால் மட்டுமே இந்த முயற்சி சாத்தியமாகும். உக்ரைனில் ரூ.15 17 லட்சம் அளவில் மாணவர்களால் படிப்பை முடிக்கலாம். ஆனால், வளைகுடா நாடுகள், ஜெர்மனி போன்ற இடங்களில் மருத்துவ படிப்புக்கு 60 முதல் 90 லட்சம் ரூபாய் வரை செலவழிக்க வேண்டும். அதற்கு மாணவர்கள் தரப்பில் தயாராக இருக்க வேண்டும். இதுபோன்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள வாய்ப்புகளை மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது. மத்திய அரசின் முடிவுக்காக ஒரு லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் காத்திருக்கின்றனர்.

# ”என் மகன் விவசாயத்தில் ஈடுபடுவார்” பேரறிவாளனின் தயார் அற்புதம்மாள் நெகிழ்ச்சிப் பேட்டி



விவசாயத்தில் முழு ஈடுபாடு கொண்டுள்ள என் மகன், தற்போது பொருளாதார வசதி இல்லாததால் வரும் காலங்களில் கண்டிப்பாக விவசாயத்தில் ஈடுபடுவார்'' என்று பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தெரிவித்தார். திருப்பத்துபர் மாவட்டம், ஜோலார்பேட்டையை சேர்ந்தவர் பேரறிவாளன் (52). முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகளுக்கு முன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆயுள் தண்டனை கைதியாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த பேரறிவாளனுக்கு, சிறுநீரக தொற்று, மூட்டு வலிக்கு மருத்துவ சிகிச்சை பெற இருந்ததால் கடந்த ஆண்டு மே 28ம் தேதி ஒரு மாதம் பரோல் வழங்கப்பட்டது. இதையடுத்து, ஜோலார்பேட்டையில் உள்ள வீட்டுக்கு பேரறிவாளன் அழைத்து வரப்பட்டார். சிறைத்துறை உத்தரவுபடி தினமும் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் அவர் கையெழுத்திட்டு வந்தார். வீட்டில் இருந்தபடியே சிறுநீரக தொற்றுக்கான சிகிச்சையை அவர் எடுத்து வந்தார்.

மருத்துவர்களின் ஆலோசனை பேரில் அவ்வப்போது சென்னை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு நேரில் சென்று சிகிச்சை பெற்று வந்தார். தொடர் சிகிச்சையில் இருப்பதால் பேரறிவாளனுக்கு ஒவ்வொரு மாதம் இதுவரை 9 முறை அவருக்கு பரோல் நீடிக்கப்பட்டது. இந்நிலையில், பரோலில் வந்த பேரறிவாளனுக்கு உச்ச நீதிமன்றம் நேற்று ஜாமீன் வழங்கி தீர்ப்பளித்தது. இது குறித்து பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் பத்திரிகையாளரிடம் இன்று கூறியது: ''என் மகனுக்கு உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது, 30 ஆண்டுகால போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். மேலும், சிறுநீரக தொற்றால் அவதிப்பட்டு வந்த என் மகன் உடல்நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு பரோல் நீடிப்பும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. தொடர்ந்து பரோல் நீட்டிக்கப்பட்டதால் எங்கள் அரவணைப்பில் இருந்த என் மகனுக்கு தற்போது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஒரு மனிதரோட வாழ்க்கையில் 30 ஆண்டுகள் என்பது எவ்வளவு பெரிய காலம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஜாமீன் வழங்கியதை தொடர்ந்து என் மகன் சுதந்திரமாக நடமாடுவார் என்பதில் எங்கள் குடும்பத்தாருக்கு மகிழ்ச்சியளிக்கிறது. என் மகனுக்காக நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள், அவரது படிப்பு, நன்னடத்தை, இத்தனை ஆண்டுகாலம் சிறை தண்டனை, உடல்நிலை இதையெல்லாம் காரணம் காட்டி ஜாமீன் வழங்க வேண்டும் என கேட்டிருந்தனர். ஏற்கெனவே நான் பலமுறை சொல்லி இருந்தேன், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைக்கும், என் மகனுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று. ஆனால் அதை யாரும் நம்பவில்லை. என் மகன் சட்டப்படி போராடினார். அடுத்தது, அவரது விடுதலையை நாங்கள் விரைவில் எதிர்பார்க்கிறோம்.

என் மகனின் விடுதலைக்காக அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என அனைவரும் குரல் கொடுக்கின்றனர். ஜாமீன் கிடைக்க மிகவும் உறுதுணையாக இருந்த தமிழக அரசுக்கும், வழக்கறிஞர்களுக்கும், ஊடகத்துறையினருக்கும் என நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.என் மகனுக்கு விரைவில் திருமணம் செய்ய ஏற்பாடு செய்து வருகிறோம். மேலும், விவசாயத்தில் முழு ஈடுபாடு கொண்டுள்ள என் மகன், தற்போது பொருளாதார வசதி இல்லாததால் வரும் காலங்களில் கண்டிப்பாக விவசாயத்தில் ஈடுபடுவார்'' என்று அவர் கூறினார்.

இதைதொடர்ந்து, பேரறிவாளன் வழக்கறிஞர் சிவக்குமார் கூறும்போது, ''கடந்த 32 ஆண்டுகளாக பேரறிவாளன் தான் ஒரு நிரபராதி என போராடி வந்தார். அதற்கான ஆதாரங்களுடன் அவர் நீதிமன்றத்தை நாடினார். அதன்படி தற்போது பேரறிவாளனுக்கு ஜாமீன் கிடைத்துள்ளது. இது அவரது தொடர் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாக பார்க்கிறோம். விரைவில் விடுதலை கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்'' என்றார்.

# உத்தரப் பிரதேசதில் 15 ஆண்டுகளில் முதல்வர் ஆகும் முதல் எம்எல்ஏ யோகிக்கு இன்னொரு சிறப்பு

உத்தரப் பிரதேச மாநிலத்தில் 15 ஆண்டுகளில் முதல் முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. ஒருவர் முதல்வர் ஆகிறார். அந்தச் சிறப்பை முதல்வர் யோகி ஆதித்யநாத் பெறுகிறார். நடந்து முடிந்த 5 மாநிலங்களுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. உத்தரப் பிரதேசத்தில் ஆளும் பாஜக ஆட்சி அமைப்பதற்கான தனிப்பெரும்பான்மை பெற்று வருகிறது. இந்த நிலையில், அம்மாநிலத்தின் முதல்வராக யோகி ஆதித்யநாத்தே தொடர்வார் என பாஜக அறிவித்துள்ளது. இதன் மூலமாக இரண்டாவது முறையாக யோகி ஆதித்யநாத் அம்மாநில முதலமைச்சர் ஆகிறார்.

பொதுவாக, ஒரு மாநிலத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை முதல்வராகத் தேர்ந்தெடுப்பர் அல்லது கட்சியின் தலைவரே முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். சில மாநிலங்கள் இந்த வழக்கத்திலிருந்து மாறுப்பட்டிருக்கின்றன. காரணம், அந்த மாநிலங்களில் சட்டமன்ற மேலவை என்ற ஒன்று இருக்கிறது.உத்தரப் பிரதேசத்தில் கடந்த முறை முதல்வராக யோகி ஆதித்யநாத் பொறுப்பேற்றுக் கொண்டபோது, அவர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை.

முதல்வராக அவர் பாரதிய ஜனதா கட்சியால் அறிவிக்கப்பட்ட பின்னர், சட்டமன்றத்தின் மேலவை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.ஆனால், இந்த முறை அவர் கோரக்பூர் நகர சட்டமன்றத் தொகுதியில் தேர்தலில் போட்டியிட்டார். இதற்கு முன்பு கோரக்பூர் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து 5 முறை அவர் எம்பியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.சமாஜ்வாடி கட்சியின் அகிலேஷ் யாதவிற்கும் இந்தத் தேர்தல் முதல் சட்டமன்றத் தேர்தலாகும். அக்கட்சியின் முதல்வர் வேட்பாளராக அவர் களம் கண்டார். ஆனால், இந்த முறையும் பாஜகவின் முதல்வர் வேட்பாளராக ஆதித்யநாத் முன்நிறுத்தப்படவில்லை. உத்தரப் பிரதேச மாநிலத்தில் தனிப்பெரும்பான்மையை பாஜக பெற்றுவரும் நிலையில், இரண்டாவது முறையாக அம்மாநிலத்தின் முதல்வராக யோகி ஆதித்யநாத்தே தொடர்வார் என பாஜக தெரிவித்துள்ளது.

இதன் மூலம், கடந்த 15 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட எம்எல்ஏ ஒருவர் முதல்வராக பொறுப்பேற்க உள்ளார். முன்னதாக, 1999க்கு முன்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் முதல்வராக பொறுப்பு வகித்திருந்தார். பாஜகவைச் சேர்ந்த ராம் பிரகாஷ் குப்தா 1999ம் ஆண்டு சட்டமன்ற மேலவை மூலமாக முதலில் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின் முதல்வரானவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை.



திரு. எஸ். கனகராசா

# சிரேஷ்ட பிரஜைகள் நாட்டுக்கு வளம் என்பதை நிருபித்தவர் அமரர் கனகராசா

**- சபையில் தவிசாளர் நிரோஷ் இரங்கல்**

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் முதியோர்களின் நலவாழ்வு தொடர்பில் அக்கறையுடன் செயற்பட்ட முதியோர் சங்கத் தலைவரும் சிரோஷ்ட பிரஜையுமான சுப்பிரமணியம் கனகராசா அவர்களின் இழப்பிற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உத்தியோகபூர்வமாக அஞ்சலிக்கின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இறுதியா இடம்பெற்ற சபையின் விசேட அமர்வில் அன்னாருக்கு அஞ்சலியைத் தெரிவிக்கும் முகமாக கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும், அமரர் சுப்பிரமணியம் கனகராஜா அவர்கள் எம்மை விட்டுப் பிரிவடைந்துள்ளார். அவர் எமது பிரதேசத்தில் முதியோரின் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு சிரோஷ்ட பிரஜைகளின் நலவாழ்விற்கான பல விடயங்களைச் சாதித்து இருக்கின்றார்.

வலிகாமம் கிழக்கில் சிரோஷ்ட பிரஜைகள் ரம்யமாகவும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வாழவேண்டும் என தன் உடல் நலனையும் பாராது சிந்தித்துச் செயற்பட்ட ஓர் கல்வியாளர் ஆவராவார். சிறுப்பிட்டியில் முதியோர் சங்கத்தின் தலைவராக நல்ல பல காரியங்களை நிறைவேற்றியுள்ளார். அவர் சிரேஷ்ட பிரஜைகளின் நலவாழ்வு தொடர்பில் சகல அரச திணைக்களங்களுடனும் கடிதத்தொடர்பு வாயிலாகவும் தொலைபேசி வாயிலாகவும் தொடர்புகளைப் பேணியவர். சிறந்த ஆங்கிலப் புலமையும் கல்விப் புலமையும் மிக்க அதிபருமாவார்.

அவர் ஏற்கனவே சி.வை. தாமோதரம்பிள்ளை நற்பணி மன்றம் உள்ளிட்ட பல தாபனங்களினால் கௌரவிக்கப்பட்டவராவார். தான் ஒரு மூத்த பிரஜையாக இருந்து இள நிலையாளர்களை வழிநடத்தும் தன்னலமற்ற ஆளுமை அவரிடம் காணப்பட்டது.

பிரதேச சபையின் ஒவ்வொரு அபிவிருத்தி விடயத்திலும் அவர் அக்கறை கொண்டிருந்தார். தவிசாளரான எனக்கும் ஏனைய பல உறுப்பினருக்கும் அடிக்கடி வழிகாட்டல்களை தொலைபேசி ஊடாக வழங்கும் ஓர் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய வலிகாமம் கிழக்கின் பொக்கிசத்தினையே நாம் இழந்திருக்கின்றோம்.

சின்னச்சின்ன மாற்றங்கள் பல முன்னேற்றங்களை எம்மிடத்தில் கொண்டு வரும் என அரச உத்தியோகத்தர்கள் முதல் சமூக அமைப்புக்களின் தலைவர்கள் வரையில் அவர் தெரிவித்து குறை நிறைகளைச் சுட்டிக்காட்டும் அவர் போன்ற பெரியவர்களை இழப்பது வேதனைக்குரியது.

முதியவர்கள் வாழும் போதே கௌரவமளிக்கப்பட வேண்டும் என பலதடவைகள் வலிகாமம் கிழக்கில் முதியோர் தினத்தினை வருடாவருடம் சிறப்புற நடத்தியவர். சிரேஷ்ட பிரஜைகளின் உரிமைக்காகவும் செயற்பட்டவர். சிரேஷ்ட பிரஜைகள் ஓய்வூதியர்கள் நாட்டுக்குச் சுமையாகக்கூடாது வளமாக அமையவேண்டும் என உழைத்த நல்ல மனிதரை இழந்துள்ளோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# அஸ்வமேத யாக பலன் தரும் மாசி வளர்பிறை ஏகாதசி

**தன்வந்திரி பீடத்தில் மூலவர் தன்வந்திரி பெருமாளுக்கு நெல்லிப் பொடி திருமஞ்சனம் 14.3.2022 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறுகிறது**



இராணிப்பேட்டை மாவட்டம். வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு முரளிதர ஸ்வாமிகளின் அருளாணைப்படி வருகிற 14.3.2022, திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு 9 அடி மூலவர் தன்வந்திரி பெருமாளுக்கு நெல்லிப்பொடி மற்றும் நவக்கலச திருமஞ்சனம் பல்வேறு மூலிகைக் கொண்டு மஹா தன்வந்திரி ஹோமாம் நடைபெறுகிறது.

**தன்வந்திரி பகவானை வழிப்பட்டால் கிடைக்கும் பலன்கள்**

நோயற்று வாழட்டும் உலகு என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு உலக ஆரோக்ய பீடமாக திகழும் தன்வந்திரி பீடத்தில் நோய்களை போக்குவதற்கான, நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்காகவும், நீண்டகால நோயயெல்லாம் தீர்த்து, ஆரோக்கியத்தை பெருவதற்கும் வாலாஜாபேட்டை தன்வந்திரி பீடத்தில் தன்வந்திரி பெருமாளுக்கு ஆலயம் அமைத்து ஹோம பூஜைகள் நடைப்பெற்று வருகிறது தன்வந்திரி பகவானை ஏகாதசி நாட்களில் வழிபாடு செய்வது மிகவும் சிறப்பு என்கிறார் ஸ்தாபகர் முரளிதர ஸ்வாமிகள்.

புராணங்களில் தேவர்கள் மற்றும் அசுரர்கள் இறவா நிலை தரும் அமிர்தத்தை பெற பாற்கடலை கடைந்தபோது இறுதியாக மகாவிஷ்ணுவின் அம்சம் கொண்டவரான தன்வந்திரி பகவான் மனிதர்கள், தேவர்கள், அசுரர்கள் என அனைவருக்கும் இறவா நிலையை தரும் அமிர்த கலசம் மற்றும் நோய்களை போக்கும் பல மருத்துவ மூலிகைகளுடன் தோன்றினார்.

நோய்களை போக்கி, உடல்நலத்தை காக்கும் மூலிகைகளை உலகத்தாரின் பயன்பாட்டிற்கு வெளிக்கொணர்ந்ததால் தன்வந்திரி பகவானை மருத்துவக்கடவுளாக வணங்கப்படுகிறார். இவரை மருத்துவதுறையின் தந்தை என்றும் காக்கும் கடவுள் என்றும் அழைத்து மகிழ்கின்றனர்.

தன்வந்திரி விரதம் மேற்கொள்வதற்கு சிறந்த தினமாக ஏகாதசி தினத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்த விரத நாளன்று வறியவர்களுக்கு வஸ்திர தானம் செய்தாலும் யமனை குறித்து துதிக்கப்படுகிற யமாஷ்டக துதி படிப்பதாலும் கொடுமையான நோய்கள் நம்மை பீடிக்காமல் மரணங்கள், துர்மரணங்களில் இருந்து மீண்டு, தீர்க்கமான ஆயுளை பெற முடியும் என்பது நம்பிக்கை. மேலும் மாசி மாத ஏகாதசி திதியில் விரதமிருந்து தன்வந்திரி வழிபாடு செய்வதின் மூலம் பிரம்மஹஸ்தி தோஷம் நீங்கும், மூதாதையர்களுக்கு மோட்சம் கிடைக்கும், மன உளைச்சல் நீங்கும் அஸ்வமேத யாகம் செய்த பலனைத்தரும். இந்த ஏகாதசி விரதத்தைப் பற்றி, சிவ பெருமானே பார்வதி தேவியிடம் எடுத்துக்கூறியதாக புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க ஏகாதசி நாளில் தன்வந்திரி பீடத்தில் பால், தயிர், நெல்லிப்பொடி, அருகம்புல் சாறு, கரும்பு சாறு, கஸ்தூரி மஞ்சள், சந்தனம் ஏலக்காய் தீர்த்தம், பஞ்சாமிருதம் போன்ற விஷேச திரவியங்களைக் கொண்டு நவக்கலச திருமஞ்சனம் மற்றும் விலை உயர்ந்த மூலிகைகள் கொண்டு நடைபெறும் ஹோமங்களிலும் கலந்து கொண்டு இறையருள் பெற அன்புடன் அழைக்கின்றோம். இந்த தகவலை தன்வந்திரி குடும்பத்தினர் தெரிவித்தனர்.

Blessings from,
"Yagnasri Kayilai Gnanaguru" Dr. Sri Muralidhara Swamigal
FOUNDER
Sri Danvantri Arogya Peedam
04172-230033, 09443330203
**"நோயற்று வாழட்டும் உலகு"**

# சென்னையை உலகத்தரம் வாய்ந்த நகரமாக மாற்றுவதே தனது இலக்கு என்கிறார் மேயர் பிரியா

இந்தியா செய்திகள் India News




சென்னை மாநகராட்சியின் புதிய மேயராக பதவியேற்றுள்ள பிரியா தனது திட்டம் குறித்து பேசியுள்ளார். நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை தொடர்ந்து சென்னை மாநகராட்சியின் மேயராக திருவிக நகர் 74-ஆவது வார்டு உறுப்பினர் பிரியா ராஜன் மார்ச் 4 வெள்ளிக்கிழமை அன்று பதவியேற்றுக்கொண்டார்.

அரசியல் குடும்ப பின்னணியை கொண்ட பிரியா ராஜன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்கை சிவத்தின் பேத்தி. பிரியாவின் தந்தை ராஜன் திரு. வி.க. நகர் திமுக பொறுப்பாளராக பதவி வகித்து வருகிறார். 28 வயதான பிரியா ராஜன் சென்னை பல்கலைக்கழகத்தில் எம்.காம் படித்துள்ளார். சென்னை மாநகராட்சி வரலாற்றில் தாரா செரியன், காமாட்சி ஜெயராமன் வரிசையில் மூன்றாவது பெண் மேயர், முதல் தலித் சமூக பெண் மேயர் என்ற பெருமைக்கு சொந்தக்காரரான பிரியா ராஜன் தனது பணியை எப்படி செய்யப்போகிறார் சென்னை மக்கள் ஆர்வமுடன் காத்திருக்கின்றனர். குறிப்பாக வடசென்னை பகுதியை சேர்ந்த பிரியா ராஜன் வட சென்னை மக்களுக்காக சென்ன செய்யப்போகிறார் என்று ஆர்வமுடன் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர், தன்னை நம்பி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாபெரும் பொறுப்பை வழங்கியுள்ளதாக தெரிவித்தார். அதனால் சென்னை மாநகராட்சியை உலகத்தரம் வாய்ந்த நகராக மாற்றுவதே இலக்கு என்றும் குறிப்பாக வட சென்னை மக்களின் முக்கிய பிரச்னையான மழைநீர் தேக்கம், சுகாதார மேம்பாடு, கல்வி வளர்ச்சி ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்போவதாக கூறியுள்ளார்.

சென்னை 45 புத்தகக் காட்சி 2022

# சென்னை புத்தகத் திருவிழா – 2022

- குரு அரவிந்தன்

புத்தகத் திருவிழா என்றதும் பழைய ஞாபகங்கள் சில காட்சியாய் மனதில் ஓடின. எங்க மாணவப் பருவத்தில் இலக்கிய ஆர்வமுள்ள ஒவ்வொருவர் வீட்டிலும் சிறிய நூலகம் கட்டாயம் இருக்கும். அது அறை முழுவதும் பரப்பப்பட்டும் இருக்கும், அல்லது ஒரு அலுமாரிக்குள் அடங்கியதாகவும் இருக்கும். பாடசாலைகளிலும், சனசமூக நிலையங்களிலும் நூலகங்கள் இருந்தன. வீடு தேடியும் இதழ்கள் வரும். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு எங்கள் அடையாளங்களை அழிக்க முற்பட்ட சம்பவங்களும் அவ்வப்போது நினைவில் வந்து போகும். வாசிப்பு என்பது எங்கள் பெற்றோர்கள் எங்களுக்குத் தந்த கொடைகளில் ஒன்றாகும்.

சின்ன வயதில் இருந்தே சிறுவர் இலக்கியத்தில் இருந்து சிறந்த புத்தகங்களை தேர்ந்தெடுத்துத் தந்ததால் நாங்களும் வாசிப்புக்கு அடிமையாகி விட்டிருந்தோம். அம்புலிமாமா, கண்ணன், மஞ்சரி, கல்கண்டு போன்ற புத்தகங்கள் கிடைத்தன. வளர்ந்ததும் எங்களுக்குப் பிடித்தமான நூல்களை நாங்களே தெரிவு செய்து வாசித்தோம். இன்று தமிழ் உலகறிந்த ஒரு எழுத்தாளனாக என்னை மாற்றியது வாசிப்பு மூலம் எனக்குக் கிடைத்த அனுபவமும் எனது வாசகர்களும்தான். இம்முறையும் சென்னை புத்தகக் காட்சியில் எனது புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காட்சி, கனடிய எழுத்தாளரான எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. கடைசியாக நடந்த சென்னை புத்தகக் காட்சியில் "என்ன சொல்லப் போகிறாய்?", "சொல்லடி உன் மனம் கல்லோடி?" ஆகிய இரண்டு நாவல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தன.



45வது சென்னை புத்தகக் கண்காட்சி சென்ற பெப்ரவரி மாதம் சென்னையில், நந்தனத்தில் உள்ள வை.எம்.சி.ஏ மைதானத்தில் சிறப்பாக ஆரம்பமானது. இந்தப் புத்தகக் காட்சியை தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் தொடக்கி வைத்தார். அவருடன் சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன், கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் போது மொழி மாற்றம் செய்யப்பட்ட சில நூல்களையும் முதல்வர் வெளியிட்டு வைத்தார். "திசைதோறும் திராவிடம்" என்ற இந்தத் திட்டத்தின் படி தமிழ் மொழியில் இருந்து திராவிட மொழிகளுக்கும், திராவிட மொழிகளில் உள்ள சிறந்த நூல்களை இனம் கண்டு தமிழ் மொழிக்கும் மொழி மாற்றம் செய்து வெளியிடுவதே இதன் முக்கிய நோக்கமாகும். திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற சிறந்த தமிழ் நூல்களும் இத்திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன.



தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள், பதிப்பாளர்கள், மற்றும் எழுத்தாளர்கள், வாசகர்கள் இணைந்து சென்னையில் வருடந்தோறும் புத்தகக் காட்சியை நடத்தி வருகின்றார்கள். முதலாவது புத்தகக் காட்சி 1977 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதல் புத்தகக் காட்சியில் 22 விற்பனைக் கடைகள் மட்டுமே இருந்தன. இந்த வருடம் தை மாதம் நடக்க இருந்த புத்தகக் காட்சி கோவிட்-19 காரணமாகப் பிற்போடப்பட்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 6 ஆம் திகதிவரை நடைபெற்றது. 19 நாட்கள் இந்த நிகழ்வுகள் இடம் பெற்றது. கைக்குழந்தைகளைக் கொண்டு வரவேண்டாம் என்றும், கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. விற்பனை நிலையங்கள் தினமும் காலை 11 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை திறந்து வைக்கப்பட்டிருந்தன. சுமார் 790 அரங்குகளில் 1,000,000 மேற்பட்ட தலைப்புகளைக் கொண்ட புத்தகங்கள் விற்பனைக்கும், காட்சிக்கும் வைக்கப்பட்டிருந்தன. சுமார் 500 பதிப்பகங்கள் இதில் பங்கேற்றன. மாணவர்கள் தமது அடையாள அட்டையைக் காட்டிக் கட்டணமின்றி செல்லக்கூடிய வசதிகளும் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு திறன்வளர் போட்டிகளான பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி போன்றவையும் இடம் பெற்றன. கவிஞர் முத்துலிங்கம் தலைமையில் ஆறு கவிஞர்கள் கலந்து கொண்ட கவியரங்கமும் இடம் பெற்றது. நாஞ்சில் சம்பத், மணிகண்டன், பேராசிரியர் ஞானசம்பந்தன் உட்படப் பல இலக்கிய ஆர்வலர்களின் உரைகளும் இந்த நிகழ்வில் இடம் பெற்றன. சுமார் 12 லட்சத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் புத்தகக் காட்சிக்கு வருகை தந்ததாகத் தெரிகின்றது. இதில் ஆன்லைன் மூலம் 20,000 மேற்பட்ட அனுமதிச் சீட்டுக்கள் இம்முறை விற்பனை செய்யப்பட்டன.

# தமிழ்த்திரையுலகில் அடுத்தடுத்து குடும்பப் பிரிவுகள்: எதிர்பாராத அதிர்ச்சிகள்



ஒரு காலத்தில் தமிழ் சினிமாவின் "காதல் கிசுகிசுக்கள்" தான் ரசிகர்கள் அதிகம் விரும்பிப் படிக்கும் விஷயமாக இருந்தது. கிசுகிசு பாணியில் எழுதப்படும் செய்திகளை, யாராக இருக்கும் என தங்கள் நண்பர்களுக்குள் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். ஆனால், இப்போதெல்லாம் "காதல் கிசுசுக்கள்" வருவதை விட "திருமணப் பிரிவுகள்" தான் அதிகம் வருகிறன.

தமிழ் சினிமாவில் அடுத்தடுத்த மூன்று பிரிவுகள் திரையுலகினரை-யும், ரசிகர்களையும் எதிர்பாராத அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. சமந்தா - நாகசைதன்யா, தனுஷ் - ஐஸ்வர்யா ஆகியோரது பிரிவு அறிவிப்புக்குப் பிறகு இப்போது இயக்குனர் பாலா - முத்துமலர் பிரிவு பற்றிய தகவல் வெளியாகி உள்ளது. முந்தைய இரு ஜோடிகளும் தங்களது திருமண வாழ்க்கை பிரிவை சமூக வலைத்தளங்களில் வெளிப்படையாக ஒரே சமயத்தில் அறிவித்தார்கள். ஆனால், இயக்குனர் பாலாவின் பிரிவு பற்றிய தகவல் செய்தியாக மட்டுமே வெளிவந்தது. அவரது தரப்பில் இருந்து எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை.

பாலா தற்போது சூர்யா நாயகனாக நடிக்க உள்ள படத்தின் வேலைகளில் தீவிரமாக இறங்கி உள்ளார். விரைவில் இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

# இரண்டாவது திருமணம் செய்து கொள்ள இசையமைப்பாளர் இமான் முடிவு



இசையமைப்பாளர் டி.இமான் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளாராம். அவர் யாரை திருமணம் செய்து கொள்ள போகிறார், எப்போது திருமணம் என்ற தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளன.

தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளர்களில் ஒருவர் டி.இமான். இவர் தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, மலையாளம், இந்தி என பல மொழி படங்களுக்கும் இசையமைத்து வருகிறார். தமிழில் உடன் பிறப்பே, அண்ணாத்த படங்களைத் தொடர்ந்து சூர்யாவின் எதற்கும் துணிந்தவன் படத்திற்கு இசையமைத்து முடித்துள்ளார். இதைத் தொடர்ந்து கேப்டன், யுத்த சத்தம், பொய்க்கால் குதிரை, மை டியர் பூதம், பப்ளிக் ஆகிய படங்களுக்கு ஒரே நேரத்தில் இசையமைத்து வருகிறார். தான் இசையமைத்த பல பாடல்களை இவரே பாடி உள்ளார். கடைசியாக அஜித்தின் விஸ்வாசம் படத்தில் ஹிட் பாடலான அடிச்சுதூக்கு பாடலை பாடினார்.

டி.இமான், 2008ம் ஆண்டு கம்ப்யூட்டர் இன்ஜினியரான மோனிகா என்பவரை 2008ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு வெரோனிகா டோரத்தி இமான், பிலேசியா காத்தி இமான் என்ற இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் இவர்கள் விவாகரத்து பெற்றனர். இந்த தகவலை இமான் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சோஷியல் மீடியாவில் அறிவித்தார். இருவரும் மனம் ஒத்து பிரிவதாக முடிவெடுத்து, சட்டப்படி விவாகரத்து பெற்றதாக இமான் குறிப்பிட்டிருந்தார். தங்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தங்களை அடுத்த கட்டத்திற்கு முன்னேற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இமான் கேட்டுக் கொண்டார். தன்னை புரிந்து கொண்ட அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிலையில் தற்போதைய தகவலின்படி, இமான் தற்போது இரண்டாவது திருமணம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறாராம். சென்னையை சேர்ந்த உமா என்பவரை தான் இமான் திருமணம் செய்து கொள்ள போகிறாராம். இது வீட்டில் பார்த்து நடத்தி வைக்கப்படும் திருமணமாம். இவர்களின் திருமணம் மே மாதம் நடைபெறலாம் என கூறப்படுகிறது. இமான் மற்றும் உமா குடும்பத்தை சேர்ந்தோர் கலந்து பேசிய பிறகு, இது பற்றி முடிவு செய்ய போகிறார்களாம். விரைவில் இமான் இது பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அன்பின் தொனி - 645

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் -** Be Holy

**பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்**

இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறான். அவனுக்குள் வாசம் செய்யும் ஆவியானவர், அவனுக்கும் அவன் மூலமாகவும் பின் குறிப்பிட்டுள்ள பல வகையான கிரியைகளை நடப்பிற்கிறார்.

**8. ஆவியானவரின் வரங்களை தெரிவிக்கிறார்**

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்க தரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. **- 1 கொரிந்தியர் 12: 7-10**

**9. இயேசுவுக்கு சாட்சி பகருகிறார்**

நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந் திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தி னாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம், தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள்.
**- அப்போஸஸதலர் 5: 30-32**

**10. தேவ வார்த்தையைப் புரிய வைக்கிறார்**

எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.
**- 1 கொரிந்தியர் 2: 9-10**

**11. தேவனை ஆராதிக்க ஆவியை நிறைக்கிறார்**

ஆவியினாலே நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸதுவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,.. **- எபேசியர் 5: 18-20**

**12. ஆண்டவராகிய இயேசுவை மகிமைப்படுத்துகிறார்**

சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள், அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். **- யோவான் 16: 13-15**

**பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெறுவது எப்படி?**

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் சில தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதை தேவன் எம்மிடம் எதிர்பார்க்கிறார். அத்தேவைகளைக் குறித்த விபரங்கள் அடங்கிய வேத வசனங்களை பரிசுத்த வேதாகமத்திலிருந்து கவனித்துக் கற்றுக்கொள்வோம்.

இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொ ருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். **- அப்போஸ்தலர் 2: 37-38**

**1. மனந்திரும்ப வேண்டும்**

மேலே காணப்படும் வேத வசனப்படி பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்னும் வாக்குத்தத்தம் எமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு அதைப் பெறுவதற்கு மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்ற நிபந்தனை துலக்கமாக கூறப்பட்டுள்ளது. மனந்திரும்புதல் என்பது பாவத்திலும் அக்கிரமத்திலும் வாழ்பவர்கள் எந்தவித நிபந்தனையுமின்றி தம்மை கடவுளுடைய முழு கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பதாகும். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.
**- அப்போஸ்தலர் 2: 38**

**2. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்**

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல் என்பது தேவ நீதிக்கு அமைய கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுத லோடு சம்பத்தப்பட்ட தனிப்பட்ட அனுபவமாக, முழுக்கு ஞானஸநானம் பெறுவதாகும். அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத் தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது, தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. **- மத்தேயு 3: 13-17**

தொடரும்...

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஐஸ்வர்யா ரஜினிகாந்த்



காய்ச்சல் காரனமாக ஐஸ்வர்யா ரஜினிகாந்த் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முசாபிர் என்ற இசை ஆல்பத்தின் படப்படிப்புக்காக ஹைதராபாத் சென்றிருந்த ஐஸ்வர்யா ரஜினிகாந்திற்கு கடந்த மாதம் கொ-ரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. சிகிச்சைக்காக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பின்னர் அதிலிருந்து குணமடைந்து வீடு திரும்பினார். பின்னர் வீட்டில் சில நாட்கள் ஓய்வெடுத்த பிறகு, மீண்டும் தனது முசாபிர் ஆல்பம் தொடர்பான பணிகளை தொடங்கினார்.

இந்நிலையில் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் “காய்ச்சல், தலைசுற்றல் காரணமாக மீண்டும் மருத்துவமனை அனுபவத்தை பெற்றுள்ளேன். ஆனால் ஊக்கமளிக்கும், உத்வேகம் அளிக்கும் மருத்துவர் உங்களை சந்தித்தால், மருத்துவமனை அனுபவம் மோசமாக இருக்காது. உங்களை சந்தித்தன் மூலம் மகளிர் தினம் நன்றாக தொடங்கி உள்ளது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் தனுஷ், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யாவை கடந்த 2004 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு யாத்ரா, லிங்கா என 2 மகன்கள் உள்ளனர். இந்த சூழலில் நடிகர் தனுஷ் மற்றும் அவரது மனைவி ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இருவரும் பரஸ்பர புரிதலுடன் பிரியப் போவதாக சமீபத்தில் அறிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடந்தவையும் கடப்பவையும் (25)

- உமா மோகன் -

எத்தனை அழிவுகள் செய்தாலும் மக்கள்
தத்தமது வேலைகளை விடவில்லை - சொல்லியது

சுன்னாகப் பாதை வழிச் சுறுசுறுப்பு - அடுத்து
மல்லாகப் பாதை வழிப் போகும்போது - அங்கும்

ஆங்காங்கே அவர்களும் தான் நிற்கின்றார்கள் - மக்கள்
தேங்காத சிறு தெருக்கள் அமைதியாய்.

கூடுமாம் பெரும் கூட்டம் மல்லாகத்தில் - யானை
வடம் பிடித்துத் தேரினை இழுக்கும் போது - மக்கள்

சேர்ந்தும் தாம் இழுப்பாராம், உண்மையாம் - தாம்
பார்த்ததையும் சொல்லுகிறார் நல்ல தமிழ்

வளம் மிகுந்த பரம்பரையில் வந்த
நம. சிவப்பிரகாசப் புலவர் அவர்

தான் வாழ்ந்த காலத்து மல்லாகத்தை
‘பன்மணிமாலை’ எனும் பல்வகைப்

பாக்களின் கோர்வையிலே மிக நல்லாகக் கூறுகிறார் - அதில்
அக்கால மக்களின் பக்திச் சிறப்பும் நன்றாகப்
புரிகிறது,

பழம்பதிப்பிள்ளையார் தான் பாட்டுடைத் தலைவன் - அந்த
வேழத்தின் செயலோ அதைவிடச் சிறப்பு

சைவ ஆலய அழிப்பு வேலையிலே போத்துக்கேயர் - தம்
கைவரிசையைக் காட்ட அங்கும் வரவே - அங்கு

பார்த்திருந்த யானை அவர்களைத் துரத்திடவே
போத்துக்கேயர் போனபோக்கு ஒரே போக்காம்

மல்லையிலே வீற்றிருந்து நல்லருளை
நல்லும் அந்த விநாயகனுக்கு இளையவனின்

சிறப்பினையும் மறக்காது பாடியுள்ள புலவரவர்
திறம்படத்தான் சொல்லுகிறார் மல்லாகத்தை

அவ்வூர்,

நல்ல மண் வளமும் நல்லின நெல்லினமும்
கொல்லையிலே கதலி வாழைகளும்

இன்சுவை தரும் மா பலா என்பனவும்
நற்கரும்பொடு செவ்விளநீரும் தந்திடுமாம்

தான் பிறந்த மல்லாகம் - ஆனால்

அன்று நாம் போனபாதையிலே செழிப்பேதும் தெரியவில்லை
நின்று பார்ப்பதற்கும் நிலைமை அது சரியில்லை

தொடருகிறோம்........

(தொடரும்)

ஐந்துமணி நேரம் நடைபெற்ற அகவை நாள் விழா

# இலண்டன் டாக்டர் நவரட்ணம் 84வது பிறந்தநாள் விழா



ஈழத்தின் விழிசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இலண்டனில் வசித்து வருபவருமான மருத்துவக் கலாநி-தி நவரட்ணத்தின் 84வது அகவை நாள் விழா சென்ற வியாழக்கிழமை இணையத்தில் நடைபெற்றது. ஐந்து மணிநேரம் தொடர்ந்து நடைபெற்ற இந்த விழாவில் உலகெங்கிலும் உள்ள தமிழ் அறிஞர்களும், பெரியோர்களும் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்ந்தனர்.

யாழ்ப்பாணப் பகுதியில், விழிசிட்டி என்னும் சிறு கிராமத்தில் பிறந்து, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பயின்று, மருத்துவப் பட்டத்தையும் சர்வகலாசாலையில் பெற்றவர். மருத்துவ மேற்படிப்பிற்காக 1968ம் ஆண்டு இலண்டன் சென்ற இவர், அங்கேயே தனது மருத்துவப் பணியைத் தொடங்கினார். மொழி, சமயம், சமூகம், கல்வி ஆகிய பல்வேறு துறைகளில் அவர் ஆற்றிய அரும் பணிகள் அவரை ஒரு அறப்பணிச் செம்மலாக உயர்த்தியது. கீரிமலை நகுலேஸ்வரத் திருக்கோயில் திருப்பணிகளுக்கும், குடமுழுக்கு விழாவிற்கும் அவர் ஆற்றிய பெரும் தொண்டு அகிலம் அறிந்தது. தமிழ் மக்களின் அரசி-யல், மனித உரிமை, வாழ்வாதார பிரச்சனைகளுக்காகத் தொடங்கப்பட்ட ஸ்கொட் நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றி, தமிழ்நாட்டின் பிரபல இசைக் கலைஞர்களைக் கொண்டு நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகளை நிறைய நடத்தி, பல அறப்பணிகள் தொடர்ந்து நடைபெற உதவ-ியவர். 1983ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் போது, தமிழ் மக்கள் நலம் காக்க, இந்தியாவின் பிரதமர் திருமதி. இந்திராகாந்தியிடம் குழு பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்தவர். எனவே அவரது 84வது பிறந்தநாள் விழாவை உலகளாவிய விழாவாக கொண்டாட இலண்டன் லூசியம் சிவன் மக-ளிர் மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

ஆலய வழிபாட்டு நிகழ்வுகளின் காணொளியோடு தொடங்கிய இந்த விழாவில் இலண்டன் திருமதி. ரஷாந்தினி சிவநேசன் வரவேற்புரையைத் தொடர்ந்து, இலங்கையின் மூத்த குருக்களான கீரிமலை நகுலேஸ்வர குருக்கள், தேவ லோகேஸ்வர குருக்கள், வைத்தீஸ்வர குருக்கள் ஆகிய ஆச்சாரியப் பெருமக்கள் கலந்து கொண்டு ஆசியுரைகள் வழங்கினர். தொடர்ந்து கனடா திரு. கதிர் துரைசிங்கம், ஆஸ்திரேலியா மருத்துவக் கலாநிதி திரு. மனோமோகன், இலண்டன் மருத்துவக் கலாநிதி திரு. சபாரத்தினம் அருள்குமரன், இந்தியாவிலிருந்து இசை வித்தகி திருமதி. பூசணி கல்யாணராமன், முனைவர் திரு. சங்கரநாராயணன், இலங்கையிலிருந்து விடைகொடிச் செல்வர் திரு. சின்னத்துரை தனபாலா, திரு. சூரியசேகரன், திரு. மணிசேகரன், திரு. தயாளன், திரு. பொன் பாலசுந்தரம், திரு. மகாலிங்க சிவம், திரு. சிவா பிள்ளை, திரு. ரபி விஸ்வலிங்கம், திரு. நடராஜா சச்சிதானந்தம், டாக்டர் திரு. நித்தியானந்தம், திரு. போஸ், திரு. ஜெயபாலன், திருமதி. அருளாம்பிகை, திரு. அருள்தாஸ், திரு. கணேசமூர்த்தி உள்ளிட்ட பல நாட்டு அறிஞர்களும் பங்கு கொண்டு டாக்டர் நவரத்தினத்தின் சேவைகள் குறித்து வாழ்த்துரைகளும், பாராட்டுரைகளும் வழங்கினர்.

டாக்டர் நவரத்தினத்தின் அகவை நாளை ஒட்டி இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நடைபெற்ற சமூக நலப் பணிகள் பற்றிய காணொளிகளும் திரையிடப்பட்டன.

இந்த இனிய, இணைய விழாவுக்கான ஒருங்கிணைப்புப் பணிகளை தமிழ்நாடு சேலத்திலிருந்து முனைவர் திரு. வே. சங்கரநாராயணன் மற்றும் இலண்டன் திருமதி. ரஷாந்தினி சிவநேசனும் சிறப்புடன் செய்திருந்தனர்.




(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 47)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

அதற்கு குந்தவை 'தாங்கள் என்ன குற்றம் செய்தீர்கள்' என்று கேட்க 'உன் தந்தை யுவராஜ பட்டம் பெற்ற பின் என்னை மந்தாகினியைத் தேடும்படி சொன்னார் நானும் கோடிக் கரை சென்றேன் அப்பொழுது அவள் இறந்து விட்டாள் என்றனர். ஆனால் அவளை கடலில் இருந்து காப்பாற்றி கரையேற்றினான் ஒரு ஓடக்காரன். அவனிடம் பணம் கொடுத்து அவளை இலங்கைத் தீவிற்கு அனுப்பி அங்கேயே இருக்கும் படி கூறினேன: பின்னர் சக்கரவர்த்திக்கு நன்மை செய்வதாக எண்ணி அவள் கடலில் விழுந்து இறந்துவிட்டதாக பொய் சொன்னேன். ஒரு நாள் அவர் பழையாறையில் ஈசான பட்டர் இவள் மகளோடு பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு வியந்து அவரிடம் வினாவினேன். அவர் சொன்ன செய்தி என்னை வியக்க வைத்தது அந்த ஊமைப் பெண் பெரிய பிராட்டியின் அரண்மனைத் தோட்டத்தில் வந்து சில காலம் தங்கியிருந்தாளாம் பின்னர் இரட்டைக் குழந்தைகளைப் பெற்று அங்கேயே விட்டு விட்டு ஓடிவிட்டாளாம். தன் குழந்தைகளைப் பார்ப்பதற்காக எப்பொழுதாவது வருவாளாம். மறைந்திருந்து பார்த்து விட்டு போவாளாம். அந்தக் குழந்தைகள் யார் என்று கேட்டேன் செம்பியன் மாதேவிக்கு மட்டும் தெரிந்த உண்மை அது என்றார். சிறுவயதில் அருள்மொழி நதியில் விழுந்த போது காப்பாற்றியது அந்த ஊமை அம்மாள்தான் என்று ஊகிக்கிறேன்' என்றார் அநிருத்தர். அதற்கு குந்தவை 'அது சரியானதுதான் அருள்மொழியும் அதைத் தான் சொன்னான். அந்த அம்மாள் சொன்னதாகச் சொன்னான். என் தந்தையை நேற்று இரவு என்னால் தேற்ற முடியவில்லை அதனால் அருள்மொழி நாகபட்டினத்தில் சூடாமணி விகாரத்தில் இருப்பதாக சொன்னேன். அவர் அருள்மொழியை உடனே பார்க்க வேண்டும் என்றும், அவனை அந்தப் பாதகி ஊமைப் பெண் கொன்று விடுவாள் என்றும், ஆதித்தகரிகாலனையும் கொன்று விடுவாள் என்றும், அவளைத் தடுத்து என் மகன்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் கத்தினார். பின்னர் படுக்கையில் சாய்ந்தார்' என்று கண்ணீர் மல்கக் கூறினாள் குந்தவை. இதைக் கேட்ட அநிருத்தரும் வானதியும் கண்ணீர் விட்டனர். குந்தவையும் முதல் மந்திரியும் மந்தாகினி தேவியை சக்கரவர்த்தியிடம் அழைத்துச் சென்று அவர் உயிரோடு இருக்கிறாள் என்று தெரிவித்துவிட வேண்டும் என்ற தீர்மானம் கொண்டனர். அத்துடன் பூங்குழலியை நாகபட்டினம் அனுப்புவதாக குந்தவை அநிருத்தரிடம் கூறினாள். அத்துடன் இவள் தான் இளவரசனை கடலில் மூழ்கிப் போகாமல் காப்பாற்றினாள் என்றும் தெவிரித்தாள். மேலும் அருள்மொழியை தஞ்சை அழைத்து வரவும் எண்ணியிருக்கிறேன் என்றாள். அதற்கு முதல் மந்திரி 'அருள்மொழி தஞ்சை வந்து சக்கரவர்த்தியைப் பார்ப்பது நன்று ஆனால் இந்த சோழ சிம்மாசனம் யாருக்கு என்று நிச்சயம் செய்யும் வரை அருள்மொழிவர்மன் மக்கள் கண்களில் படாது இருக்கட்டும் அப்படி அவன் பகிரங்கமாக வந்தால் இந்த நாட்டு மக்கள் அவரை முடி சூடும் படி வற்புறுத்துவார்கள். அவரை ஈழநாட்டுக்கு திருப்பி அனுப்பி வைப்பதே நன்று மதுராந்தகருக்கு முடி சூடுவது பற்றி சக்கரவர்த்தி தீர்மானித்து இருக்கிறார். என் விருப்பமும் அதுவே நீயும் அப்படித்தான் நினைக்கின்றாய் அருள்மொழியும் இராச்சியம் ஆள்வதில் ஆசை இல்லை ஆனால் இந்த நாட்டு மக்கள் அவரில் எத்தனை பிரியம் வைத்துள்ளனர்' என்றார்.

அப்பொழுது குந்தவை 'ஆதித்தகரிகாலரைப் பற்றி சக்கரவர்த்திக்கு எந்தக் கவலையும் இல்லை அவருக்கு அபாயம் விளைவிக்க கூடியவர்கள் யாருமில்லை இவர் போர்க்களத்தில் பெரிய சூரர் என்று நம்புகிறார்' என்றாள். அதற்கு அநிருத்தர் 'தாயே பழுவேட்டரையரும், பழுவூர் ராணியும் அவர் விரோதிகளாக இருக்கிறார்கள் ஏதோ சூழ்ச்சி செய்கிறார்கள் இந்த செய்தியை என் தூதன் மூலம் அனுப்பி கடம்பூர் போக வேண்டாம் என்று தடுத்தேன் ஆனால் அவர் அங்கு போய் விட்டார் என்ன நடக்குமோ என்று பயப்படுகிறேன்' என்றார். அவ்வேளை பதட்டத்துடன் பூங்குழலி அங்கு வந்தாள் 'ஐயா என் அத்தையை கோட்டை வாசல் வரை அழைத்து வந்தோம் என் அத்தை மந்தாகினிக்கு சக்கரவர்த்தியின் மூச்சு உலகை விட்டு போகும் முன் அவரைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறாள். அவர் உங்களை மறக்கவில்லை என்று கூறி அழைத்து வந்தோம் அப்பொழுது நாம் இரகசியப் பாதையில் போவோம் என்று என்னிடம் கூறினார். நான் அதை அத்தையிடம் கூறுமுன் அவள் சனக் கூட்டத்துடன் சேர்ந்து கோட்டைக்குள் போய்விட்டாள் அங்கு வேளக்கார படைகளிற்கும், பழுவூர் படைகளுக்கும் சச்சரவு வந்தது இந்த சச்சரவில் மந்தாகினி தேவி மறைந்துவிட்டாள். தேடிப் பார்த்தோம் கிடைக்கவில்லை இதை முதல் உங்களிடம் தெரிவிக்க என்னைத் திருமலை அனுப்பினார்' என்றாள். இதைக் கேட்டு குந்தவையும் அநிருத்தரும் கவலை கொண்டனர். 'கோட்டைக்குள் இருப்பதால் அவரைத் தேடிக் கண்டு கொள்ளலாம்' என்றார் அநிருத்தர். ஆழ்வார்க்கடியானும், பூங்குழலியும் மந்தாகினியை அழைத்துக் கொண்டு கோட்டை வாசல் வரை வந்தனர். அந்தச் சனக் கூட்டத்தில் பாண்டிய நாட்டு சதிகாரர் ரவிதாசன் சோமன் சாம்பவன் இருவரும் இருப்பதை மந்தாகினி கண்டாள். ஈழத்திலும் இவர்கள் இருந்ததைக் கண்டாள். ஈழத்தில் இவர்கள் அருள்மொழியை கொலை செய்ய பல திட்டங்கள் தீட்டியது அவளுக்குத் தெரியும். இங்கும் இவர்கள் ஏதோ சதி செய்ய வருகிறார்கள் என்று தெரிந்து கொண்டு, அவர்களைப் பின் தொடர்ந்தாள். அவர்கள் வேகமாக சந்து பொந்துகளில் புகுந்து சென்றார்கள். மந்தாகினியும் அவர்களைத் தொடர்ந்தார். ரவிதாசன் பழுவேட்டரையர் அரண்மனையை அடைந்து ஆந்தை குரல் போல் குரல் எழுப்பினான: அப்பொழுது அரண்மனைத் தாதிப் பெண் ஒருத்தி அங்கு வந்தாள் அவளிடம் நிலவறைச் சாவியும் விளக்கும் கொஞ்சம் உணவும் கொடு எனக்கு பசிக்கிறது என்றான். அந்த தாதிப் பெண் 'பழுவூர் ராணி இங்கு இல்லை சின்னப் பழுவேட்டரையர் சந்தேகம் கொண்டுள்ளார் நீ போய் விடு' என்றாள். அதற்கு அவளைப் பயமுறுத்தினான் அவளும் பயத்தில் சாவியையும், விளக்கையும், உணவையும் கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்ட சோமன் சாம்பவன் ரவிதாசனை அழைத்துக் கொண்டு போனான். நிலவறைக் கதவை திறந்து உள்ளே போனார்கள். மந்தாகினியும் மெல்ல மெல்ல அவர்களைத் தொடர்ந்தார். அங்கு ஒரே இருட்டு அவ்வேளை யாரோ இங்கு இருப்பது போல் சோம்பனுக்குத் தோன்றியது அதைப் பற்றி மந்திரவாதி ரவிதாசனிடம் கேட்டான் அதற்கு 'அப்படி ஒன்றும் இல்லை பழுவேட்டரையர் யாரையும் கொடிய தண்டனைக்கு உள்ளாக்கினால் இந்த நிலவறையில் தான் விடுவார் அவர்கள் யாரும் இங்கிருந்து மீண்டதில்லை இங்கே செத்து போவார்கள் அவர்கள் ஆவி இங்கு சுற்றறியிருக்கும். ஆனால் வந்தியத்தேவன் மட்டும் இங்கிருந்து தப்பினான் அவனை கொன்றே ஆக வேண்டும். ஆனால் எங்கள் ராணி அவனை ஏனோ விட்டு வைக்கிறார் தெரியவில்லை' என்றான். மேலும் அந்த நிலவறையில் ஒரு யன்னல் பக்கம் சோம்பன் சாம்பவனைக் கூட்டிச் சென்று 'இதோ பார் இந்தப் பலகணி வழியாகப் பார் சுந்தர சோழர் படுத்திருக்கும் அறை தெரிகிறது இங்கிருந்து சன நடமாட்டத்தைக் கவனித்துக் கொள் நீ மூன்று நாள் இங்கேயே இருக்க வேண்டும். சுந்தர சோழர் பட்டமகிஷி எப்பொழுதும் அவர் அருகில் இருப்பாள். அவள் வெள்ளிக்கிழமை இரவு துர்க்கை அம்மன் கோயில் செல்வாள். அந்த இரவுதான் உன் காரியத்தை முடிக்க வேண்டும் இவர்கள் குலம் அழியும் நாளும் அதுதான்' என்றான். இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார் மந்தாகினி இவர்கள் சதி என்ன என்று பார்க்க தானும் அந்த பல-கணி ஊடாகப் பார்த்தாள். தன் இதயத்தில் வீற்றிருக்கும் இனியவர் அங்கு இருப்பதைக் கண்டாள். தான் பூதத் தீவில் வாழ்ந்த நாட்களை நினைவுபடுத்திக் கொண்டதும் கவலையுடன், இது என்ன கோலம்? முகத்தில் தாடியும் மீசையும் வளர்ந்து கன்னங்கள் ஒட்டி இருந்தது. என் பேரழகனை இந்த கோலத்தில் பார்ப்பதா? என்று மனமுருகினாள். இவருக்கு ஆபத்து விளைவிக்க திட்டம் தீட்டும் இருவரையும் கூர்ந்து பார்த்தாள். தான் பூதத்தீவில் வாழ்ந்த போது என் உள்ளத்தையும் உயிரையும் கொள்ளை கொண்ட மனிதர் அற்புதமான எங்கள் வாழ்க்கையைப் பிரித்து கப்பலில் வந்தவர்கள் அழைத்துச் சென்றார்கள். அவர் மணி மகுடத்துடன் நின்றதைப் பார்த்தேன் வெள்ளைப் புரவி பூட்டிய தங்க ரதத்தில் பார்த்தேன். காவேரி நதியில் உல்லாச படகுகளில் பார்த்தேன் ஏன் இப்பொழுது இந்த கோலம் என்று மனம் தளர்ந்தாள். சின்னப்பழுவேட்டரையர் காலாந்தக கண்டர் எனப்படும் தஞ்சைக் கோட்டை காவலர் சக்கரவர்த்தியிடம் வந்தார். முதல் மந்திரி அநிருத்தர் மீது பல குற்றச்சாட்டுகளை வைத்தார். முக்கியமாக பாதுகாப்புப் பற்றி சொன்னார். கோடிக் கரையில் இருந்து பலவந்தமாக ஒரு பெண்ணை இங்கு அழைத்து வந்துள்ளார்கள். அரண்மனைக்கு யாரோ ஒரு மந்திரவாதி பளுவூர் இளைய ராணியைக் காண வருகிறார் என்று பல குற்றங்களை சுமத்தி விட்டுச் சென்றார். இதனால் சக்கரவர்த்தி முதல் மந்திரியை அழைத்தார் முதல் மந்திரி மாலைப் பொழுதே அங்கு வந்தார்.




அப்பொழுது வானதியும் குந்தவையும் அங்கு இருந்தார்கள: பூங்குழலியையும், ஆழ்வார்க்கடியானையும் பக்கத்து அறையில் இருக்குமாறு விட்டுவிட்டு சக்கரவர்த்தியை பார்க்கச் சென்றார் அநிருத்தர். சக்கரவர்த்திக்கும் அவர் மனைவிக்கும் மரியாதை செலுத்திய பின் புயலினால் ஏற்பட்ட சேதாரங்களையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க ஏற்பாடு செய்ததைப் பற்றிய விபரங்களையும் சொன்னார். அதைக் கேட்டு சக்கரவர்த்தி திருப்தி கொண்டார். சக்கரவர்த்தி முதல் மந்திரியிடம் 'நான் நோயுற்று இருப்பதால் எவரும் எனக்கு செய்தி சொல்வதில்லை ந ீரும் அவ்வாறே செய்கிறீர்' என்றார். அதற்கு முதல் மந்திரி 'அரசே தங்கள் நட்புக்கும் நலனிற்கும் நான் எந்த தீங்கும் செய்யவில்லை இனிமேலும் செய்யமாட்டேன் சில விடயங்களை தங்களின் நலம் கருதி மறைத்தது உண்டு. இளவரசர் சிறுகாலம் இலங்கையில் இருக்குமாறு சொன்னேன் ஆனால் பழுவேட்டரையர் அவரை சிறை செய்ய கப்பல் அனுப்பினார். அதற்கு தாங்கள் சம்மதம் கொடுத்தீர்கள் இந்த செய்தி நாடெங்கும் பரவி சனங்கள் பழுவேட்டரையர் மீது கோபமாக இருக்கிறார்கள். இளவரசரை ஏற்றி வந்த கப்பல் வேண்டுமென்றே கடலில் மூழ்கடித்து விட்டதாக கூறுகிறார்கள்' என்றார் அநிருத்தர். அதற்கு சக்கரவர்த்தி 'இது பொய் பாத்திபேந்திரன் சொன்னான் தன் கப்பலில் தான் இளவரசர் வந்தார் என்றும், தன் நண்பனைக் காப்பாற்ற கடலில் குதித்தார் என்றும் இந்த சூழ்ச்சியில் குந்தவையும் சம்பந்தப்பட்டிருக்கிறாள' என்று நினைக்கையில் பெரிய கவலையாக இருக்கிறது' என்றார். அநிருத்தர் 'குந்தவை உங்களுக்கு எதிராக சதி செய்வதாக உலகமே சொன்னாலும் நாம் நம்பக்கூடாது இளவரசரை கடலில் இருந்து காப்பாற்றி கரை சேர்த்த பெண் ஒருத்தி இருக்கிறாள் அவளை அழைத்து வரட்டுமா' என்று கேட்டார் சக்கரவர்த்தியும் சம்மதிக்க பூங்குழலியும், ஆழ்வார்க்கடியானும் அங்கு வந்தனர். பூங்குழலியும் சுந்தர சோழரை பேரழகன் என்று கேள்விப்பட்டிருக்கிறாள். இப்பொழுது அவர் கோலத்தைக் கண்டு அவரிடம் தன் அத்தைக்காக சண்டை செய்யும் எண்ணமே போய்விட்டது அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது சக்கரவர்த்தி 'பெண்ணே நீ இளவரசரை கடலில் இருந்து காப்பாற்றினாயா?' என்று கேட்க அவளும் 'ஆமாம்' என்று நடந்தவற்றைக் கூறினாள். அதைக் கேட்ட சக்கரவர்த்தியும் 'பெண்ணே நீ சோழ குலத்திற்கு இணையில்லா உதவி செய்திருக்கிறாய். அதற்கு ஈடாக உனக்கு செய்யக் கூடியது ஒன்றும் இல்லை இவரைக் காப்பாற்றி ஏன் நாகபட்டினம் அழைத்துப் போனாய் கோடிக்கரையில் பழுவேட்டரையர் இருந்தாரே ஏன் அவரிடம் ஒப்படைக்கவில்லை' என்று கேட்க 'இளவரசர் கடும் சுரத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார் நாகபட்டின புத்த விகாரையில் நல்ல வைத்தியர்கள் இருந்தனர். மற்றும் பழுவேட்டரையர் இளவரசருக்கு விரோதி என்று நாடெங்கும் அறியப்பட்டு இருக்கிறது' என்றாள் பூங்குழலி. பின்னர் முதல் மந்திரியைப பார்த்து 'இளவரசரை அழைத்து வர ஏற்பாடு செய்தீரா' என்று கேட்க அவரும் 'நான் என் சீடன் ஆழ்வார்க்கடியானை அனுப்புகிறேன்' என்றார். அப்பொழுது மகாராணி உள்ளே வந்தார். 'இன்றைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள் சக்ரவர்த்திக்கு அதிக களைப்பு வேண்டாம் இந்தப் பெண் அழகாகப் பாடுவாளாமே அவளின் பாடல்கள் கேட்போமா? அத்துடன் திருமலையின் ஆழ்வார் பாசுரங்களையும் கேட்போம்' என்றதும் இருவரும் இனிமையாகப் பாடினார்கள். அப்பாடலைக் கேட்ட சக்கரவர்த்தி அமைதியாகத் தூங்கினார். எல்லோரும் சக்கரவர்த்தியின் அறையில் இருந்து அமைதியாக வெளியேறினர். நற் தூக்கம் கொண்ட சக்கரவர்த்தியின் தூக்கம் திடீர் என்று கலைந்தது. தன் தலைமாட்டின் வெகு சமிபத்தில் ஒரு உருவம் வந்து நிற்பதை உணர்ந்தார். திகில் கொண்டு உடல் நடுங்கியது 'யார் அங்கே எல்லோரும் எங்கே போனீர்கள்?' என்று கூச்சலிட்டார். அந்த ஊமைப் பேய் தான் என் உயிரை எடுக்க வந்திருக்கிறதா? நானா உன்னை கடலில் வீழ்ந்து உயிரை மாய்க்கச் சொன்னேன் நீயாக அதை செய்து விட்டு ஏன் என்னை பழிவாங்குகிறாய்? என்றபடி பக்கத்தில் இருந்த பஞ்ச உலோகங்களால் ஆன அகல் விளக்கு ஒன்றை எடுத்து மந்தாகினியை நோக்கி எறிந்தார். அப்பொழுது அவள் முகத்தில் வேதனை தோன்றியது அதைப் பார்த்து 'நீ யார் மந்தாகினியா நீ சாகவில்லையா! நில் நில் போகாதே உண்மையைச் சொல்லிவிட்டுப் போ' என்று பெரும் கூச்சலிட்டார் சக்கரவர்த்தி. அப்பொழுது தட தடவென பலர் அங்கு வந்தனர். அந்த அறைக்குள் மலையமான் மகள் வானமாதேவி, குந்தவை, முதல் மந்திரி, பூங்குழலி, ஆழ்வார்க்கடியான், வானதி எல்லோரும் சூழ்ந்து நின்று நடந்ததைப் பார்த்து ஸ்தம்பித்து நின்றனர். பூங்குழலி ஒரே பாய்ச்சலாகச் சென்று தன் அத்தை தோள்களைப் பற்றிக் கொண்டாள். ஆழ்வார்க்கடியான் கதவுகளைச் சாத்தினான். 'தந்தையே பேயுமல்ல ஆவியுமல்ல அவர் உயிரோடு இருக்கிறார் முதல் மந்திரியைக் கேளுங்கள் எல்லாம் சொல்லுவார்' என்றாள் குந்தவை. பின்னர் மந்தாகினியின் அருகில் சென்ற குந்தவையைக் கண்ட சக்கரவர்த்தி அவளைத் தடுத்தார். வானமாதேவி சக்கரவர்த்தியின் தோள்களைப் பற்றிக் கொண்டார். 'அருள்மொழியைக் காப்பாற்றியது மட்டுமல்ல தாங்கள் காட்டுக் கரடிக்கு இரையாகாமல் பூதத்தீவில் காப்பாற்றியவரும் இவரே! இவரை ஈழத்தீவில் இருந்து அழைத்து வர நான் தான் முதல் மந்திரியிடம் சொன்னேன்' என்றார் சக்கரவர்த்தினி. 'இது என்ன இவள் இறந்து விட்டாள் என் கனவிலும் நினைவிலும் ஆவியாக வந்து தொல்லை கொடுப்பவள் இவள், ஏன் என்னைப் பைத்தியக்காரன் ஆக்குகிறீர்கள்' என்றார் சக்கரவர்த்தி.

(தொடரும்...)

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---

# இவ்வார ராசிபலன்

## 11-03-2022 வெள்ளி தொடக்கம் 17-03-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும் வாரம். தனவரவு பெருகும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்த காரியம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். சோதனைகள் நீங்கும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. பொறுமையை கையாள வேண்டும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசுவழி ஆதாயம் உண்டு. மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோசம் பெருகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் கூடும். முடிவுகள் சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**ரிஷபம்:** பெற்றோர்களால் பாராட்டு பெறும் வாரம். வெகுமதி கூடும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. மனநிம்மதி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். எளிமையை விரும்புவீர்கள். வேலை பளு அதிகரிக்கும். புகழ் கூடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். தொல்லைகள் அகலும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. தொழிலில் போட்டிகள் மறையும். மனை வாங்கும் யோகம் உண்டு. ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றி மறையும். ஆயுள்விருத்தி அதிகரிக்கும். அன்பினால் எதையும் வெல்வீர். விருந்தினர் வருகை உண்டு. மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. வீண் பழி அகலும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். சேய் நலம் கூடும். சண்டைகள் முற்றிலும் அகன்று விடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வன தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P




**மிதுனம்:** உதவிகள் கிடைக்கும் வாரம். குதூகலம் அதிகமாகும். குழப்பங்கள் அகன்று போகும். செலவுகள் குறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும். கனவு தொல்லை உண்டு. கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். பழிச்சொல்லில் இருந்து விடுபடுவீர்கள். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். திருப்தி ஏற்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமைக் கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். திருமண முடிவுகள் நல்லதாக அமையும். எதிர்மறை எண்ணம் உருவாகும். நினைத்த காரியங்கள் கைகூடும். மனதில் சஞ்சலம் ஏற்படும். வாகனத்தில் கவனம் தேவை. தொழிலில் லாபம் உண்டு. கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கிவிடும். வாய்ப்புகள் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,5,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K




**கடகம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். காரிய வெற்றி உண்டு. பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் உடல்நலம் கூடும். மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர்மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லைத் தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் கூடும். பெற்றோரின் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணம் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,3,9,5
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G




**சிம்மம்:** புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு உருவாகும் வாரம். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத நன்மை ஏற்படும். பட்டம் பதவி வந்து சேரும். எதார்த்தமாக செயல்படுவீர்கள். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. தொழில் முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். எதிர்ப்புகள் குறையும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**கன்னி:** மங்கையர் சிலர்க்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். எள் தானம் ஏற்றம் தரும். உள்ளம் மகிழும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். சுபச்செய்தி வரும். கன்னிப் பெண்களுக்கு திருமணத் தகவல் வரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பிரார்த்தனையால் பலன் உண்டு. நலம் விளையும் வாரமாகும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,P



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**துலாம்:** பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும் வாரம். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தோற்றப்பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனக்கட்டுப்பாடு அவசியம். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். மனஅமைதி குறையும். பொருளாதார நிலை உயரும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பருப்பு தானம் பாவம் போக்கும். வாழ்த்துச் செய்திகள் வரும். காதலர்கள் தம்பதியாவார்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். கலையில் ஆர்வம் ஏற்படும். குடும்பத்தினரின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,E




**விருச்சிகம்:** தடைகள் விலகும் வாரம். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வீண் பேச்சுக்கள் தவிர்ப்பது நல்லது. சொத்துக்கள் சேரும். தன லாபம் பெருகும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மதிநுட்பம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டுக்கள் கிட்டும். சாதனை புரியும் நாளாக அமையும். சொத்து சேர்க்கையுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,7,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,M




**தனுசு:** தொழில் ஒப்பந்தம் குவியும் வாரம். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப்பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வெகுமதி கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஊக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். இல்லத்தில் ஆனந்தம் குடிக்கொள்ளும். எதிரிகள் விலகி செல்வார்கள். ஏற்றம் தரும் நாளாக அமையும். பிள்ளைகளால் பெருமை சேரும். பயணத்தால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தாய் முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**மகரம்:** இன்னல்கள் அகலும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும் கடன் சுமை குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. எதிலும் கவனம் தேவை. உணவு-பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். திறமைகள் அதிகமாகும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனையின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். உஷ்ணம் அதிகரிக்கும். காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். துன்பங்கள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வசந்தம் தேடி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**கும்பம்:** முன்னேற்றம் தரும் வாரம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மையுண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. எண்ணங்கள் கைகூடும். பொதுப்பிரச்சனைகளில் தலையிடுவது தவிர்க்கவும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். உடல் உ'ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோ'ம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. பொறுமையை கையாள வேண்டும். மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,P




**மீனம்:** வாய்ப்புக்கள் தேடி வரும் வாரம். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். அன்பு அதிகரிக்கும். பழைய கடன் அடையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். ஆசைகள் நிறைவேறும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். பேரியோர்களின் வாழ்த்துக்கள் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேலை வாய்ப்புக் கூடும். பிரார்த்தனைகள் பலன் கொடுக்கும். வியாபாரம் செழிக்கும். மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,A


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கனித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
Call SEYON CHANDRAKUMAR
RE/MAX ROYAL PROPERTIES
BUYING SELLING INVESTING

உதயம் 1353 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 11, 2022

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணத்தில் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அவர்கள் தலைமையில் இயங்கிவரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும் அங்கத்தவர் சங்கர் சிவநாதன் மற்றும் திருமதி பத்மா லோகேந்திரலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அன்றைய தினம் பசுமை அறிவொளி நிகழ்ச்சித்திட்டம் என்னும் அற்புதமான மாணவர் நலன் சார்ந்த திட்டத்தை தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் அறிமுகம் செய்திருந்தனர். *(தொடர்ச்சி உள்ளே 12ம் பக்கத்தில்)*





# உலகத் தமிழ் வம்சாவழி அமைப்பினர் நடத்திய வருடாந்த விருது வழங்கும் விழாவில் ஊடகவியலாளர்களுக்கு கௌரவம்

இன்று மார்ச் மாதம் 11ம் திகதி சென்னை மாநகரில் உலகத் தமிழ் வம்சாவழி அமைப்பினர் நடத்திய வருடாந்த விருது வழங்கும் விழாவில் சாதனைப் பெண்மணிகள் மற்றும் உலகெங்கும் உள்ள ஊடகவியலாளர்கள் சிலர் ஆகியோர்க்கு கௌரவ விருதுகள் வழங்கப்பெற்றன.

இன்று வெள்ளிக்கிழமை சென்னையில் அமைந்துள்ள வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்த விழாவில் விருது பெற்றவர்களுக்கு பட்டி மன்றப் பேச்சாளர் லியோனி மற்றும் விஜ-ரி பல்கலைக் கழக வெந்தர் விசுவநாதன் அவர்கள் மற்றும் உலகத் தமிழ் வம்சாவழி அமைப்பின் நிறுவனர் செல்வகுமார் ஆகியோர் விருதுகளை வழங்கினர்.

இங்கு காண்பபடும் படங்களில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், இலங்கை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்திலவேலவர் அவர்கள் மற்றும் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த விண்வெளிப் பயணம் செய்யவுள்ள முதற் தமிழ்ப் பெண் உதயகீர்த்திகா ஆகியோர் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.

---

*செய்தியும் படங்களும் சங்சர் மற்றும் பிரகாஸ்*







# மறைந்த ஷீலா சுகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு வழங்கப்பெற்ற 5 மில்லியன் ரூபாய்களுக்கான காசோலை




கனடிய வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார் அவர்களின் துணைவியார் மறைந்த ஷீலா சுகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக 5 மில்லியன் ரூபாய்களுக்கான காசோலை யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு வழங்கப்பெற்ற நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாண வைத்தியசாலையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் நந்தகுமார் அவர்களிடம் கையளிக்கப்பெற்ற இந்த காசோலையை அவர் பெற்றுக்கொண்ட போது அங்கு சமூகமளித்தவர்களில் கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர் திரு குலா செல்லத்துரை. டாக்டர் சிவாஜி தம்பதியினர் .சிவசிறி பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் தம்பதியினர் மற்றும் இளங்கோ இரத்தினசபாபதி ஆகியோர் மற்றும் வைத்தியசாலையின் ஏனைய வைத்தியர்கள் தாதிகள் ஆகியோர் இங்கு காணப்படுகின்றனர்.

# யாழ்ப்பாண நகரபிதா மணிவண்ணன் விஸ்வலிங்கம் அவர்களுக்கு கனடிய நகரபிதாக்கள் இருவரின் பாராட்டுப் பத்திரங்கள்



கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மூன்று முக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்த கனடா உதயன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் யாழ்ப்பாண நகரபிதா மணிவண்ணன் விஸ்வலிங்கம் அவர்களுக்கு கனடிய நகரபிதாக்கள் இருவரின் பாராட்டுப் பத்திரங்களையும் கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாராளுமன்றம் சார்பான பாராட்டுப் பத்திரத்தையும் நேரடியாகக் கைளித்து தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார். *(தொடர்ச்சி உள்ளே 11ம் பக்கத்தில்)*

# யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட மாணவருக்கு மடிக்கணனி ஒன்றை அன்பளிப்பச் செய்த கனடா ரொறன்ரோ மனித நேய அமைப்பினர்

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட மாணவரான செல்வன் சிவனேசன் கோபிதனுக்கு அவரது கற்றல் தேவைக்கு பயன்படும் வகையில் மடிக்கணனி ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பிற்கு கிடைத்தது . அந்த வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைக் கழகத்திற்கு நேரடியாகச் சென்ற அமைப்பின் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும் அமைப்பின் அங்கத்தவர் சங்கர் சிவநாதன் ஆகியோர் மடிக்கணனி ஒன்றை அன்பளிப்பச் செய்தனர். இந்த அன்பளிப்பைச் செய்வதற்கு தேவையான நிதியை ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பிற்கு வழங்கியவர்கள் கனடாவின் வீடு விற்பனை முகவர் பாஸ்கரன் சின்னத்துரை மற்றும் சங்கர் அன்கோ உரிமையாளர் ஶ்ரீதரன் ஆகியோர் ஆவார்கள்.

